பக்கங்கள்: முப்பத்துஇரண்டு +II

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 14 புதன்கிழமை (27.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 152


02 வெற்றியை பறித்தது பெங்களூர்


மீண்டும் 03 கலக்கத் தொடங்கிவிட்டோம்


10 தாயாரின் வேண்டுகோள்


16 எல்லாம் ராஜபக்ஷ மயம்


21 விண்ணை வென்ற மண்ணின் மைந்தன்

## குற்றவாளிகளைக் கண்டறிய உறுதியான நடவடிக்கை தேவை



### அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் இலங்கை அரசுக்கு ஆலோசனை

நியூயோர்க், ஏப். 27

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தியுள்ள நிலையில், இலங்கை அரசு அது தொடர்பில் காத்திரமான - உறுதியான - நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் ஹொவேர்ட் பேர்மன்.

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற வெளிவிவகாரக் குழுவின் உயர் நிலை உறுப்பினரான பேர்மன், "மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை வெளிப்படைத் தன்மையான முறையில் பொறுப்புக் கூறச் செய்ய வேண்டியது (29ஆம் பக்கம் பார்க்க)

# போர்க்குற்ற விசாரணைக் குழு அமைக்க அதிகாரம் இல்லை

### அறிக்கையை கவனமாக ஆராய்கிறது இந்தியா

புதுடில்லி,ஏப்.27

இலங்கைப் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கையை கவனமாக ஆராய்ந்து வருவதாக இந்தியா அறிவித்துள்ளது.

அறிக்கை தொடர்பில் இலங்கை அரசு விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்தியா அதனை ஆராய்ந்து வருவதாக வெளிவிவகார (29ஆம் பக்கம் பார்க்க)

### பான் கீ - மூன் அறிவிப்பு அறிக்கை வெளியானது

நியூயோர்க், ஏப்ரல் 27

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, இலங்கையில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் தயாரித்த அறிக்கையை பான் கீ - மூன் நேற்று அதிகாலையில் உத்தியோகபூர்வமாக வெளியிட்டார். எனினும் அதில் சிபாரிசு செய்யப்பட்டுள்ள சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு உத்தரவிடத் தனக்கு அதிகாரம் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (29ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கையைக் காப்பாற்ற இந்தியா உதவவே கூடாது

#### பாரதீய ஜனதாக் கட்சி வலியுறுத்து

புதுடில்லி,ஏப்.27

ஐ.நா. நிபுணர் குழுவின் போர்க்குற்ற அறிக்கையைத் தொடர்ந்து சர்வதேச அரங்கில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இலங்கை அரசை இந்தியா பிணையில் எடுத்து உதவக் கூடாது என்று வலியுறுத்தி உள்ளது எதிர்க் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி.

கட்சியின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் தமிழகக் கிளையின் முன்னாள் தலைவருமான இல. கணேசன் இதனைத் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போர் நடைபெற்ற போது இலங்கைக்கு ஆயுத மற்றும் நிதி உதவிகளை இந்தியா வழங்கியது என்ற குற்றச்சாட்டு ஏற்கனவே இருக்கின்ற நிலையில் தற்போதும் (29ஆம் பக்கம் பார்க்க)

### போர்க்குற்ற விசாரணைக்கு சுயாதீனக் குழு வேண்டும் :

#### சர்வதேச மன்னிப்புச் சபை

கொழும்பு, ஏப்.27

ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கையை அடிப்படையாக வைத்து இலங்கையின் யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்த சர்வதேச சுயாதீன விசாரணைக் குழு ஒன்றை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் அமைக்கவேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இவ்வாறான விசாரணைக் குழு ஒன்றை (29ஆம் பக்கம் பார்க்க)

### தமிழீழத்தை உருவாக்க ஆரம்பியுங்கள் இந்திய அரசிடம் ராமதாஸ் கோரிக்கை

சென்னை, ஏப்.27

தனித் தமிழீழ அரசை உருவாக்கும் பணிகளை இந்தியா ஆரம்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் மருத்துவர் ராமதாஸ்.

கிழக்குப் பாகிஸ்தானை 1971ஆம் ஆண்டில் பாகிஸ்தானில் இருந்து பிரித்து பங்களாதேஷ் என்ற நாடாக உருவாக்கியது போன்று இலங்கையை



யும் பிரித்து தமிழீழம் என்ற தனி நாட்டை உருவாக்க வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையில், 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்; வைத்தியசாலை, பொதுமக்கள் பாதுகாப்பு வலயங்கள் மீது சரமாரியாக எறிகணைத் (29ஆம் பக்கம் பார்க்க)

## லட்சக்கணக்கில் திரண்டு பக்தர்கள் கண்ணீர் அஞ்சலி பகவான் சத்திய சாயியின் இறுதிக் கிரியைகள் இன்று



பிரதமர் மன்மோகன் மற்றும் சோனியா அஞ்சலி செலுத்துகின்றனர்

### மன்மோகன், சோனியாவும் புட்டபர்த்தியில்

புட்டபர்த்தி, ஏப். 27

மகா சமாதியடைந்த ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் திருவுடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருக்கும் புட்டபர்த்தி சாய்குல்வந்த் மண்டபத்திலேயே முழு அரச மரியாதையுடன் இன்று நல்லடக்கம் செய்யப்படுமென ஆந்திர அரசு அறிவித்துள்ளது.

பகவானின் திருவுடலுக்கு அஞ்சலி செலுத்த நேற்றும் லட்சக்கணக்கான மக்கள் குவிந்திருந்தனர். விசேட பஸ்களிலும், ரயில்களிலும் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் அவரது பக்தர்கள் புட்டபர்த்தி நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இறுதி அஞ்சலி செலுத்த மக்கள் திரண்டு வருவதையடுத்து அஞ்சலி செலுத்தும் நேரத்தை சாயி சமித்தி நீடித்துள்ளது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி (29ஆம் பக்கம் பார்க்க)



இலங்கை கிரிக்கெட் அணி முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க பாபாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்துகிறார்...

# டெல்லியின் வெற்றிக் கனியை பறித்தது பெங்களூர் றோயல்ஸ்

## ஐ.பி.எல் முப்பதாவது ஆட்டம்

ஆட்டம்: டெல்லி டெயா டெவில்ஸ் எதிர் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் நாணயச் சுழற்சி: பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்
முடிவு: 03 விக்கெட்டுக்களால் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் வெற்றி ஆட்டநாயகன்: ஹொக்லி

டெல்லி டெயா டெவில்ஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| வோர்னர் | b சகீர்கான் | 07 | 11 | 01 | 0 |
| சேவாக் | run out (மிதுன்/டீ வில்லியர்ஸ்) | 25 | 18 | 03 | 0 |
| ஹோப்ஸ் | c டீ வில்லியர்ஸ் b மித்துன் | 54 | 43 | 07 | 0 |
| மத்தியூ வேட் | b மித்துன் | 08 | 09 | 00 | 0 |
| வேணுகோபால் ராவ் | b வெற்றோரி | 24 | 21 | 02 | 1 |
| நமன் ஓஜா | c சகீர்கான் b அரவிண்ட் | 16 | 11 | 00 | 2 |
| இப்ரான் பதான் | ஆட்டமிழப்பில்லை | 13 | 07 | 00 | 2 |
| யோகேஸ் நாகர் | ஆட்டமிழப்பில்லை | 00 | 02 | 00 | 0 |
| மோர்னி மோர்கல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| டின்டா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஜாதவ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 7, lb 4, nb 2) | 13 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சகீர்கான் | 04 | 27 | 1 | 0 |
| அரவிண்ட் | 04 | 30 | 1 | 0 |
| வெற்றோரி | 04 | 25 | 1 | 0 |
| கெயில் | 02 | 20 | 0 | 0 |
| மித்துன் | 04 | 37 | 2 | 0 |
| மொஹமட் | 02 | 17 | 0 | 0 |

TOTAL - 160/6 (20)
1-33 (வோர்னர்), 2-43 (சேவாக்), 3-68 (மத்தியூ வேட்), 4-115 (ராவ்), 5-142 (ஹோப்ஸ்), 6- 151 (ஓஜா)

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கெயில் | c ராவ் b ஹோப்ஸ் | 26 | 14 | 04 | 1 |
| டில்ஷான் | c ஓஜா b டின்டா | 00 | 01 | 00 | 0 |
| ஹோக்லி | b மோர்னி மோர்கல் | 56 | 38 | 08 | 2 |
| டீ வில்லியர்ஸ் | run out (வோர்னர்) | 05 | 02 | 01 | 0 |
| திவாரி | c ஓஜா b மோர்னி மோர்கல் | 18 | 20 | 01 | 1 |
| புஜாரா | c வோர்னர் b நாகர் | 07 | 12 | 00 | 0 |
| வெற்றோரி | ஆட்டமிழப்பில்லை | 18 | 19 | 01 | 1 |
| மித்துன் | c ஜாதவ் b மோர்னி மோர்கல் | 00 | 02 | 00 | 0 |
| மொஹமட் | ஆட்டமிழப்பில்லை | 13 | 10 | 02 | 0 |
| சகீர்கான் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| அரவிண்ட் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 8, lb 4, nb 1, b 5) | 18 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| டின்டா | 3.3 | 36 | 01 | 0 |
| இப்ரான் பதான் | 03 | 26 | 00 | 0 |
| மோர்னி மோர்கல் | 04 | 25 | 03 | 1 |
| ஜாதவ் | 04 | 37 | 00 | 0 |
| ஹோப்ஸ் | 04 | 25 | 01 | 0 |
| நாகர் | 01 | 03 | 01 | 0 |

TOTAL - 161/7 (20)
1-1 (டில்ஷான்), 2-83 (கெயில்), 3-95 (டீ வில்லியர்ஸ்), 4-96 (ஹோக்லி), 5-107 (புஜாரா), 6-139 (திவாரி), 7-139 (மித்துன்)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

-டிலீப்-

ஐ.பி.எல்லின் 30 ஆவது ஆட்டம் நேற்று. நடந்தது டெல்லியில். மோதின டெல்லி டெயா டெவில்ஸ் - பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ். சுழற்றப்பட்டது நாணயம். பெறப்பட்டது பெங்களூருக்கு வெற்றி. தீர்மானித்தது களத்தடுப்பு.

வோர்னர் - சேவாக் வந்தனர் களத்துக்கு. ஓட்டங்கள் பெறப்படவில்லை அதிகம். பெங்களூர் அடக்கியது டெல்லியின் அதிரடியை. ஓவருக்கு சென்றது ஒவ்வொரு பவுண்டரிகள். 5 ஆவது ஓவரிலேயே சகீர் சரித்தார் வோர்னரின் விக்கெட்டை. 33 ஓட்டங்கள் பெறப்பட்டது முதலாவது விக்கெட்டுக்காய். வந்தார் ஹோப்ஸ். இணைந்தார் சேவாக்குடன். அதிரடிகளை அசத்தலாய் பெற்றார் சேவாக். இருந்தும் போதாது அணியின் ஓட்ட விகிதத்துக்கு. கலக்கியது பெங்களூர். சிரமங்களில் சிக்கியது டெல்லி.

ஓட்டங்கள் பெறுவதற்கு முண்டியடித்தார் சேவாக். வீணாய் வீழ்ந்தார் ரன் அவுட்டில். பெங்களூருக்கு நிம்மதி. அதிரடிகளின் ஆட்டக்காரர்கள் அடங்கி விட்டார்கள். மறுமுனையில் வந்தார் வேட். எட்டு ஓட்டங்களுடன் வெளியேற்றியது பெங்களூர். ஹோப்ஸ் பவுண்டரிகளில் மட்டும் வேட்டையாடினார் பெங்களூரின் பந்தை. வேகமாய் வெழுக்கத் தொடங்கியது டெல்லி. சலிப்பில்லாது முன்னேறியது ஆட்டம். ராவ் அதிரடிகளின் ஆரம்பம். சிக்ஸர் அடித்தார் மித்துன் பந்தில். வெற்றோரியின் பந்து பிடுங்கியெறிந்தது ராவ்வின் விக்கெட்டை.

மிதுனின் பந்து வீச்சில் தப்பிப் பிழைத்தார் ஹோப்ஸ். இருந்தும் அரைச்சதம் அடித்ததும் மீண்டும் மாட்டினார் மிதுனிடம். 54 ஓட்டங்களுடன் வந்தது அவரது ஆட்டத்துக்கு முடிவு. பின்வரிசையில் வேகமெடுத்தது அதிரடித் தாக்குதல்கள். பெங்களூரின் பந்துகள் சிக்ஸர்களாய் மாறியது முடிந்த வரை. நமன் ஓஜா, இப்ரான் பதான் ஏற்றி வைத்தனர் டெல்லியின் ஓட்டங்களை.

இருபது ஓவர்களில் 160 ஓட்டங்களைப் பெற்றது



டெல்லி. சரிக்கப்பட்டது 6 விக்கெட்டுக்கள். மிதுன் வீழ்த்தினார் இரண்டு விக்கெட்டுக்கள்.

பதிலுக்கு தொடங்கியது பெங்களூரின் ஆட்டம். ஆட்டத்தின் இரண்டாவது பந்திலேயே பிடுங்கப்பட்டது டில்ஷானின் விக்கெட். ஓட்டமெதுவுமற்று முதலாவது பந்திலேயே முடிந்தது டில்ஷான் ஆட்டம். காட்டினார் கைவண்ணத்தை டின்டா.

வந்தார் ஹோக்லி. இணைந்தார் கெயிலுடன். தொடங்கியது அதிரடிகள் இடிகளாக. நொருக்கப்பட்டது டெல்லியின் பந்து வீச்சு. அதிரடிகள் மட்டும் களத்தில். வேகமாய் ஏறியது ஓட்ட வேகம். சேவாக்கின் வியூகங்கள் தவிடுபொடி. 26 ஆவது பந்தில் எட்டப்பட்டது 50 ஓட்டங்கள். சிக்ஸர்கள், பவுண்டரிகள் அதிரடிக்குச் சான்றுகள். பிரிப்பதற்கு அழைக்கப்பட்டார் ஹோப்ஸ் எட்டாவது ஓவரில். எட்டியிருந்த ஓட்டங்கள் 83. பவுண்டரி அடித்த வேகத்தில் அதிரடிக்கு ஆசைப்பட்டு பறிகொடுத்தார் விக்கெட்டை.

சரிவு டெல்லிக்கு பலம். டீ வில்லியர்ஸ் நிலைக்கவில்லை நீண்ட நேரம் களத்தில். ஓட்டத்துக்கு அவசரப்பட்டு பறிகொடுத்தார் விக்கெட்.

அதிரடிகளால் அரங்கை நனைத்த ஹோக்லி கடந்தார் அரைச்சதம். 38 பந்துகளில் பெற்றுக்கொடுத்தார் 56 ஓட்டங்கள். அவரது ஆட்டத்தை முடித்து வைத்தார் மோர்னி மோர்கல். பின்வரிசை வாரியது காலை. வெற்றி சாய்ந்தது டெல்லியின் பக்கம். வெற்றோரி களத்தில் போராட்டம். இறுதிவரை நிலைத்து நின்றார். இறுதியில் எஞ்சியிருந்தது மூன்று பந்துகள். மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி பெங்களூருக்கு. டெல்லி வாரிவழங்கியது உதிரிகள். தாரை வார்த்துக் கொடுத்தது வெற்றியை. மோர்னி மோர்கல் வீழ்த்தினார் மூன்று விக்கெட்டுக்கள்.



டெல்லியை அதிரடியால் கலங்க வைத்த ஹோக்லி ஆட்ட நாயகன்.

## விளம்பரத்தில் நடிக்க டோனிக்கு மத்திய அமைச்சர் அழைப்பு

இந்திய சுற்றுலாத் துறையின் ‘வியத்தகு இந்தியா’ விளம்பரத்தில் நடிக்க அணித்தலைவர் டோனிக்கு மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் சுபோத் காந்த் சகாய் அழைப்பு விடுத்துள்ளார்.

டோனியின் சொந்த ஊரான ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில், திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்ததால் நாடு முழுவதும் டோனியின் புகழ் பரவியுள்ளது. இந்திய சுற்றுலாத் துறைக்கான விளம்பரத்தில் அவரது பங்களிப்பு இருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். உலகக் கிண்ணத்தை வென்ற அணியில் இருந்த வீரர்கள் அனைவரும் தங்கள் பகுதி சுற்றுலா மேம்பட எங்கள் துறைக்கு உதவ முன்வர வேண்டும்.

அமெரிக்காவின் ‘ரைம்ஸ்’ பத்திரிகை வெளியிட்ட உலகப் பிரபலங்கள் பட்டியலில் அமெரிக்க அதிபர் ஒபாமாவைக் கூட பின்னுக்குத் தள்ளி டோனி 52 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். அவருக்கு எனது வாழ்த்துகள் என்றார் சபோத் காந்த் சகாய். (15)

## விஜய் ஆடுவது சந்தேகம்

ஐ.பி.எல் லீக் போட்டியில் மும்பையில் புனேவாரியர்ஸுக்கு எதிராக நாளை சென்னை சூப்பர் கிங்ஸ் விளையாடுகின்றது. இதில் சென்னையின் தொடக்க ஆட்டக்காரர் முரளி விஜய் காயம் காரணமாக விளையாடுவாரா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. விஜய் தொடர்பாக இன்று முடிவு எடுக்கப்படும் என்று சென்னை அணி வட்டாரங்கள் தெரிவித்தன. சென்னை சூப்ப கிங்ஸ் தொடக்க ஆட்டக்காரரான முரளி விஜய் இதுவரை 6 போட்டிகளில் 180 ஓட்டங்களை எடுத்துள்ளார். (15)

## வென்றது பாகிஸ்தான்


பாகிஸ்தான் அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி அஹமட்டின் சதத்தின் உதவியுடன் ஏழு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.


நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடுவதற்கு தீர்மானித்தது. அதன்படி களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி தட்டுத்தடுமாறி ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணியின் சிம்மொன்ஸின் அரைச் சதத்தின் உதவியுடன் 220 ஓட்டங்களை எட்டியது. பாகிஸ்தான் அணியின் சுழற் பந்து வீச்சாளர்களைச் சமாளிப்பதற்கு தீவுகள் திண்டாடியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய சிம்மொன்ஸ் 51 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்தனர். இறுதியில் 50 ஓவர்கள் நிறைவில் 220 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் சயிட் அஜ்மல், மொஹமட் ஹபீஸ், வகாப் றியாஸ், சயிட் அப்ரிடி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கியது பாகிஸ்தான். இருந்தும் மேற்கிந்தியத்தீவுகளின் சிறப்பான பந்து வீச்சுக்கு எதிராக பாகிஸ்தானால் அதிரடியாக ஆட முடியவில்லை. இருந்தும் விக்கெட்டுக்களை இழக்கவில்லை. நிதானமாக ஆட்டத்தை ஆடியது பாகிஸ்தான் அணி. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய அஹமட் சிறப்பாக ஆடி தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். மத்திய வரிசையில் மிஷ்பா கை கொடுக்க 48 ஓவர்களிலேயே பாகிஸ்தான் வெற்றி இலக்கை அடைந்தது. அஹமட் 102 ஓட்டங்களையும் மிஷ்பா 43 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக பிஸ்ஸூ இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக அஹமட் தெரிவு செய்யப்பட்டார். ஐந்து போட்டிகளைக் கொண்ட தொடரில் பாகிஸ்தான் அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. (15)





## காயம் குறித்த அச்சத்தினாலேயே ஓய்வு

காயங்கள் குறித்த அச்சம் காரணமாகவே டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து தான் ஓய்வுபெற்றதாக இலங்கை அணியின் வேகப் பந்துவீச்சாளர் லசித் மலிங்க நேற்றுத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் பேசிய அவர், 2015ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகள் வரை ஒருநாள் போட்டிகளிலும் 20 ஓவர் போட்டிகளிலும் விளையாட முடியும் என்று நம்புவதாகவும் கூறினார்.

டெஸ்ட் போட்டிகளில் நாளொன்றுக்கு 20-25 ஓவர்கள் வீசுவதைவிட 20 ஓவர் மற்றும் ஒருநாள் போட்டிகளில் 4 ஓவர் அல்லது 10 ஓவர் வீசுவதன் மூலம் தனது பந்துவீச்சு வேகத்தை அதிகரித்துக்கொள்ள முடிந்ததாக அவர் கூறினார்.

2008 ஆம் ஆண்டு காயங்கள் காரணமாக தான் ஒதுக்கப்பட்டிருந்தாக கூறிய அவர், அடுத்த உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு தன்னை தேர்வாளர்கள் தெரிவு செய்வார்கள் என்பற்கு என்ன உத்தரவாதம் உள்ளது எனவும் கேள்வி எழுப்பினார்.

## நாடு திரும்புகின்றார் டில்ஷான்

உலகக் கிண்ண இறுதிப்போட்டி தோல்விக்கு பின்னர் சங்கக்கார இலங்கை அணித்தலைவர் பதவியில் இருந்து விலகியதால் புதிய அணித்தலைவராக டில்ஷான் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது தலைமையில் இலங்கை அணி இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. மே 14 இல் மிடில் செக்ஸ் அணிக்கு எதிராக பயிற்சி ஆட்டத்தில் விளையாடவுள்ளது. இதற்கு வசதியாக டில்ஷான் மட்டும் மே 10 ஆம் திகதி இலங்கை திரும்புகின்றார். மற்ற வீரர்கள் மே 18 ஆம் திகதி இந்தியாவிலிருந்து இங்கிலாந்து செல்கிறார்கள். (15)

## அணித் தலைவராகவும் சங்கக்கார செயற்படுவார்

இங்கிலாந்துடனான தொடரின் போது அவசரகால நிலைமை ஏதும் ஏற்படும் பட்சத்தில் இலங்கை அணித் தலைவராகச் செயற்படுவதற்கு தயாரென முன்னாள் அணித்தலைவர் குமார் சங்ககார உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய அணித் தலைவராக திலகரட்ண டில்ஷான் தேர்வுக் குழுவினால் நியமிக்கப்பட்டார். எனினும் துணை அணித்தலைவர் எவரும் நியமிக்கப்படவில்லை.

இந்த நிலையில் இங்கிலாந்துத் தொடருக்கு இலங்கை அணி டில்ஷான் தலைமையில் செல்கிறது. டில்ஷானுக்கு அணித்தலைமைப் பதவி வழங்கப்பட்டது குறித்த வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ள நிலையில் இலங்கை அணித் தேர்வுக் குழு மாற்று ஏற்பாடுகளையும் செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஐ.பி.எல்லில் டெக்கான் அணித் தலைவராயிருக்கும் குமார் சங்க்காரவுடன் தேர்வுக் குழுத் தலைவர் டுலிப் மெண்டிஸ் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு சில விடயங்கள் குறித்து பேசியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதற்கமைய, இங்கிலாந்து தொடரில் அவசரகால நிலைமை ஏதாவது ஏற்படும் பட்சத்தில் அவ்வேளையில் அணித் தலைவராக செயற்படுவதற்கு நிபந்தனையுடன் சங்கக்கார இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடும் நெருக்கடிகளை டில்ஷானினால் சமாளிக்க முடியுமா என்பதில் தேர்வுக் குழுவுக்கு சந்தேகம் ஏற்பட்ட நிலையிலேயே அவசரகால நிலை ஏற்படும் பட்சத்தில் சங்கக்கார அணித்தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## சிறீசாந்துக்கு டும்..டும் விரைவில்

இந்திய கிரிக்கெட் அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் சிறீசாந்த். பிரபல நடிகை ரியா சென்னை விரைவில் திருமணம் செய்யப்போவதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்ற மகிழ்ச்சியில் இருக்கிறார் சிறீசாந்.


அதுவும் இறுதி ஆட்டத்தின்போது அவரும் விளையாடினார். இந்த மகிழ்ச்சியுடன் சிறீசாந் வீட்டில் அவருக்குத் திருமணம் செய்ய எண்ணியுள்ளனர். இதற்காக தீவிர பெண் வேட்டையிலும் இறங்கியுள்ளனர் அவரது பெற்றோர்.

இதனிடையே ஒரு விளம்பர நிகழ்ச்சியின்போது சிறீசாந்தும், நடிகை ரியா சென்னும் சந்தித்து கொண்டனர். அப்போது இவர்களுக்குள் ஆரம்பமான நட்பு இப்போது காதலில் போய் முடிந்து இருக்கிறதாம்.


தற்போது சிறீசாந் வீட்டிலும் பெண் தேடி வருவதால், ரியாவையே திருமணம் செய்யலாம் என்ற முடிவில் சிறீசாந் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால் இந்த தகவலை சிறீசாந் மறுத்துள்ளார். நான் திருமணம் செய்யப்போவது உண்மை தான். ஆனால் ரியாசென்னை அல்ல. அவர் என்னுடைய நல்ல நண்பர். எங்களுக்குள் காதல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறினார்.

அதேபோல் ரியாவும், சிறீசாந் தன்னுடைய நண்பர் என்று கூறியிருக்கிறார். ஏற்கனவே இந்தியாவின் மற்றொரு வேகப்பந்து வீச்சாளரான சகீர்கான், பொலிவுட் நடிகை இஷா சர்வானியை திருமணம் செய்ய இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (15)



## மீண்டும் கலக்கத் தொடங்கிவிட்டோம்




ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் சென்னை சூப்ப கிங்ஸ் 25 ஓட்டங்களில் புனே வாரியர்ஸ் அணியைத் தோற்கடித்தது.

முதலில் விளையாடிய சென்னை சூப்ப கிங்ஸ் அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 142 ஓட்டங்கள் எடுத்தது. மைக் ஹஸி 48 பந்துகளில் 61 ஓட்டங்கள் எடுத்தார். பந்து வீச்சுக்கு சாதகமான இந்த ஆடுகளத்தில் புனே அணியால் 143 ஓட்ட இலக்கை எடுக்க இயலவில்லை. அந்த அணியால் 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 117 ஓட்டங்களே எடுக்க முடிந்தது.

அல்பின் மோர்கல் 3 விக்கெட்டுக்களும், பொலஞ்சர், அஸ்வின் தலா 2 விக்கெட்டுக்களும் கைப்பற்றினார்கள்.

இந்த வெற்றி குறித்து சென்னை சூப்ப கிங்ஸ் அணித் தலைவர் டோனி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இது எங்களுக்கு மிகவும் முக்கியமான வெற்றியாகும். தொடர்ந்து தோல்வியை தழுவினால் பாதிப்பு ஏற்படும். எங்களது அணியின் வெற்றிதொடரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. புனே அணியைத் தோற்கடிக்க நான் அதிகமான திட்டம் எதுவும் வகுக்கவில்லை. பந்து வீச்சாளர்களுடன் அடிக்கடி ஆலோசிக்கவில்லை. ஆனால் பந்து வீச்சாளர்கள் ஒன்று கூடி விவாதித்தனர். அதில் நான் பங்கேற்கவில்லை. பந்து வீச்சு சிறப்பாக இருந்தது. அதைவிட களத்தடுப்பு மிகவும் அபாரமாக இருந்தது. 142 ஓட்டங்கள் என்பது எளிதானதாகவே கருதினேன். 155 ஓட்டங்கள் வரை நல்ல 'ஸ்கோர்' என்று நினைத்தேன். ஆனால் களத்தடுப்பில் சிறப்பாகச் செயற்பட்டு ஓட்டங்களை அதிகம் கட்டுப்படுத்தி விட்டோம் - என்றார்.

தோல்வி குறித்து புனே வாரியர்ஸ் அணித்தலைவர் யுவராஜ்சிங் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இந்தத் தோல்வி மிகுந்த ஏமாற்றம் அளிக்கின்றது. முதல் 6 ஓவரில் 4 விக்கெட்டுக்கள் விழுந்துவிட்டன. இதனால் அதிலிருந்து மீண்டு வர கஷ்டப்பட்டோம். நான் கடைசி வரை நின்று வெற்றிபெற வைக்க முடியாமல் போனது ஏமாற்றமே.

முதலில் பந்து வீசுவது என்று எடுத்த முடிவுக்காக நான் வருத்தம் எதுவும் படவில்லை. ரெய்லர், ராகுல் சர்மா, தோமஸ் ஆகியோரது பந்து வீச்சு சிறப்பாக இருந்தது. 143 ஓட்டங்கள் இலக்கு என்பது மிகப்பெரிய 'ஸ்கோர்' கிடையாது. இவ்வாறு அவர் கூறினார்.

ஆட்டநாயகன் விருது பெற்ற மைக் ஹஸி கூறும் போது, ஆடுகளத்துக்கு ஏற்றவாறு விளையாடினேன். எங்களது களத்தடுப்பு மிகவும் அபாரமாக இருந்தது என்றார். (15)

## மீண்டும் புனேயுடன் சென்னை இன்று மோதல்

ஐ.பி.எல் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் ஒவ்வொரு அணியும் தலா 14 லீக் ஆட்டத்தில் விளையாடும் வகையில் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.

நடப்பு சம்பியனான சென்னை சூப்ப கிங்ஸ் அணி 'பி' பிரிவில் உள்ளது. அந்த பிரிவில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், கொச்சி ருஸ்கேர்ஸ் கேரளா, ராஜஸ்தான் றோயல்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் ஆகிய 4 அணிகள் இடம் பெற்றுள்ளன.

இந்த அணிகளுடன் சென்னை தலா 2 முறை மோத வேண்டும். 'ஏ' பிரிவில் உள்ள 5 அணிகளில் புனே வாரியர்ஸுடன் நாளை இரண்டாவது முறையாக மோதுகின்றது. அந்த பிரிவில் உள்ள மற்ற அணிகளான மும்பை இந்தியன்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், டெல்லி டெயா டெவில்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ் அணியுடன் தலா ஒருமுறை மோத வேண்டும். சென்னை அணி இதுவரை 6 ஆட்டத்தில் விளையாடிவிட்டது. இதில் 3 வெற்றி, 3 தோல்வியுடன் 6 புள்ளிகள் பெற்றுள்ளது. நிகர ஓட்ட சாராசரி விகிதத்தில் முன்னிலை வகிப்பதால் 4 ஆவது இடத்திலுள்ளது.

சென்னை சூப்ப கிங்ஸ் 7 ஆவது ஆட்டத்தில் புனே வாரியர்ஸ் அணியை இன்று புதன்கிழமை மீண்டும் சந்திக்கின்றது. இந்த ஆட்டம் மும்பையில் பிற்பகல் 4 மணிக்கு நடக்கின்றது. சென்னை சூப்ப கிங்ஸ் சொந்த மைதானமான சேப்பாக்கத்தில் தான் 3 வெற்றியையும் பெற்றது. இதனால் வெளி மைதானத்தில் முதல் வெற்றியை பெறுமா என்று ரசிகர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

அதே நேரத்தில் புனே வாரியர்ஸ் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் தோற்றதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் விளையாடும். அந்த அணி தொடர்ந்து 3 தோல்வியைச் சந்தித்து உள்ளது. இதனால் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் விளையாடும்.

நாளை நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் கொச்சி-டெக்கான் அணிகள் மோதுகின்றன. இரவு 8 மணிக்கு கொச்சியில் இந்த ஆட்டம் நடக்கிறது. கொச்சி அணி 4 ஆவது வெற்றிக்காகவும், டெக்கான் அணி 3 ஆவது வெற்றிக்காகவும் போராடும். (15)

## போட்டி புறக்கணிப்பு

அதிகமான போட்டிகளில் விளையாடுவதால் வீரர்கள் அடிக்கடி காயம் அடைவதுடன், மிக விரைவிலேயே விளையாட்டில் இருந்து ஓய்வு பெற வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிறார்கள். இதனால், போட்டித் தொடர்களுக்கு இடையே போதிய இடைவெளி கொடுக்க வேண்டியது அவசியம். இதை கவனத்தில் கொண்டு அட்டவணையை தயாரிக்க வேண்டும். இல்லையென்றால், வீரர்கள் போட்டி புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட நேரிடும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் அணி வீரர் அலெஸ்டர் குக் கூறியுள்ளார்.

## இந்தியப் பயிற்சியாளர் பிளவர் இல்லை

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக இங்கிலாந்து பயிற்சியாளரான அன்டி பிளவர் நியமிக்கப்படலாம் என்ற தகவல் வெளியானது. இதையடுத்து புதிதாக அவருக்கு 3 ஆண்டு ஒப்பந்தத்தை இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் வழங்க முன்வந்தது. இதில் இன்னும் பிளவர் கையெழுத்து போடவில்லை. இருப்பினும் அனைத்து விவகாரங்களும் முடிந்து விட்டது என்று இங்கிலாந்து தரப்பில் தகவல்கள் வெளியாகி உள்ளன. அன்டி பிளவர் பயிற்சியாளர் பட்டியலில் இருந்து நீக்க[illegible]ம் என்று தெரிகின்றது.

# மகாசமாதியும் பரிநிர்வாணமும்

வீடுபேறு,முக்தி என்பவை உடல் எடுத்த கர்மவினையுடன் கூடிய ஜீவாத்மா தனது வினைகளிலிருந்து விடுபடுவதும், மும்மலங்களிலிருந்து விடுபட்டு பரமாத்மாவுடன் கலத்தலை குறிக்கும். இந்நிலை ஒருவர் தான் உடலுடன் உயிர்வாழும் நிலையிலேயே ஏற்படும் இடத்து, முத்தியடைந்து ஜீவிக்கும் பொழுது அவரை ஜீவன் முத்தன் (முக்தியடைந்து ஜீவிப்பவன்) என்று அழைக்கப்படுவார். வினையினால் உடல் எடுத்த அந்த ஜீவன் முக்தியடைந்த பின்பும், அவ்விடத்துக்குரிய வினை கழியும் வாழ்ந்து இறுதியில் அவ்வுடலின் வினைமுடிவில் உடலை விடவே சமாதி அடைதல்(மகாசமாதி) எனப்படும்.

ஆனாலும் ஆன்மீக சாதனைகளின் காலங்களில் இடையிடையே சமாதி நிலை ஏற்படுவதும் சிறிது நேரத்தின் பின் அதிலிருந்து மீள்வதும் என்றும் கேள்விப்பட்டுள்ளோம். இவை அச்சாதகனின் சாதனை முன்னேற்றத் தின் பயனாகவும் இறைஅருளினாலும் நிகழ்வது. இவை ஜீவாத்மா பரமாத் மாவின் தற்காலிக இணைப்பை குறிக்கின்றது. இதன் தொடர்ச்சியான, முழுமை யான, நிலையான ஜீவாத்மா, பரமாத்மா கலப்பே முக்திநிலை எனப்படும். இந்த நிலைகளின் வெவ்வேறுபட்ட நிலைகளுக்கேற்ப வெவ்வேறு பெயர்கொண்டு அழைக்கப்படும். வெவ்வேறுபட்ட முக்தி நிலைகளுக்கு அமைய அவ் முக்தர்களின் உலகியல் நிலையில் செயல்படும் நிலையும் அமையும். அதற்கமைய ரிஷிகள், ஞானிகள், சித்தர்கள் என்றும் மதங்களின் வேறுபாட்டுக்கு அமைய புத்த நிலை, நிர்வாணம் (பௌத்தத்தின்படி) என்றும், சூபிகள் (இஸ்லாம்மதத்தில்) என்றும் இறை ராச்சியத்தை அடைதல் ஜீவன் முக்தனாதல் (கிறிஸ்தவத்தின் படி) வெவ்வேறு மதங்களும் முக்தி நிலையை குறித்துநிற்கின்றன.

எல்லா மதங்களின் ஆழ்ந்த கருத்தாக அவ்வவ்திருமறைகளில் கூறியுள்ளது. ஆனால் நாம் வெறுமனே சமயங்களின் மேலோட்டமான சடங்குகளுடன் நின்று விடுகின்றோம். உள்நுழைந்து அந்த வழிகாட்டலை கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டோம்.

மேலும்ஆன்மிகம் என்றும் சமயம் என்றும் இரண்டாகப் பிரித்து விட்டோம்.ஆன்மிக உயர்நிலையை மக்கள் அடைவதற்கு எழுந்தவைகளே சமயங்கள்.

எல்லா மதங்களும் அவ் உயரிய நிலையை அடைய கூறுவதுடன் அதை அடைவதற்கான முறைகளையும் கூறி நிற்கின்றது. தன்தன் மதங்களில் ஆழ்ந்து போகும் போது இறைவனை அடையும் வழி கூறப்பட்டிருப்பது கண்டுகொள்ளக்கூடியதாக இருக்கும். அந்த மதங்களின் ஆழ்நிலைக்கு வரும்போது எல்லா மதங்கள் காட்டும் இலக்கும், இலக்கை அடைவதற்கான பாதையின் தன்மையும் ஒன்றே என்பதை காணலாம். இராம கிருஷ்ணபரமஹம்சர் வெவ்வேறு மதங்கள் புகட்டிய பயணத்தை தனித்தனி யாக வெவ்வேறு காலகட்டங்களில் பயிற்சி செய்து ஒவ்வொரு முறையும் அந்த உயரிய நிலைஅடைந்தவர் என்பது இங்கு குறித்துக்காட்ட வேண்டியுள்ளது.

எனவேதான் சத்திய சாயிபாபாவும் தான் ஒரு புது மதத்தை கூறவரவில்லை, ஏற்கனவே உள்ள மதங்களின் ஆழ்ந்த கருத்தை எங்கள் எங்கள் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுக நெறிப்படுத்தவே அவதரித்தேன் என்றார்.

ஓர் பௌத்தன் உண்மையான பௌத்தனாக ஓர் இஸ்லாமியன் உண்மையான இஸ்லாமியனாக ஒரு கிறிஸ்தவன் உண்மையான கிறிஸ்தவனாக ஓர் இந்து உண்மையான இந்துவாக வாழ்ந்தால் அடைகின்ற இடம் ஒன்றே அனைவரும் ஒன்றே என்பதை அனுபவமாக நாம் உணர்ந்து கொள்ளலாம் என்ற சத்திய வாக்கை கூறிச் சென்றுள்ளார்.

''சமஸ்தலோக சுகினோ பவந்து''

அனைத்து உலகங்களும் இன்பமாக வாழட்டும்

சத்திய சாயி பாபாவுக்கு சமர்ப்பணம்.

- சங்கரன் -



மகா சமாதியடைந்த ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் திருவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக புட்டபர்த்தியில் லட்சக்கணக்கான மக்கள் நீண்ட நேரம் வரிசைகளில் காத்துநிற்கின்றனர். இவ்வாறு காத்து நிற்கும் பக்தர்களுக்கு பல தொண்டு நிறுவனங்கள் உணவுப் பொதிகளை விநியோகித்து வருகின்றன.

## விசேட பிரார்த்தனை

இன்று புதன்கிழமை பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் ஸ்தூல உடல் சமாதி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் நேரமான காலை 9 - 9.30 வரையான நேரத்தை உள்ளடக்கிய வகையில் யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து சாயி நிலையங்களிலும் விசேட பிரார்த்தனை வடபிராந்திய சத்தியசாயி நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சமாதி தொடர்பான செய்திகளை பார்வையிடத்தக்க உத்தியோகபூர்வ இணையத்தளங்கள் www.sathyasai.org, www.sssbpt.org, www.srisathysai.org.in

**நேரடி ஒளிபரப்பு**

இதேவேளை, பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் சமாதி நிகழ்வுகள் தொடர்பான நேரடி ஒளிபரப்புக்களை யாழ்ப்பாணம் சாயி நிலையத்தில் திரையில் பார்வையிடக் கூடிய வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)


## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் பணியாளரான இரவீந்திரன் அவர்களின் அன்பு மகன்

*செல்வன் இரவீந்திரன் பவீசன்*

அவர்கள் அகாலமரணம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமுருகன் கொம்நெற்,
K.K.S. வீதி,
யாழ்ப்பாணம். (சி/577944)

உரிமையாளரும்,
பணியாளர்களும்.


## 'அறிவியற் கதிர்' நூல் வெளியீடு

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய விஞ்ஞான கழகத்தின் 15 ஆவது வெளியீடான 'அறிவியற்கதிர்' நூல் வெளியீடு இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் ஜி.மிகுந்தனும், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி திருமதி ரி.மிகுந்தனும் கலந்துகொள்கின்றனர். (ஒ-323)


## ஹோட்டல் முகாமையாளர் பதவி வெற்றிடம்

தகைமைகள்:- ஹோட்டல் முகாமைத்துவ கற்கைநெறி பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.ஆங்கிலம் அல்லது சிங்களம் சரளமாக பேசத்தெரிந்திருத்தல் வேண்டும்.

வயதெல்லை:- 30 தொடக்கம் 55 வரைவிண்ணப்பப்படிவங்களை சுய கையெழுத்தினால் தயாரித்து கிழ் குறிப்பிடப் பட்டுள்ள முகவரிக்கு 03.05.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

City INNS Hotel இல.56, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (3553)

## கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை

வெற்றிடங்கள்: கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)

தகைமைகள்: க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(a) இளைப்பாறிய பொலிஸ் / படை உத்தியோகத்தர்கள், சாரணர், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

(b) தடகள, கிரிக்கெட், உதைபந்தாட்டம், கராட்டி, கரபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் மற்றும் சிறந்த வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு: மேற்கூறப்பட்ட தகைமையில் a+b உள்ளவர்களுக்கு கல்வித் தகைமையில் விலகல் அளிக்கப்படும்.
நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.
(i) உயரம் 5'4"
(ii) 25 வயதுக்கு மேற்பட்டோர் (சம்பளம் மாதமொன்றுக்கு) EPF & ETF மற்றும் வருகை ஊக்குவிப்புப் பணம் உட்பட ரூபா 12,000/-

நேர்முகப் பரீட்சை 337 1/1, கஸ்தூரியார் வீதியிலுள்ள பணி மனையில் 30.04.2011 சனிக்கிழமை அன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

குறிப்பு: அன்று வசதியில்லாதவர்கள் திங்கள் (02.05.2011) அல்லது செவ்வாய் (03.05.2011) முற்பகல் 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் சமுகமளிக்கலாம்.

கீழ்க்குறிப்பிட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.
(1) கிராமசேவகரின் நற்சான்றுப்பத்திரம் (6 மாதத்துக்குட்பட்டது)
(2) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
(3) கல்வித் தராதரப் பத்திரங்கள்
(4) தேசிய அடையாள அட்டை
இவை அனைத்தினதும் உண்மைப் பிரதியுடன் போட்டோப் பிரதியும் கொண்டுவரவும்.

337 1/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-577947) (27) பணிப்பாளர்.

## விற்பனைக்கு

83 ஸ்ரீ XXXX CD 200 HONDA
மோட்டார் சைக்கிள்
விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு:-
077 352 4469

[illegible]

மீசாலை வடக்கு, மீசாலை என்னும் முகவரியுடைய வெற்றிவேலு அரியபூமணி என்பவரது தே.அ.அட்டை [457992105V], விசேட அ.அட்டை என்பன சாவகச்சேரிக்கும் மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். T.P: 0213213064, 0772269885 (3554)

தென்மராட்சி, கொடிகாமம்,
கச்சாய் றோட், கச்சாய் அரசினர்
பாடசாலைக்கு அருகில்
எதிர்கால முதலீட்டுத்
திட்டத்துக்கு ஏற்றவகையில்
பெரிய நிலப்பரப்பு
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகொள்ள:-
0750476078, 0772021691, 0247911178.




## மரண அறிவித்தல்

*நல்லதம்பி குலவீரசிங்கம் (குலம்)*

கரவெட்டி கிழக்கு கோவிற்சந்தையைப் பிறப்பிடமாகவும் லண்டன் Clay Hall ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி குலவீரசிங்கம் கடந்த 17.04.2011 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி மற்றும் தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைரமுத்து (தியாகு) மற்றும் இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் அருட்சோதிமலரின் (மலர்), பாசமிகு கணவரும் நிசாந்தன், நிதர்ஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஈஸ்வரதேவி, காலஞ்சென்ற ஈஸ்வரநாதன் மற்றும் அன்னலோசினி, யோகநாதன், ஜெகநாதன், வதனா ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வரத்தினம், காலஞ்சென்ற உலகநாயகி, மற்றும் வேலாயுதம், இராசமலர், விஜயா, சிவசுப்பிரமணியம், ஞானமலர், செல்வா, சாந்தா, ரவிசங்கர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயக்குமார், சக்தி, ஈசன்,உமையாள் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2011) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.: 00442085509366, 00447969138511

தகவல்: குடும்பத்தினர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தினையை விதைக்காமல் அதனை அறுவடை செய்வது எப்படி?

நீண்டகாலமாக - மிகப் பல வருடங்களாக - சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விவரங்களை வெளியிடுவதில் அரசாங்கம் ஒளித்துப் பிடித்து விளையாடுகிறது.

அடைப்புக் கூடங்களுக்குள் இருந்து பரிதவித்தவர்களில், பதினெட்டு இருபது வருடங்களுக்கு முன்னர் உதைத்துத் தள்ளப்பட்டவர்களும் உள்ளடங்குவர். மகசின், கொழும்பு, அனுராதபுரம், பூஸா, வவுனியா, கண்டி மற்றும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை சிறைச்சாலைகளில் வழக்குத் தொடரப்படாமலும், பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற வெறும் சந்தேகத்துடனும், சிறைவாசம் அனுபவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டவர்களும் வன்னியின் இறுதிப் போரின் போது படையினரால் பிடிக்கப்பட்டவர்களும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படாமல், நரக வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, இறுதிப் போரின் போது படையினரால் பிடிக்கப்பட்டவர்கள் எங்கு தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள், என்ன ஆனார்கள் என்பது அவர்களின் உறவினர்களுக்குத் தெரியாத நிலையில், தெரி யப்படுத்தப்படாத நிலையில் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் உள, உடல் ரீதியாக வெந்து போகும் கட்டத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி, அமைச்சர்கள், அவர்களின் எடுபிடித் தரகர்கள் என்று எல்லா மட்டங்களில் உள்ளவர்களுக்கும் மகஜர்கள், கடிதங்கள் எழுதிக் கை சோர்ந்த நிலையில் தம்மை விடுவிக்குமாறு பாதுகாப்பு அமைச்சரின் செயலாளருக்கு தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் அரசியல் கைதிகள் மகஜர் அனுப்பி இருந்தனர். அதுவும் கிணற்றில் போட்ட கல்லாக அமிழ்ந்து போயிற்று.

இவற்றுக்கு இடையில், அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுக்களின் ஆரம்பச் சுற்றின் போதே (ஜனவரி 10 இல்) தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விவரங்களை அரசு வெளியிட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பெப்ரவரியில் நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சின் போது அரசு அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அதற்கு ஏற்பாடு செய்ய இணங்கியது.

அதன் பின்னர், நான்காம் கட்டப் பேச்சின் போது (ஏப்ரல் ஏழில்), இம்மாதம் 16 ஆம் திகதி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் அரசின் பிரதிநிதிகளும் வவுனியா சென்று தமிழ் அரசியல் கைதிகளின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியலைப் பார்வையிட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் தமிழ் - சிங்களப் புத்தாண்டைக் காரணம் காட்டி அந்தப் பயணமும் அமுங்கிப் போயிற்று!

அதற்குப் பின்னராவது அரசின் உறுதிமொழி - ஏற்பாடு - கைகூடியதா? ஆகக் கடைசியாகக் குறிக்கப்பட்ட 24 ஆம் திகதியன்று நிலைமை இருண்டு போயிற்று.

அரச தரப்பில் பொறுப்பாக விடப்பட்ட சச்சின் வாஸ் குணவர்த்தனாவிடமிருந்து ஆகப்பிந்தி ஒப்புக்கொள்ளப்பட்ட இம் மாதம் 24 ஆம் திகதியன்று கூட, வவுனியா விஜயம் குறித்து - அதற்கான எவ்வித ஏற்பாடுகள் குறித்தும் - கூட்டமைப்பினருக்குத் தகவல் தெரிவிக்கப்படவில்லை. வவுனியாவில் காத்திருந்த கூட்டமைப்பின் பிரதிநிதிகள் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியதாயிற்று!

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் மிகப் பெரும் மனிதாபிமானப் பிரச்சினையான தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் கொழும்பு அரசுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்களின் வாழ்வும் அவர்களின் இரத்த உறவுகளின் எதிர்காலமும் (ஏன் உயிர்களும்) கேள்விக்குறியாகி இருக்கும் இந்த விவகாரத்தில் அரசாங்கத்துக்கு அக்கறையோ, மனித நேயத்துடனான அனுதாபமோ தானும் இல்லை என்பது வெளிப்பட்டுள்ளது.

பான் கீ - மூனின் நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கையால் குழப்பமடைந்ததால் கூட்டமைப்பினருடனான பேச்சை, சந்திப்பைக் கைவிடுவதற்கு அரசு உத்தேசித்து விட்டதோ என்ற உப கேள்வியும் இங்கே பென்னம் பெரிதாக எழுந்து நிற்கிறது.

பான் கீ - மூனின் நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கையை, அதில் தெரிவிக்கப்பட்டுள்ள சிபாரிசுகளைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வரவேற்றிருப்பதால், அவர்களுடன் இனி என்ன பேச்சு என்ற சீற்றத்தின் பிரதிபலிப்பாகவும் தமிழ் அரசியல் கைதிகள் விடயம் குறித்த ஏய்க்காட்டுதலைக் கொள்ளலாம்!

அரசாங்கம் உலக அரங்கத்தில் பெரும் ஆபத்தான கட்டத்தில், பொறியில் சிக்கிய எலி போன்று அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கும் வேளையில், தமிழருக்கான உரிமைகள் குறித்துப் பேசவா முடியும்? தமிழ் அரசியல் கைதிகள் குறித்துச் சொன்னதைச் செய்யும் வேளையா இது? என்று கேள்விகள் கேட்க அரசு நினைத்துவிட்டது. அவர்களும் மனிதர்களே, இந்த நாட்டின் பிரசைகளே என்ற உணர்வும் நேயமும் அறவே அதற்கு இல்லை என்பதன் வெளிப்பாடு இது.

தினை விதைத்தால் மட்டுமே தினையை அறுவடை செய்ய முடியும், வினை செய்தால் அதுவே சூழும் என்பதனை தெளிந்து உணரும் வரை, தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வுகாண்பது குறித்துச் சிந்திக்கும் மனப்பாங்கு அரசுக்கு உண்டாகாது என்பதனையே தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அது நடந்து கொண்டுள்ள முறை தெட்டத் தெளிவாகத் தொட்டுக் காட்டுகிறது.

# கட்டுப்பாட்டை இழந்த மோ. சைக்கிள் மின் கம்பத்துடன் வேகமாக மோதியது

## மோ. சைக்கிள் ஓட்டியவர் தலையில் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப்.27

மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியதனால் தலையில் படுகாயமடைந்த நிலையில் தற்போது யாழ். போதனாவைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகிறார். இவரது தலைக்கவசம் சேதம் எதுவுமின்றிக் காணப்பட்டது.

இந்த விபத்துச் சம்பவம் தும்பளையில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் புலோலி மேற்கைச் சேர்ந்த முருகேசு நிதிறஞ்சன் (வயது - 34) என்பவரே படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

குறித்த நபர் பூசகர் ஒருவரைச் சந்தித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது விபத்து இடம்பெற்றது. தலையில் ஏற்பட்ட காயம், மற்றும் இவரது தலைக்கவசம் சேதம் எதுவுமின்றி விபத்து இடம்பெற்ற பகுதியில் காணப்பட்டமை ஆகியவற்றை வைத்து இவர் தலைக்கவசத்தை தலையில் அணியாது கையில் கொண்டு சென்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியால் பயணித்தவர்கள் விபத்துக்குள்ளானவரை மந்திகை ஆதாரவைத்தியசாலையில் அனுமதித்தனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். (த-4)

# சிறு கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு இந்திய அரசு 199 இலட்சம் ரூபா நிதியுதவி

கொழும்பு,ஏப்.27

யுத்தத்தினால் முடங்கிப் போன சிறு கைத்தொழிலை துரிதப்படுத்த அரசு அக்கறை எடுத்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

நல்லெண்ண அடிப்படையில் 199 இலட்சம் ரூபா நிதியை இதற்கென இந்தியா வழங்கியுள்ளது.

இதன் மூலம் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை செயற்பாடு துரிதப்படுத்தப்படும் என சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுச் செயலாளர் வி. சிவசோதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசு 25 மில்லியன் ரூபாவை அச்சுவேலியில் 65 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டடங்களை அமைக்கவும் ஒதுக்கியுள்ளது.

இப்பேட்டையினூடாக வடக்கிலுள்ள 5000 பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக்கிட்டும் என அரசு எதிர்பார்க்கின்றது.

கோழி வளர்ப்பு, உணவு பதனிடல், கறைபடியா உருக்கு, சவர்க்காரம், தேங்காய் எண்ணெய், காரியாலயத் தளபாடங்கள், பிளாஸ்ரிக் பொருள்கள் உற்பத்தி, கயிறு, தும்பு சார்ந்த உற்பத்திகளுடன் இலகு பொறியியல் வசதிகளும் திட்டமிடப்பட்டுள்ளதாக செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# தொடர்ந்து பெய்யும் மழையினால் மரக்கறி வகைகள் அழுகும் நிலையில்

வலி. வடக்கு, ஏப்.27

யாழ். மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் மழை காரணமாக விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். தோட்டங்களில் மரக்கறிவகைகள் அழுகிப்போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இறுதியிலும் யாழ்ப்பாணத்தில் பெய்த தொடர் மழையினால் மரக்கறி வகைகள் அழுகியதுடன் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கினார்கள். அதேபோன்று தற்போதும் தொடர்ந்து பெய்யும் மழையினால் மரக்கறிப் பயிர்கள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தென்பகுதியில் மரக்கறிச் செய்கையாளர்கள் பயிர்களுக்குக் காப்புறுதி செய்து இத்தகைய இயற்கை அழிவுகளின்போது நட்டஈட்டைப் பெற்றுக் கொள்கின்ற போதிலும் வட பகுதி செய்கையாளர்கள் காப்புறுதி விடயத்தில் பின்னிற்பதனால் இத்தகைய அழிவுகளின்போது எந்த வகையான நட்டஈடுகளும் கிடைக்கப்பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-86)

# தந்தை செல்வாவின் நாடாளுமன்ற உரைகள் அடங்கிய நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப்.27

'இலங்கைப் பாராளுமன்றத்தில் தந்தை செல்வாவின் எழுச்சி உரைகள்' என்ற நூல் நேற்று வெளியிடப்பட்டது.

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை வெளியீடாக இந்த நூல் வெளிவந்துள்ளது. இலங்கைத் தமிழர் உரிமைப் போராட்ட வரலாற்றில் பெரும் பங்காற்றிய தந்தை செல்வா, நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரைகளின் தொகுப்பாக இந்த நூல் அமைந்துள்ளது. இதில், தேசியக் கொடி, குடியுரிமை மசோதா, தேர்தல் திருத்த மசோதா, இந்திய பாகிஸ்தானிய குடியிருப்போர் பிரஜா உரிமைச் சட்டம், ஆளுநர் உரைக்கு நன்றிதெரிவித்தல், அரச கரும மொழி மசோதா, அரச கரும மொழி இரண்டாவது வாசிப்பு என ஏழு தலைப்புகளில் தந்தை செல்வாவின் உரைகள் அடங்கியுள்ளன. தந்தை செல்வாவின் 34 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு யாழ். நகரிலுள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் இடம்பெற்றது. அதன் ஓர் அங்கமாக இந்த நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. தந்தை செல்வா நினைவு அறங்காவல் சபையின் தலைவர் பேராயர் எஸ். ஜெபநேசன் அடிகளார் இந்த நூலின் முதல் பிரதியை தமிழரசுக் கட்சியின் பிரமுகர் சி.வி.கே. சிவஞானத்திடம் வழங்கி வெளியிட்டு வைத்தார். (த-14)

# 'சார்க்' திரைப்பட விழா கொழும்பில்

கொழும்பு,ஏப்.27

'சார்க்' கலாசார நிலையத்தினரால் மே 11 ஆம் திகதி முதல் மே 15 ஆம் திகதி வரை 'சார்க் திரைப்பட விழா' கொழும்பில் நடத்தப்படவுள்ளது. இதனைப் பொது மக்களும் பார்வையிட முடியும். அத்துடன் சர்வதேச ஜூரிகளால் தெரிவு செய்யப்படும் சிறந்த விவரணப் படங்களுக்கு இதில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. திரைப்பட ஆர்வலர்களுக்குத் தூண்டுதலாக அமையும் இவ்விழாவினை பொது மக்கள் இலவசமாகக் கண்டுகளிக்கலாம் எனவும் இதற்கான படங்களும் திரையிடப்படவுள்ள நேரமும் பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் ஐ.நா. அறிக்கையும் அதையே வெளிப்படுத்துகின்றது

## தந்தை செல்வா நினைவு நிகழ்வில் பேராசிரியர் சத்தியசீலன்

யாழ்ப்பாணம்,ஏப்.27

அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும். இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவின் அறிக்கையும் இதனையே வெளிப்படுத்துகிறது எனத் தெரிவித்தார் பேராசிரியர் எஸ்.சத்தியசீலன்.

யாழ்.முற்றவெளியில் உள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் இடம்பெற்ற தந்தை செல்வாவின் 34ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தந்தை செல்வநாயகம் தெளிந்த ஞானமும் யாருக்கும் விட்டுக்கொடுக்காத தமிழினப் பற்றும் கொண்டவர். மெழுகுதிரிபோல் தமிழ் மக்களுக்கு பல்வேறு தியாகங்களைச் செய்தவர் தந்தை செல்வா. இவர் மதபேதமின்றி மக்களுக்குப் பல தியாகங்களைச் செய்தவர். இன்றைய காலகட்டம் மிகவும் வித்தியாசமானது.

அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் என்ற சிலப்பதிகார யதார்த்தம் இன்று இலங்கையில் நிதர்சனமாகிவிட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கை அதனை நிரூபிக்கிறது- என்றார்.

இந்த நிகழ்வில் அஞ்சலி உரை நிகழ்த்திய மௌலவி மௌமுத்:

தந்தை செல்வா, இஸ்லாமிய மக்களுக்கு மகத்தான சேவைகளைச் செய்தவர். இஸ்லாமியத் தலைவர்களுக்கு வழிகாட்டியாக- முன்னோடியாக- வாழ்ந்தவர்.



இஸ்லாமிய மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் போது அது தொடர்பாக நாடாளுமன்றில் குரல் கொடுத்தவர். இஸ்லாமிய மக்கள் தந்தை செல்வாவுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு நன்றியுடையவர்களாக இல்லை எனின் அல்லாவுக்கு நன்றிக் கடன் இல்லாதவர்களாகவே நாம் இருப்போம் - என்றார். (த-14)

# திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசைத் தினம்

யாழ்ப்பாணம்,ஏப்.27

காரைநகர்,ஈழத்துச்சிதம்பரம் சிவன் ஆலயத்தில் திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசைத் தினம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பெரிய புராணம் ஓதும் நிகழ்வும் இடம் பெறும்.

இந்த ஆலயத்தில் தினமும் வெள்ளிக்கிழமைகளில் திருவாசக முற்றோதல் நிகழ்வும் அன்னதானமும் இடம்பெறும்.

எதிர்வரும் ஜூன் மாதம் 6ஆம் திகதி குடமுழுக்கு பெரும் சாந்தி விழாவும் இடம்பெறும்.

# ஹாட்லிக் கல்லூரியில் மாபெரும் மருத்துவக் கண்காட்சி

யாழ்.மருத்துவ பீடத்தின் 4ஆம் வருடத்தைச் சேர்ந்த மாணவர் குழு சமுதாய மருத்துவத்துறை, யாழ்.மருத்துவபீடம் மற்றும் வைத்திய அதிகாரிகளின் ஆலோசனைகள், வழிகாட்டல்களுடன் இந்தமாதம் 29ஆம், 30 ஆம் மற்றும் மே மாதம் முதலாம் திகதிகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் மருத்துவக் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளது.

இங்கு எமது சமூகத்தில் காணப்படும் பொதுவான தொற்றுதல் அடையாத நோய்களான- நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், மாரடைப்பு, தொய்வுநோய் (ஆஸ்துமா), புற்றுநோய், கண்- பார்வை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் வீதி விபத்துக்கள், முதலுதவி என்பன தொடர்பாகப் பூரண விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

அத்துடன் நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், தொய்வுநோய் தொடர்பாக இலவச மருத்துவப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு, தெரிவு செய்யப்பட்டவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக அனுப்பப்படுவர்.

தொய்வுநோய் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு இலவச உறிஞ்சிகளும் உறிஞ்சிகளை எவ்வாறு சரியான நுட்பத்துடன் பாவிப்பது தொடர்பாகப் பூரண அறிவுறுத்தல்களும் வழங்கப்படவுள்ளன.

இந்தக்கண்காட்சியானது முக்கியமாக வடமராட்சி மாணவர்களுக்கும், மக்களுக்கும் கூடுதலான பயனுடையதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், வடமராட்சியைச் சேர்ந்த முக்கிய பாடசாலைகளின் ஜி.சி.ஈ. சாதாரணதர, உயிரியல் மாணவர்களும் இந்தக் கண்காட்சி

ஊடக அனுசரணை: உதயன்

யில் விசேட முறையில் பயிற்றுவிக்கப்பட்டு உள்வாங்கப்பட்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்தக்கண்காட்சியின் தொடக்க விழாவுக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் என். நந்தகுமாரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (த-236)

# மாகாண சபை வைத்தியசாலைகள் மத்திய அரசால் சுவீகரிக்கப்படமாட்டா

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 27

மாகாண சபைகளால் நிர்வகிக்கப்பட்டுவரும் எந்தவொரு வைத்தியசாலையும் மத்திய அரசால் சுவீகரிக்கப்படமாட்டாதென சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பரவலாக்கலின் கீழ் மாகாண சபைகளின் கீழ்வரும் வைத்தியசாலைகளை நிர்வகிக்கும் அதிகாரம் அந்தச் சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதால் அவற்றின் நிர்வாகத்தில் மத்திய அரசு தலையிட வேண்டிய அவசியம் கிடையாதென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

கந்தளாய் ஆதார வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளைத் தெரிந்து கொள்வதற்காக அங்கு சென்ற அமைச்சர், அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலின்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.'

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த காலங்களில் நாடெங்கும் மூடப்பட்ட 97 வைத்தியசாலைகளை மீண்டும் இயங்கச் செய்ய துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றுக்குத் தேவையான உபகரணங்களும், வைத்தியர்களும் ஏற்பாடு செய்யப்படும்.

மாகாண சபை வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் பிரதான வைத்தியசாலைகளில் நிலவும் நெருக்கடிகளைத் தவிர்க்க முடியும்.

அடுத்த ஐந்து வருடங்களுக்குள் நாட்டின் சுகாதார சேவையை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன -என்றார். (ச-5)

# மரக்கறி விலைகள் வீழ்ச்சி: விவசாயிகள் பெரும் பாதிப்பு

கொழும்பு,ஏப்.27

தம்புள்ள மொத்த விற்பனை நிலையத்தில் மரக்கறி விலைகளின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்குகின்றார்கள்எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மலையகத்தில் இருந்துவரும் போஞ்சி, லீக்ஸ் ஆகியவற்றின் மொத்தவிலை 20-30 ரூபாவாகவும் ஏனைய பிரதேசங்களில் இருந்து வரும் வெள்ளரி,வெண்டி, கொத்தவரங்காய், புடலங்காய், பீர்க்கங்காய், பாகற்காய் போன்றவற்றின் மொத்த விலை2-18 ரூபாவரையில் விற்கப்படுகின்றன.

கறிமிளகாய் மற்றும் பச்சைமிளகாயின் மொத்த விலை 180-220 ரூபாவரையிலும் கரட், கத்தரி, கோவா ஆகியன 70-90 ரூபாவரை விற்கப்படுகின்றது. வெளிப்பிரதேசங்களில் இருந்து தம்புள்ளைக்கு வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால் இந்த விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.(ச-5)

# இந்தியாவை நம்பியிருந்த காலம் மலையேறிவிட்டது; எமது நாடும் எமது மக்களுமே எனக்கு முக்கியம்!

## அமைச்சர் டக்ளஸின் தத்துவம் இது!

எமது பிரதேச மீனவர்கள் சுதந்திரமாகக் கடற்றொழில் செய்ய வேண்டும். எமது நாடும் மக்களும்தான் எனக்கு முக்கியம். இந்தியாவை ஒரு காலத்தில் நாம் நம்பியிருந்தது உண்மைதான். எனினும், இப்போது இந்தியா எமக்கு இரண்டாம் பட்சம்தான். இவ்வாறு பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தலைமையில் பருத்தித்துறைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சருடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சிவஞானம் சிறீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆரம்ப உரை நிகழ்த்தினார்.

இந்தக் கூட்டத்தில் துறை சார் பிரச்சினைகள் ஒவ்வொன்றாக ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன.

இதன்போது இந்திய இழுவைப்படகுகள், இந்திய மீனவர்களின் ஊடுருவல்கள் தொடர்பாக வடமராட்சி வடக்கு, கிழக்கு மாகாணத்துறை மீனவர் சங்கப் பிரதிநிதிகள் விலாவாரியாக எடுத்துக் கூறி அந்தப் பிரச்சினைகளை நிரந்தரமாகத் தீர்க்க வேண்டும் என அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு அமைச்சர் பதிலளிக்கையில்-

தீவிர முயற்சி எடுத்து எமது கடற்பகுதிகளுக்கு இந்திய மீனவர்கள் ஊடுருவலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். எமது கடற் பகுதிகளில் இந்திய இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப்பை நிறுத்துவது தொடர்பாகப் பல கட்டப் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இந்த நிலையில் டக்ளஸ்தான் இந்திய மீனவர்களைத் தடுக்கிறார், பிடிக்கிறார் என இந்தியத்தரப்புக்குச் சொல்லப்படுகின்றது. இப்போது எனக்கு எனது நாடும் மக்களும்தான் முக்கியம். முன்னைய காலங்களில் இந்தியாவை நம்பியிருந்தது உண்மைதான். இப்போது நிலைமை அப்படியல்ல. இந்தியா எமக்கு இரண்டாம் பட்சம்தான்.

எமது மக்கள் சுதந்திரமாகத் தொழில் செய்யவேண்டும். தற்போது இந்தியாவில் 45 நாள்கள் கடற்றொழில் நிறுத்தம் நடைபெற்று வருகிறது. இதனால் எமது கடல்பரப்பில் அவர்களது ஆதிக்கம் இப்போது இல்லை. இது நீடிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

இலங்கைக் கடற்பரப்பில் சிறுதொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மிக அதிகமானோர் இருக்கிறார்கள். அதேநேரம் அழிந்துவரும் கடல் வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இதன் காரணமாகவே இலங்கைக் கடற்பரப்பில் பெரும் தொழில் அதாவது இழுவைப் படகுகளைப் பாவித்தும் 'ராங்' முறையைப் பாவித்தும் தொழில் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை காரணமாக இந்திய இழுவைப்படகுகளும் எமது கடற்பரப்பில் தொழில் செய்ய முடியாது.

தொண்டைமானாறு தொடக்கம் பொலிகண்டி வரையான கடல் பகுதி வான்பாதை வெட்டப்பட்டுள்ளது. பொலிகண்டி தொடக்கம் கற்கோவளம் வரை எதிர்காலத்தில் வான்பாதை வெட்டப்படும் - என்றார்.

இதேவேளை, வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் வாழும் மீனவர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாக நிவாரணம் வழங்கப்படவில்லை என்று மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத் தலைவர் எஸ்.யோகராஜன் எடுத்துக் கூறினார். இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தி, தடைப்பட்ட நிவாரணம் விரைவாகக் கிடைக்கும் என்று அமைச்சர் டக்ளஸ் உறுதியளித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகள் திருத்தம் தொடர்பான பிரச்சினை முன்வைக்கப்பட்ட போது -

இந்திய அனுசரணையுடனான வீட்டுத்திட்டம் இழுபறியில் உள்ளது. இந்திய வீட்டுத் திட்டம் அல்லது தேசிய வீடமைப்பு அதிகாரசபை வீட்டுத் திட்டம் இந்த இரண்டில் ஏதாவது ஒரு திட்டத்துக்குள் சேதமடைந்த வீடுகளைத் திருத்திக் கொள்ளலாம் - என்றும் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார். (த-236)

# இறுதி யுத்த உயிரிழப்புக்களை ஐ.நா.சபை தடுத்திருக்க முடியும்

## முன்னாள் பேச்சாளர் கோர்டன் வைஸ் கூறுகிறார்

இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது ஏற்பட்ட பெரும் எண்ணிக்கையிலான பொது மக்கள் உயிரிழப்புக்களை ஐ.நா தடுத்திருக்க முடியுமென ஐ.நா வின் முன்னாள் பேச்சாளர் தெரிவித்துள்ளார் என பி.பி.சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை நிறுத்த இலங்கை அரசின்மீது ஐ.நா கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்திருக்க வேண்டுமென, இலங்கை யுத்தம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த காலத்தில் கொழும்பில் ஐ.நா. தலைமையகத்தின் பேச்சாளராக இருந்த கோர்டன் வைஸ் சுட்டிக் காட்டியுள்ளார்.

யுத்தத்தின் இறுதி ஐந்து மாதக் காலப்பகுதியில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லையென சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு அடிக்கடி வாக்குறுதிகளை அளித்த போதிலும், பெருமளவிலான பொதுமக்கள் அரச படைகளின் ஷெல் தாக்குதல்களால் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஐ.நா நிபுணர் குழு கண்டறிந்துள்ளதாகவும் கோர்டன் வைஸ் பிபிசி சிங்கள சேவையான சந்தேஷய விடம் கூறினார். பொதுமக்களின் ஆள்சேதங்கள் பற்றிய கணக்கெடுப்புக்களை ஐ.நா. எடுக்க முற்பட்டபோதெல்லாம், இலங்கை அரசு அதற்கு முட்டுக்கட்டைகளைப் போட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அழிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இந்திய அரசும் இருந்ததால், பொதுமக்கள் உயிரிழப்புக்களை அது கண்டுகொள்ளவில்லையெனவும் ஐ.நாவின் முன்னாள் பேச்சாளர் தெரிவித்தார்.

யுத்தப் பிரதேசத்தில் பொது மக்கள் இருந்த வலயத்துக் குள்ளிருந்தும் இந்தியாவுக்குப் பலமான புலனாய்வு வசதிகள் இருந்துள்ளன என்பதும் கோர்டன் வைஸின் கருத்து.

விடுதலைப் புலிகளின் எஞ்சியிருந்த தலைவர்களைச் சரணடையுமாறு இலங்கை அரசிடமிருந்து தூண்டுதல் இருந்தது.



இதே வேளை, விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் அரசிடம் சரணடைந்தனர் என்றும் கூறும் ஐ.நாவின் கொழும்புத் தலைமையக முன்னாள் பேச்சாளர், அவர்கள் பின்னர் கொல்லப்பட்டுவிட்டனர் எனக் குற்றஞ்சாட்டப்படுவதாகவும் பி.பி.சி.யிடம் கூறினார்.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் யுத்தக் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன என்று கண்டறிந்துள்ள ஐ.நா. தலைமைச் செயலரின் ஆலோசனைக்கான நிபுணர் குழு, அந்தக் குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசின் மீதும் விடுதலைப் புலிகளின் மீதும் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்கள் கூடி ஆராய்வு

## தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு தொடர்பாக

கொழும்பு, ஏப். 27

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்கள் நேற்றுமுன்தினம் கொட்டகலையில் கூடி கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் ஆராய்ந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பிரதி நீதியமைச்சருமான வீ.புத்திர சிகாமணி தலைமையில் இந்தச் சந்திப்பு கொட்டகலை போவட் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் சிரேஷ்ட தொழிற்சங்கவாதிகளான சதாசிவம், லோரன்ஸ் உட்பட இதர தொழிற் சங்கங்களின் செயலாளர்களும் கலந்துகொண்டனர். எனினும் தொழிலாளர் தேசிய சங்கத்தின்தலைவர் பழனி திகாம்பரம் கலந்து கொள்ளவில்லை.

நேற்றுமுன்தினம் கூட்டத்தின் போது, கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற் சங்கங்கள் எந்தவிதமான கோரிக்கைகளை முன்வைக்கவேண்டும். தினசரி சம்பளம் எவ்வாறு தீர்மானிக்கப்படவேண்டும் என்பன தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளன. (சி)

# அடிப்படை வசதிகள் குறித்து ஆராய்வு

முல்லைத்தீவு, ஏப்.27

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்ந்துள்ள மக்களின் நிலைமைகள் குறித்து திணைக்களத் தலைவர்களுடனும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கலந்துரையாடலொன்றை நேற்றுமுன் தினம் நடத்தியுள்ளார்.

முல்லைத்தீவில் மீள்குடியமர்வு செய்யப்பட்டுள்ள பகுதிகளை சென்று பார்வையிட்ட மீள்குடியேற்றப் பிரதியமைச்சர், அங்குள்ள மக்களுக்கு சரியான முறையில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படவில்லை. இவர்களுக்கான அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கூறியதாக அந்த மாவட்ட அரச அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்துள்ளார். (ச)

## சாரணியர் பெருமை...



கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் முதல் தடவையாகப் பெண்கள் சாரணியப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

# பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே சுமுகமான உறவு இருந்தால் குற்றங்கள் குறையும்

பொதுமக்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் பொலிஸார் சிறப்பாகச் செயற்பட முடியும். எனவே, பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நம்பிக்கை, ஐக்கியம், இணக்கப்பாடு என்பன ஏற்பட வேண்டும். அவற்றை நிலைநிறுத்தவே விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

-இவ்வாறு பருத்தித்துறைப் பொலிஸார் நடத்திய புத்தாண்டு விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் போவத்தை தெரிவித்தார். பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில்,பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசாந்புசல்ல தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் பரஸ்பரம் நல்லுறவு, ஒற்றுமை, நம்பிக்கை, ஐக்கியம் என்பன ஏற்பட வேண்டும். இத்தகைய விளையாட்டு நிகழ்வுகள் எம்மிடையே ஒற்றுமை, நம்பிக்கை, ஐக்கியத்தை வளர்க்கும். பரஸ்பர நல்லுறவு மூலம் குற்றச் செயல்கள் குறைந்த சமுதாயத்தை உருவாக்க முடியும்.

பொதுமக்களின் ஒத்துழைப்பால் இந்தப் பகுதியில் குற்றச்செயல்கள் வெகுவாகக் குறைந்துவிட்டன. இந்தநிலை தொடர்ந்து நீடிக்க வேண்டும். முதன்முறையாகப் பொது அமைப்புக்களுடன் பொலிஸார் இணைந்து நடத்தும் இந்த விளையாட்டுப் போட்டி மூலம் எதிர்காலத்தில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஒரு சுமுக உறவு ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு - என்றார். (236)

# பாபாவுக்கு உலகம் முழுவதும்180 நாடுகளில் சொத்து

## 5 லட்சம் கோடி இந்திய ரூபா

கொழும்பு, ஏப். 27

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அறக்கட்டளை நடத்தி வரும் 180 நாடுகளிலுள்ள பாடசாலைகள், ஆசிரமங்கள், சமூக சேவை நிறுவனங்கள் ஆகியவற்றின் சொத்துக்களைக் கணக்கிட்டால் இந்திய நாணயப்படி 5 லட்சம் கோடி ரூபா இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

'ஆன்மிக வள்ளல்' என்று உலகமே புகழும் ஸ்ரீ சத்ய சாயி பாபா கடந்த 70 ஆண்டுகளாக செய்த சித்தாடல்கள் ஏராளம். அவர் கையை ஒரு சுழற்று சுழற்றினால் கைக்கடிகாரம், மோதிரம், பூ, இனிப்பு என்று வந்தன. அவற்றை பெற்றவர்களின் வாழ்வில் பிரச்சினைகள் தீர்ந்தன.

சாயிபாபா முன்பு சிறிது நேரம் உட்கார்ந்துவிட்டுச் சென்றாலே மனம் அமைதியாகி, பிரச்சினைகள் தீர்ந்து விடுகின்றன என மக்கள் கூறுகின்றனர். இதன் காரணமாகத்தான் சாயி பாபாவிடம் கோடிக் கணக்கான பணம் நன்கொடையாகத் திரண்டது.

அதை வைத்து 1972 ஆம் ஆண்டு ஸ்ரீ சத்ய சாய் அறக்கட்டளையை சாயிபாபா தொடங்கினார். இந்த அறக்கட்டளையின் தலைவராக சாயி பாபா இருந்தார். செயலாளராக முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி சக்கரவர்த்தி உள்ளார்.

அறக்கட்டளை உறுப்பினர்களாக மும்பை தொழில் அதிபர் இந்துலால் ஷா, உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி பி.என்.பகவதி, டி.வி.எஸ். நிறுவனத் தலைவர் வேணு சீனிவாசன், சத்யசாயி பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் எஸ்.வி.கிரி, சாயி பாபாவின் இளைய சகோதரர் ஜானகிராமின் மகன் ரத்னாகர் ஆகியோர் உள்ளனர்.

### புட்டபர்த்தியில் ரூ.40 ஆயிரம் கோடிக்கு சொத்து

சாயி பாபா அறக்கட்டளைக்கு வருமான வரித்தாக்கல் ஆவணத்தின்படி புட்டபர்த்தியில் இந்திய நாணயப்படி ரூ.4ஆயிரம்கோடிக்கு சொத்துகள் இருக்கின்றன எனத் தெரியவந்துள்ளது. ஆனால், ஆந்திர மாநில அரசு அதிகாரிகள் எடுத்த கணக்கெடுப்பின்படி இந்திய நாணயப்படி ரூ.40 ஆயிரம் கோடிக்கு சொத்துகள் இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

சுமார் 180 நாடுகளில் சாயிபாபா அறக்கட்டளை நடத்தி வரும் பாடசாலைகள், ஆசிரமங்கள், சமூக சேவை நிறுவனங்கள் ஆகியவற்றின் வருவாய், சொத்துகள் ஆகியவற்றைக் கணக்கிட்டால் இந்திய நாணயப்படி அது ரூ. 5 லட்சம் கோடி அளவுக்கு இருக்கும் என்று தெரிய வந்துள்ளது.

இந்தச் சொத்து தகவல்களை தொகுக்கும் பணி நடந்து வருகிறது. அறக்கட்டளையை நிறுவிய சாயிபாபா தனது சமூக சேவையைத் தன் ஊரில் இருந்தே ஆரம்பித்தார். புட்டபர்த்தியை எல்லா வசதிகளும் கொண்ட நகரமாக மாற்றினார். தனக்கு வந்த நன்கொடை பணத்தையெல்லாம் கல்வி, மருத்துவம், சமூகசேவை ஆகிய பணிகளுக்கு வாரி, வாரி வழங்கினார்.

### 300 கோடி ரூபா நன்கொடை

ஐசக் டைகுரட் என்ற அமெரிக்கர் 1991 ஆம் ஆண்டு சாயி பாபா அறக்கட்டளைக்கு 300 கோடி ரூபா நன்கொடை வழங்கினார். அந்தப் பணத்தைக் கொண்டு புட்டபர்த்தியில் 10 மாதத்தில் உலக புகழ்பெற்ற ஸ்ரீ சத்ய சாயி வைத்தியசாலையை உருவாக்கினார்.

360 படுக்கைகளுடன் பிரமாண்டமாகக் கட்டப்பட்ட அந்த வைத்தியசாலையில் இன்று வரை அனைவருக்கும் இலவசமாக எல்லாவித சிகிச்சைகளும் அளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதுபோல பெங்களூரில் இந்திய நாணயப்படி ரூ.500 கோடி மதிப்பில் மற்றொரு நவீன வைத்தியசாலையைக் கட்டினார். புட்டபர்த்தியில் வைத்தியசாலை தவிர பல்கலைக்கழகம், உலக ஆன்மிக மியூசியம், அறிவியல் கோளரங்கம், ரயில் நிலையம், விளையாட்டு ஸ்ரேடியம், இசைக் கல்லூரி, விமான நிலையம், உள்விளையாட்டு அரங்கம், விளையாட்டு வளாகம் ஆகியவை சாயிபாபா ஆசீர்வாதத்தால் கட்டப்பட்டன.



இவை தவிர நாடெங்கும் 1,200 இற்கும் மேற்பட்ட சத்ய சாயி வழிபாட்டு மையங்கள் உள்ளன. சுமார் 180 நாடுகளில் கல்வி, கலாசார மையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின் மொத்த மதிப்பு இந்திய நாணயப்படி ரூ.4.5 லட்சம் கோடி வரை இருக்கும் என்று முன்பு கூறப்பட்டது.

ஆனால், இந்திய நாணயப்படி 5 லட்சம் கோடியைத் தாண்டும் அளவுக்குச் சொத்துக்கள் உள்ளன என்று தற்போது தெரியவந்துள்ளது. (ஒ-சி)

# வடக்கின் துரித அபிவிருத்திக்கு 1130 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## யாழ்.அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.27

வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டத்துக்கு 1130.55 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வடமராட்சி கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்திக்கு அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பல்வேறு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்த வரிசையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டதுக்கு 1130.55 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலைகள், வீதிகள், பொதுக் கட்டடங்கள், வைத்தியசாலைகள் உட்படப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் யாழ். மாவட்டத்தின் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்றார் அரச அதிபர்.

(த-9)

## சேவைக்காக...



என்றும் நினைவுடன்: தந்தை செல்வநாயகத்தின் 34 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று யாழ்.நகரிலுள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் இடம்பெற்றது. அதன் போது தமிழரசுக் கட்சியின் பிரமுகர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் நினைவிடத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்துகின்றனர். (த-14-23)

# பிரதான தமிழ் நூலகங்களுக்கு வருடந்தோறும் நூல் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்படும் ஆய்வு நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களிடம் இருந்து திணைக்களத்தாற் கொள்வனவு செய்யப்படும் நூல்கள் என்பன பொதி செய்யப்பட்டு வருடந்தோறும் பிரதான தமிழ் நூலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

நூலகங்களின் தரத்துக்கேற்பவே இந்த நூல்பொதிகள் வழங்கப்படுவதால் தமிழ் நூலகங்களைச் சிறந்த முறையில் பேணும் அமைப்புக்கள், பொதுசன நூலகங்கள், தேசிய மற்றும் உயர் வகுப்புக்களைக் கொண்ட நூலகங்கள் உள்ள பாடசாலைகள் என்பன நூல்கள் பற்றிய விவரங்களை, பிரதேசசெயலாளர், கிராம சேவையாளர்கள் அல்லது உரிய பாடசாலை அதிபர்களின் சான்றுப்படுத்தல்களுடன் எதிர்வரும் மே மாதம் 03 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அவர் அறிவித்துள்ளார்.

சமர்ப்பிக்கப்படும் விவரங்களில் நூலகத்தின் பெயர், நடத்தும் அமைப்பு, முகவரி, மாவட்டம், சான்றுபடுத்தும் உத்தியோகத்தரின் ஒப்பம், பதவிமுத்திரை, தொலைபேசி இலக்கம் ஆகிய விவரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

மேற்குறித்த விவரங்கள் உள்ளடக்கப்படாத கோரிக்கைகள் நிராகரிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

# ரயில் கடவையில் குவியும் குப்பை அரசடி வீதியில் சுகாதாரச் சீர்கேடு

வலி.வடக்கு, ஏப்.27

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள ரயில் கடவையில் கொட்டப்படும் குப்பைகளால் அந்தப் பகுதியின் சுற்றாடல் சுகாதாரச் சீர்கேடுகளுக்கு உள்ளாகும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

பொது மக்களும் பாடசாலை மாணவர்களும் அதிகம் போக்குவரத்துச் செய்யும் அரசடி வீதி மற்றும் ரயில்பாதை ஆகியவை இதனால் கடுமையாகச் சுகாதாரச் சீர்கேட்டுக்கு உள்ளாகியுள்ளதுடன், அயலில் குடியிருப்பவர்களும் துர்நாற்றத்தின் மத்தியில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையினரால் சேகரிக்கப்படும் குப்பைகளும் இந்த இடத்தில் குவிக்கப்பட்ட பின்னர் தான் ஏற்றிச்செல்வது வழமையாகும். தற்போது யாழ்ப்பாணத்தில் பெய்யும் மழை மற்றும் பொது மக்கள் கொண்டுவந்து போடும் மிருகங்களின் கழிவுகள் ஆகியவற்றால் இந்தப் பகுதி பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதுடன் அயலில் உள்ள பாடசாலை மாணவர்களும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். (த-86)

# உப தபாலகங்கள் இயங்கும் தனியார் கட்டடங்களுக்கு வாடகை

யாழ்ப்பாணம், ஏப். 27

தனியார் கட்டடத்தில் இயங்கும் உபதபாலகங்களுக்கு வாடகைப் பணம் வழங்குவதற்கு உபதபாலகத்தின் தொழிற் சங்கத்தால் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ். பிரதம தபாலகத்தில் இடம்பெற்ற உபதபாலதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் தற்போது சேவையிலுள்ள அதிகளவு தபாலகங்கள் வாடகை வீடுகளிலும், பொது இடங்களிலும் இயங்கி வருவதால் இவற்றுக்கான வாடகைப் பணத்தை உபதபாலதிபர்கள் செலுத்தவேண்டிய தேவை இருந்தது.

தற்போது தபாலகங்கள் பெருமளவு நட்டத்தில் இயங்கி வருவதால் சேவையிலிருக்கும் தபாலதிபர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கிராமங்களில் இயங்கும் தபாலகங்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் நகரங்களில் இயங்கும் தபாலகங்களுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும் வாடகைப் பணமாகவும் ஏனைய இதர செலவுகளுக்கு மேலதிகமாக 500 ரூபாவும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(எ-313)

# விபத்துக்களில் காயமடைந்த நால்வர் வைத்தியசாலையில்

தென்மராட்சி,ஏப். 27

மழை பெய்த வேளையில் உழவு இயந்திரப் பெட்டிகளில் ஏற்றப்பட்ட ஓலை மற்றும் பொதிகளில் அமர்ந்து வந்த வேளையில் அவற்றிலிருந்து தவறி வீழ்ந்து காயமடைந்த வெவ்வேறு சம்பவங்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

மிருசுவில் பகுதியில் உழவு இயந்திரப் பெட்டியில் ஏற்றப்பட்ட ஓலை மீது அமர்ந்து வந்த வேளையில் தவறி வீழ்ந்து உழவு இயந்திரச் சில்லுக்குள் கால் அகப்பட்டு பூ.முகுந்தகுமார் (வயது-32) என்பவரும்,

புத்தூரிலிருந்து வெங்காயப் பொதிகள் ஏற்றி வந்த உழவு இயந்திரப் பெட்டியில் அமர்ந்து வந்த வேளையில் தவறி வீழ்ந்து கை முறிந்த நிலையில் மட்டுவில் சந்திரபுரத்தைச் சேர்ந்த க.நிரஞ்சன் (வயது-19) என்பவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை - டிப்பர் வாகனமும் சைக்கிளும் மோதிக் கொண்டதில் சிவகுமார் (வயது- 28) என்பவர் காயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ரியூசனுக்குச் சென்ற மாணவியை மோதிய சம்பவம் நேற்று முன்தினம் கச்சாயில் இடம்பெற்றது.

கெற்பேலியைச் சேர்ந்த இராசதுரை கஜீதா (வயது-16) என்பவர் காயமடைந்தார். மாணவியை மோதிய மோட்டார் சைக்கிள் அங்கிருந்து தப்பியோடி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாணவி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(த-207)

# தந்தை செல்வா நினைவு நிகழ்வில் பெருமளவானோர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஏப்.27

தந்தை செல்வாவின் 34 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்று யாழ். முற்றவெளியில் உள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெற்றது.

கடந்த வருடங்களை விட இம்முறை பெரும் எண்ணிக்கையானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உணர்வு பூர்வமாக மலர் அஞ்சலி செய்தனர்.

இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் என அனைத்து மதங்களையும் சேர்ந்த மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

தந்தை செல்வா அறங்காவலர் சபையின் தலைவர் இளைப்பாறிய பேராயர் எஸ். ஜெபநேசன் அடிகளார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. தந்தை செல்வநாயகத்தின் புதல்வர் சந்திரஹாசன், செல்வநாயகத்தின் பேர்த்தியாரான பூங்கோதை சந்திரஹாசன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவரது நினைவுச் சமாதிக்கு மலர் தூவி அஞ்சலி செய்யப்பட்டது.

பின்னர் அங்கு அஞ்சலி உரைகள், நினைவுப் பேருரைகள் என்பன இடம்பெற்றன. பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் வரவேற்புரை நிகழ்த்தினார். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம் பந்த பரமாசாரிய சுவாமிகள், மௌலவி மௌமுத், அருட்திரு. ஏ.எம்.ஜெயசேகரம், செல்வநாய கம் சந்திரஹாசன் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த் தினர்.

'தமிழர் பாரம்பரியப் பிரதேசம்: விவசாய அபிவிருத்தியும் நீர் வளப் பயன்பாடும்' என்ற தலைப்பில் பேராசிரியர் இரா.சிவசந்திரன் நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

'இலங்கைப் பாராளுமன்றத்தில் தந்தை செல்வாவின் எழுச்சி உரைகள்' என்ற நூலும் இதில் வெளியிடப்பெற்றது.

இந்த நிகழ்வுகளில் தந்தை செல்வாவின் ஆதரவாளர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், சொலமன் சூ.சிறில் மற்றும் தமிழரசுக்கட்சிப் பிரமுகர்கள், யாழ் மாநகரசபை உறுப் பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-14)

# மிதிவெடிகள் அகற்றியமைக்கான உறுதியை மட்டுமே அதில் ஈடுபடும் நிறுவனங்களால் வழங்க முடியும்

## கண்ணுக்குப் புலப்படாத வெடிபொருள்கள் அந்தப் பகுதிகளில் இருக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப்.27

மிதிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசங்களிலும் வெடிக்காத நிலையில் வெடிபொருள்கள் காணப்படலாம். எனவே அத்தகைய இடங்களுக்குச் செல்லும் பொதுமக்கள் அங்கு மிக அவதானத்துடன் செயற்படுதல் வேண்டும்.

மிதிவெடிச் செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும் உதவிக்குமான சர்வதேச தினத்தை ஒட்டி அண்மையில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சி நிகழ்வில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த மிதி வெடி அகற்றும் நிறுவனங்களின் பணிப்பாளர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் 'ஹலோட்ரஸ்', 'டெனிஸ்', இராணுவ மிதிவெடி அகற்றும் பிரிவு ஆகியவற்றின் பணிப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

அவர்கள் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்:

மிதிவெடிகள் வேறு, ஏவப்பட்டு வெடிக்காத வெடிபொருள்கள் வேறு. இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும் இடங்களில் மிதிவெடிகள் அகற்றப்பட்டமைக்கான உத்தரவாதத்தை மட்டுமே எம்மால் வழங்கமுடிகிறது.

அங்கு கண்களுக்குப் புலப்படாத வகையில் ஏதாவது வெடிபொருள்கள் இருக்குமானால் அதற்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர்.

அத்தகைய பிரதேசங்களில் மிதிவெடிகளை மட்டுமே எம்மால் அகற்ற முடியும். ஏவப்பட்டு வெடிக்காத நிலையிலுள்ள வெடி பொருள்கள் தரையின் மேற்பகுதியிலோ நிலத்தினுள் ஆழமான பகுதியில் புதைந்த நிலையிலோ காணப்படலாம். எமது கண்களுக்குப் புலப்படுபவற்றை எம்மால் அகற்ற முடிகிறது. ஏனையவை அகற்றப்படா.

இந்த நிலையில் மீள்குடியமரச் செல்லும் மக்கள் அங்கு காணிகளைத் துப்புரவு செய்யும் போதும் குப்பைகளைத் தீ மூட்டி எரிக்கும் போதும் தொடர்ச்சியான வெப்பத்தினாலும் வெடிபொருள்கள் வெடிக்கக் கூடிய சந்தர்ப்பமுள்ளன.

வெடிக்காத வெடிபொருள்கள் இலங்கையில் மட்டுமன்றி, உலகநாடுகளிலும் மீட்கப்படாத நிலைமை இன்றுவரை காணப்படுகின்றன.

எனவே, அத்தகைய பிரதேசங்களில் பொதுமக்கள் தமது பணிகளை முன்னெடுக்கும்போது விழிப்புடன் இருத்தல்வேண்டும். குறிப்பாகக் குப்பைகளைத் தீ மூட்டிய பின்னர் அந்த இடங்களிலில் இருந்து தூர விலகியிருத்தல் வேண்டும். முடியுமான வரை சன நடமாட்டமற்ற பகுதிகளில் குப்பைகளைச் சேர்த்துத் தீ மூட்டுதல் வேண்டும்.

கடந்த வருடங்களில் நிகழ்ந்த வெடிப்புச் சம்பவங்கள் குப்பைகளைத் தீ மூட்டும் சந்தர்ப்பங்களிலேயே அதிகமாக ஏற்பட்டவையாகும்.

கைவிடப்பட்ட காவலரண்கள், இராணுவ முகாம்கள், பதுங்குகுழிகள், மண் அணைகள், பயன்படுத்தப்படாத பாதைகள், வீடுகள், கட்டடங்கள், முட்கம்பிச்சுருள்கள் அடங்கிய பிரதேசம் போன்ற இடங்களில் இத்தகைய வெடிபொருள்கள் மற்றும் மிதிவெடிகள் காணப்படலாம். எனவே இந்த இடங்களில் பொதுமக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்றனர். (4)

# நாற்பது வருடங்களுக்கும் மேலாக திருத்தப்படாமல் இருக்கும் வீதிகள்

## கோப்பாய் பிரதேச செயலகக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 27

40 வருடங்களுக்கு மேலாகப் பல வீதிகள் செப்பனிடப்படாமல் உள்ளன எனவும் இந்தப் பகுதியில் அரச அதிகாரிகள், அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள் வசிக்கும் வீடுகள் உள்ள வீதிகள் மட்டும் குறுகிய காலத்தில் அடிக்கடி செப்பனிடப்படுகின்றன எனவும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதே இவ்வாறு மக்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவினுள் சிறுப்பிட்டி ஞான வைரவர் வீதி, வாதரவத்தை வீதி, இருபாலை தெற்குப் பகுதியில் உள்ள வீதிகள், வல்லை - அச்சுவேலி வீதி, கோப்பாய் - கைதடி வீதி, இராஜவீதி உள்ளிட்ட வீதிகள் செப்பனிடப்படவேண்டி உள்ளன.

இவை நீண்டகாலமாகச் செப்பனிடப்படாமல் போக்குவரத்து செய்யமுடியாதுள்ளதாக அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

கோப்பாய்ப் பிரதேச சபைப் பிரிவில் 228 வீதிகள் மிக நீண்டகாலமாகத் தார் ஊற்றப்பட்ட தற்கான தடயங்கள் இல்லாமல் காட்சியளிக்கின்றன.

ஆனால், அரச அதிகாரிகள் மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களின் வீடுகள் உள்ள வீதிகள் மீண்டும் மீண்டும் செப்பனிடப்படுகின்றன என்றும் மேலும் தெரிவித்தனர். (எ-14)

# அதிகாலையில் நடந்த திடீர் சோதனையால் சிக்கினர் 6 பேக்கரி உரிமையாளர்

சண்டிலிப்பாய், ஏப். 27

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் அதிகாலை வேளை சுகாதாரப் பரிசோதகர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் போது, சுகாதார விதிமுறைகளுக்கு மாறாக இயங்கிய ஆறு பேக்கரி உரிமையாளர்கள் வகையாக மாட்டிக் கொண்டனர்.

சுகாதார விதிமுறைகளுக்கு மாறாக உரப்பையில் பொதி செய்யப்பட்ட மற்றும் தட்டுடன் நிலத்தில் வைக்கப்பட்ட பெருந்தொகையான பாண்களைக் கைப்பற்றிய சுகாதாரப் பரிசோதகர், ஆறு பேக்கரி உரிமையாளர் மீதும் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

யாழ்.பிராந்திய உணவு, மருந்துப் பரிசோதகர் பி.சிவரூபன், சண்டிலிப்பாய் பிரதேச சுகாதார வைத்திய பிரிவைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர் மேற்பார்வையாளர் என்.நிர்மலானந்தன் ஆகியோர் தலைமையில் சென்ற சுகாதாரப் பரிசோதகர்கள் செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணியளவில் வலி. தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள 14 வெதுப்பகங்கள் மீது மேற்கொண்ட திடீர் சோதனையின் போது சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் இயங்கிவந்த ஆறு வெதுப்பக உரிமையாளர்கள் கையும்மெய்யுமாக அகப்பட்டுக் கொண்டனர்.

உரப்பையில் பொதி செய்யப்பட்ட பாண் மற்றும் தட்டுடன் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான பாண்களைக் கைப்பற்றிய சுகாதாரப் பரிசோதகர், மல்லாகம் நீதிமன்றில் இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (த-115)

## வேகம் விவேகம் அல்ல...




மிகக் கவனம்: சிறுப்பிட்டி எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு முன்னால் நேற்று நண்பகல் ஹை-ஏஸ் வானும் மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த இளைஞர் தலையிலும் காலிலும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சம்பவம் நடைபெற்ற இடத்தில் மோட்டார் சைக்கிளும் ஹை-ஏஸ் வானும். (த-253)

# முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம், ஏப். 27

தமது முதலீடுகளில் பங்குச் சந்தை முதலீட்டைப் பகுதியாக இணைத்துக்கொள்ள விரும்பும் புதிய முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் யாழ். கிளையில் நடைபெறவுள்ளதாக இதன் முகாமையாளர் மு.திலீபன் அறிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் யாழ். கிளை இன்று தனது முதலாவது ஆண்டைப் பூர்த்தி செய்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (த-15)

# 'ஓ பொசிற்றிவ்' இரத்தம் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்தவங்கிப் பிரிவில் 'ஓ பொசிற்றிவ்' இரத்தத்துக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மேற்படி குருதி வகையைச் சேர்ந்த குருதிக் கொடையாளர்கள் இரத்ததானம் செய்து உயிர் காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பு வைத்திய அதிகாரி திருமதி தாரணி குருபரன் கேட்டுள்ளார். (த-9)

# இருளில் மூழ்கும் நாவாந்துறை

நாவாந்துறை, ஏப். 27

யாழ்.நாவாந்துறைப் பிரதேசத்தில் வீதி மின் விளக்குகள் இன்றி இரவு வேளைகளில் போக்குவரத்தில் ஈடுபடும் அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வீதி விளக்குகள் பொருத்தப்படாத நிலையில் இரவில் இந்தப் பகுதியில் கூடுதலாக வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இந்தப் பிரதேசத்தில் வீதி விளக்குகளை அமைத்துத் தருமாறு மின்சார சபையினரிடம் அறிவித்தும் எந்த வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆகவே, மின்சார சபையினர் இந்தப் பகுதியில் உள்ள வீதிகளுக்கு மின் விளக்குகளைப் பொருத்திப் போக்குவரத்துக்கு ஆவனசெய்யுமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எ-26)

# யாழ்ப்பாணத்தில் மே மாதத்தில் 'இசை வேள்வி'

யாழ்ப்பாணம், ஏப். 27

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'இசை வேள்வி' நிகழ்வு எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இசை வேள்வி ஒத்திகை நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த ஒத்திகை நிகழ்வில் யாழ்.மாவட்ட இசைக் கலைஞர்கள் மற்றும் வாத்தியக் கலைஞர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி அறிவித்துள்ளார். (த-323)

# யுத்தத்தினால் இரண்டு கைகளையும் பார்வையையும் இழந்த மகனுக்கு உதவுமாறு தாயார் வேண்டுகோள்

மன்னார்,ஏப்.27

யுத்தத்தின்போது தமது இரண்டு கைகளையும் முழங்கையுடன் இழந்ததோடு கண்களிரண்டினது பார்வையினையும் இழந்த வாலிபர் ஒருவருக்கு ஒரு கண்ணிலாவது பார்வையை ஏற்படுத்த உதவுமாறு அவரது தாயார் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஈச்சலவக்கைக் கிராமத்தைச் சேர்ந்தவர் 22 வயதான முருகவேல் நிசாந்தன். இவர் 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மூன்றாம் திகதி புளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் படுகாயமடைந்தார். அதன்போது அவரது தாயாராகிய முருகவேல் செங்கம் மற்றும் மூன்று சகோதரர்கள் உடனிருந்தனர். இவர்கள் நால்வரும் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினர். ஆனால் நிசாந்தன் தனது இரண்டு கைகளையும் முழங்கையுடன் இழந்ததோடு இரண்டு கண்களினது பார்வையையும் முற்றாக இழந்தார்.





நிசாந்தனின் தந்தையாகிய முருகவேல் சுகயீனம் காரணமாக ஏற்கனவே மரணமடைந்துவிட்டார். நான்கு பிள்ளைகளையும் தாயாரான செங்கம் பராமரித்து வருகிறார். தந்தையற்ற நிலையில் தனது பிள்ளைகளை எவ்விதக் குறையுமின்றி இந்தத் தாய் பராமரித்து வருகின்றார். ஆனால் கொடிய யுத்தம் தனது மகனின் வாழ்வை நாசப்படுத்திவிட்டதாகச் செங்கம் புலம்பிக் கொண்டிருக்கின்றார்.

தற்போது நிசாந்தனைப் பராமரிப்பதற்கு யாராவது ஒருவர் அவருக்கு அருகில் எந்த நேரமும் இருக்க வேண்டிய பரிதாப நிலை. இவர்களின் வீடும் யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர்களால் அங்கு வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட தனது மகனுக்கு அரசினால் எந்தவித உதவிகளும் சரியான முறையில் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கிறார் செங்கம்.

உழைத்து, வயதான என்னையும் சகோதரர்களையும் பராமரிக்க வேண்டிய எனது மகன் கொடிய யுத்தத்தினால் முடமாக்கப்பட்டு எங்கும் செல்ல முடியாதவாறு ஓர் இடத்தில் ஒதுங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த வயதான தாய் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

எனது மகனின் இரண்டு கைகளையும் பழைய நிலைமைக்குக் கொண்டுவர முடியாது. ஆனால் இரண்டு கண்களில் ஒரு கண்ணுக்கான பார்வையினையாவது ஏற்படுத்த முடியும். அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான நிதிவளம் எம்மிடம் இல்லை.

எனவே வாழ்க்கையில் சகலதையும் தொலைத்துவிட்ட தனது மகனுக்குக் கண்பார்வையை ஏற்படுத்த எமது உறவுகள் முன்வந்து தமது பங்களிப்பை வழங்குமாறு இவர் உருக்கமாக வேண்டுகோள் விடுக்கின்றார்.

தான் பழைய நிலைக்கு வராவிட்டாலும் கண்பார்வையினைப் பெற்றுத் தாயாரின் சிரமத்தைக் குறைக்க முடியுமென நிசாந்தன் நம்பிக்கை தெரிவித்தார். (க-601)

# மன்னார் முருங்கனில் 100 ஏக்கரில் மாதிரி விவசாயப் பண்ணை அமையும்

மன்னார் மாவட்டம் முருங்கன் பிரதேசத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் மாதிரி விவசாயப் பண்ணை அமைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் மீள் எழுச்சித் திட்டச் செயற்பாட்டு பிரதம நீர்ப்பாசனப் பொறியியலாளர் பாலித விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முருங்கனையும் அதன் அயற் பிரதேசங்களையும் அண்டிய இடங்களில் மீள்குடியமர்ந்த மக்கள் வான் பயிர்களான தென்னை, மா, பலா என்பவற்றுடன் முருங்கை, கத்தரி, மிளகாய் ஆகிய பயிர்ச் செய்கையிலும் ஈடுபடுத்தப்படுவர். இந்தப் பகுதியின் காலநிலைக்கு ஏற்ற பயிர்கள் இவையாகும். மேலும் இந்த மக்கள் நீண்ட காலமாக நலன்புரி நிலையங்களில் வாழ்ந்தமையால் அவர்களுக்கு நவீன விவசாயத் தொழில் நுட்ப அறிவு, அரச மானியங்கள் பற்றிய விளக்கம், மேம்பாடடைந்த விதைகள் பற்றிய அறிவு என்பன் கிடையாது. இங்கே அமைக்கப்படவுள்ள மாதிரிப் பண்ணையூடாக இவை தொடர்பான அறிவை அவர்கள் பெற்றுக்கொள்வர்.

மன்னார் மீள்எழுச்சித் திட்டத்திற்கென 650 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியிலுள்ள குருவில், பெரிய உடப்பு,இஸ்மாயில் கடை, அடைக்கலமோட்டை ஆகிய இடங்களுக்குச் செல்லும் கால்வாய்களும் அழிவடைந்த 50 சிறிய குளங்களின் அணைக்கட்டுக்களும் புனரமைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

வீடு கட்டுதல், மாடி வீடு கட்டுதல், கட்டடங்கள் கட்டுதல் என்பன குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

KASTURI CONSTRUCTION அழையுங்கள்: 0773836123

**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி**

அன்னை மடியில் 22 * 03 * 1916

ஆண்டவன் அணைப்பில் 30 * 04 * 2008



**அமரர் இராமலிங்கம் பொன்னுத்துரை**
(தம்பிஐயா - மண்டைதீவு - 06)

காலம் விரைந்தோடி காலன் நினை அழைத்து
கால் ஆண்டு வந்ததையா - எமக்கோ
துணையாக நீ இருக்க துணிவாக வாழ்ந்து வந்தோம்
சடுதியாய் உனைப் பிரிந்தோம், சாகும்வரை நினைத்திருப்போம்
எம்முள்ளே நீ இருக்கும் நினைவுடனே வாழுகின்றோம்
எந்நாளும் உன் ஆத்மா சாந்திபெற
வேண்டுகின்றோம் இறைவனை நாம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இல- 50, சபாபதி வீதி,
தலையாழி, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(41-23-25)(3536)

**வீடு வளவு விற்பனைக்கு உண்டு**

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையில் 789 பேருந்துப் பாதையில் வட்டுக்கோட்டைச் சந்தியில் இருந்து ¾ km தொலைவில் 3 ¾ பரப்புக் காணி, வீடு வளவு விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்க்கப்படும்.

தொலைத் தொடர்புகளுக்கு:
0213216296, 0217912079, 0779051154

**பணிப்பெண் தேவை**

3பேர் கொண்ட சிறிய குடும்பத்துக்குத் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பெண் தேவை.
தொடர்பு:- 0776277332

**கொவிசெத**

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 804
சீட்டிழுப்பு திகதி 25.04.2011

எழுத்து: C

வெற்றி இலக்கங்கள்: 22 32 57 59

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 13,258,244.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 14 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 288 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 560 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 15099 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8582 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 214843 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 33847 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,242,980.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 13,763,228.00

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

CSE COLOMBO STOCK EXCHANGE

**எதிர்காலத்துக்கான முதலீடு**

27.04.2010

1

27.04.2011

CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணக் கிளை
398/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0212221455
0215672444

# தொலைந்துபோன முக்கிய ஆவணங்களை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை

## முல்லை. செயலகக் கூட்டத்தில் அமைச்சர் ஹக்கீம்

முல்லைத்தீவு,ஏப்.27

யுத்தம், சுனாமி அனர்த்தம் என்பவற்றின் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பிறப்பு, இறப்பு, திருமணம், காணி என்பவற்றின் சான்றிதழ்களை இழந்தவர்களுக்கு அவற்றை மீளப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமாகிய ரவூப் ஹக்கீம்.

முல்லைத்தீவு புதிய நீதிமன்றத்தின் நிர்மாணப் பணிகளைப் பார்வையிடுவதற்காக அங்கு சென்றிருந்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தமும், கொடிய யுத்தத்தின் இறுதிக் கட்டமும் இங்குதான் நடந்து முடிந்தன. இதனால் இங்கு வாழ்ந்த மக்கள் தமது காணி உறுதிகளையும், பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களையும் ஏனைய முக்கிய ஆவணங்களையும் இழந்த நிலையில் இன்று காணப்படுகின்றனர். இதனால் பல்வேறு பிரச்சினைகளுக்கு இவர்கள் முகம் கொடுத்து வருகின்றனர். இதனைக் களையும் பொருட்டு உரிய அமைச்சுக்களுடன் தொடர்பு கொண்டு இந்த ஆவணங்களை மீள வழங்குவதற்கு நடமாடும் சேவையொன்றை முல்லைத்தீவில் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அழிந்துபோன அல்லது தொலைந்துபோன காணி உறுதிகள், உறுதிப்பத்திரம் என்பனவற்றைப் பெற்றுக்கொள்ளும் விடயத்தில் காணிப்பதிவகம், நில அளவைத் திணைக்களம் என்பன முறையாகச் செயற்பட வேண்டும். அதற்கு முன்னோடியாக நடமாடும் சேவையொன்று நடத்தப்படல் அவசியமாகின்றது.

வன்னி மாவட்டத்தில் வாக்காளர் இடாப்புக்களிலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்களின் பெயர்கள் அவர்கள் வசிப்பிடத்தை நிரூபிப்பதற்கான போதிய சான்றுகள் இல்லையென்ற காரணத்தால் நீக்கப்படுகின்றன. இந்த நிலையில் தமிழ், முஸ்லிம் மக்கள் விழிப்பாக இருக்காது விட்டால் இங்கு தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்படும்.

அத்துடன் ஏனைய அனைத்துத் தேர்தல்களிலும் பாதிப்பு ஏற்படும். அத்துடன் முல்லைத்தீவில் உபதேர்தல் அலுவலகமொன்று விரைவில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்குப் போதிய உட்கட்டமைப்பு, வாழ்வாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமை பெரிய பிரச்சினையாகும். போதிய மலசலகூட வசதிகள் கூட அவர்களுக்கு இல்லையென்றும் அமைச்சர் வருத்தம் தெரிவித்தார்.

மாவட்டச் செயலகத்தில் அரச அதிகாரிகள், ஊர்ப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்ட நிகழ்ச்சியின்போது அமைச்சர் ஹக்கீம் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# செயற்கை கை, கால் பொருத்துதல்

முல்லைத்தீவு,ஏப்.27

முல்லைத்தீவு மாவட்டத்தில் கை, கால் இழந்தவர்களுக்கு செயற்கைக் கை, கால் என்பன பொருத்தப்படவுள்ளன.

முன்னுரிமை அடிப்படையில் முதல் 25 நபர்களுக்கு இவை வழங்கப்படவுள்ளதால் தேவைப்படுவோர் முல்லைத்தீவு அரசினர் பொது வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (க)

# வருடாந்தப் பொங்கல் விழா

கிளிநொச்சி,ஏப்.27

கிளிநொச்சி, பரந்தன், கோரக்கன்கட்டு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா நடைபெற்றுள்ளது.

பரந்தன் கோரக்கன்கட்டு 17 ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் மூல நட்சத்திரப் பொங்கல் விழா கடந்த சனிக்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றுள்ளது. முன்னதாகக் கடந்த 14 ஆம் திகதி பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி பத்து நாள்கள் நடைபெற்று இறுதிநாளான கடந்த சனிக்கிழமை பகல், இரவு பூசைகள் நடைபெற்று, பொங்கல் விழா நடைபெற்றது. இம்முறை வழமையைவிடப் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டு தமது நேர்த்திக் கடன்களை நிவர்த்தி செய்துள்ளனர். (க-6)

# உபகரணங்கள் வழங்கப்படாததால் கடற்றொழிலில் அதிக பாதிப்புக்கள்

முல்லைத்தீவு,ஏப்.27

முல்லைத்தீவுப் பகுதியில் மீள்குடியமர்வு செய்யப்பட்டுள்ள கடற்றொழிலாளர்கள் தமக்கான தொழில் உபகரணங்கள் எவையும் உரிய முறையில் வழங்கப்படாததால் தாம் கஷ்ரங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, செல்வபுரம், உண்ணாப்புலவு, அளம்பில், பட்டிக்குடியிருப்பு போன்ற கரையோரப்பகுதிகளில் மீள்குடியமர்வு செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களே தமக்குரிய தொழில் உபகரணங்கள் எவையும் உரியமுறையில் கிடைக்கவில்லையெனத் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதித் தொழிலாளர்களின் தொழில்சார் உபகரணங்கள் யாவும் கடந்த காலப் போர், ஆழிப்பேரலை என்பவற்றால் அழிவடைந்தன. இந்த நிலையில் தற்போது மீளக்குடியமர்வு செய்யப்பட்டுள்ள இவர்களுக்கான தொழில் உபகரணங்கள் எவையும் உரிய முறையில் கிடைக்காததால் தாம் கூட்டாகவோ அல்லது பங்கு அடிப்படையிலோ தொழிலுக்குச் செல்வதாகவும் இதனால் எதிர்பார்த்த இலாபத்தினை எட்ட முடியவில்லையெனவும் ஒரு தொகுதிக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இதனைவிடத் தங்களுடைய தொழில் உபகரணங்கள் யாவும் அழிவடைந்த நிலையில் தமக்கான தொழில் உபகரணங்கள் கிடைக்காததால் ஏனைய தொழிலாளர்களுடன் கூலி அடிப்படையில் தொழிலுக்குச் செல்வதாகவும் இவர்கள் தெரிவித்தனர். (க-6)

## சந்தை மீண்டும் ஆரம்பம்...



பதமான காய்கறிகள்: படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த இயக்கச்சி பொதுச்சந்தை புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்பட்ட நிலையில் அங்கு வழமையான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

# புனரமைப்பு வேலைகள்

அக்கராயன்,ஏப்.27

துணுக்காய் வலயக் கல்விப் பணிமனைக் கட்டடம் இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாங்குளத்தில் உள்ள வலயக் கல்விப் பணிமனைக் கட்டடம், ஆசிரிய மத்திய நிலையம் என்பன இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டுள்ளன. தற்போது நடைபெற்று வரும் வலயக் கல்விப் பணிமனை ஆசிரிய மத்திய நிலையப் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததும் இவை இயங்கத் தொடங்கும்.

அத்துடன், ஆசிரிய மத்திய நிலையத்தில் கருத்தரங்குகள் இடம்பெறும். இதுவரை ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு கல்விக் கோட்ட ஆசிரியர்கள், அதிபர்கள் துணுக்காயில் இயங்கிய வலயக் கல்விப் பணிமனைக்கே நீண்டதூரம் பயணம் செய்து நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். இனிவரும் நாள்களில் மாங்குளத்துக்கு இலகுவாகப் பயணம் செய்து நிகழ்வுகளில் கலந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை துணுக்காய் வலயக் கல்விப் பணிமனைக்கு ஐந்து முகாமைத்துவ உதவியாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். (க-410)

# வாகன ரயர் வெடித்தது; பேருந்துக்குப் பாதிப்பு

கிளிநொச்சி,ஏப்.27

ஏ-9 பிரதான வீதியில் முறிகண்டிப் பகுதியில் கருங்கற்களை ஏற்றி வந்த வாகனத்தின் பின் ரயர் வெடித்த சம்பவத்தில் அதனை விலத்திச் செல்ல முற்பட்ட தனியார் பேருந்தின் முன்பக்கம் சேதமடைந்ததுடன் நடத்துநரும் வலது கண்ணில் காயமடைந்தார்.

ஏ-9 பிரதான வீதியில் பாடசாலை மாணவர்களுடன் தென் பகுதிக்குச் சுற்றுலா சென்றுவிட்டு யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றே பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேருந்து கருங்கல் ஏற்றி வந்த டிப்பர் வாகனத்தை முந்திச் செல்ல முயன்றபோது டிப்பர் வாகனத்தின் பின் ரயரொன்று பலத்த சத்தத்துடன் வெடித்தது. இதில் பேருந்தின் முன்பக்கம் மோசமாகச் சேதமடைந்ததுடன் இதன் கண்ணாடிகளும் நொருங்கின. இதன்போது பேருந்தின் முன்புறத்தில் நின்று பயணித்த பேருந்து நடத்துநர் வலது கண்ணில் காயமடைந்தார்.

இந்த விபத்தையடுத்து வேறு தனியார் பேருந்து வரவழைக்கப்பட்டு சுமார் நான்கு மணித்தியாலங்களின் பின்னர் மாணவர்கள் தமது பயணத்தைத் தொடர்ந்தனர். (க-131)

# கல்விச் சுற்றுலா

கிளிநொச்சி,ஏப்.27

கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலய மாணவர்கள் தென்பகுதியின் பல்வேறு இடங்களுக்கும் கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டு திரும்பியுள்ளனர்.

கிளிநொச்சிக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சுமார் 55 மாணவர்கள் கடந்த வாரம் கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டு தென் பகுதியின் பல்வேறு இடங்களுக்கும் சென்றிருந்தனர். ஐந்து நாள்கள் பல்வேறு இடங்களுக்கும் சென்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இவர்கள் நேரடியாகப் பார்வையிட்டனர். இந்தச் சுற்றுலா தமது கல்விச் செயற் பாடுகளுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் எனச் சுற்றுலாவை முடித்துக் கொண்டு திரும்பிய மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

# கிராமப் புறங்களில் மதுபானசாலைகள் அமைக்கப்படுவதால் பிரச்சினைகள் அதிகரிப்பு

கிளிநொச்சி,ஏப்.27

கிளிநொச்சிப் பகுதியில் அண்மைக்காலமாகப் பல பின்தங்கிய கிராமங்களில் மதுபானசாலைகள் அமைக்கப்படுவதால் கிராம மக்கள் மத்தியில் சண்டை, சச்சரவுகள் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மதுபானசாலைகள் பாரதிபுரம், அம்பாள்குளம் ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவை பொதுமக்கள் மிகவும் நெருக்கமாக வாழ்கின்ற பகுதிகளாகும். அத்துடன் அம்பாள்குளம் மதுபானசாலை கனகபுரம் மகாவித்தியாலயத்திலிருந்து 300 மீற்றர் தொலைவிலும் கிளிநொச்சிப் பொதுச் சந்தைக்கு அண்மையிலும் அமைந்துள்ளது. இதனால் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் பொருட்டு கிளிநொச்சிப் பொதுச் சந்தைக்கு வருவோரும் இதைப்போன்று தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்தச் சந்தைக்கு வருவோரும் குறித்த மதுபானச் சாலையில் ஒன்று கூடுகின்றனர். மிக இளவயதினரையும் இங்கு காண முடிகின்றது.

இவர்கள் போதை தலைக்கேறும்போது சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது. இந்தச் சம்பவங்கள் இந்தப் பிரதேசப் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளுக்குப் பெருந்தடையாக உள்ளன.

இந்த மதுபானசாலைகளுக்கு அதிகாரிகளால் அனுமதி வழங்கப்பட்டிருந்ததால் அதனை இரத்துச் செய்யுமாறும் அல்லது அனுமதியின்றி அமைக்கப்பட்டிருந்தால் உடனடியாக இவற்றை அகற்றவேண்டுமெனவும் இப் பகுதியிலுள்ள பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (க-301)

# யானைகளின் அட்டகாசம் அதிகரிப்பு; மக்களைப் பாதுகாக்கக் கோரிக்கை

மட்டக்களப்பு,ஏப்.27

மட்டக்களப்பு மாவட்டத்தில் மனித உயிருக்கு அச்சுறுத்தலாக உள்ள யானைகளைப் பிடித்து வேறு இடத்திற்கு கொண்டு சென்றுவிடுவதன் மூலம் பொது மக்களைப் பாதுகாக்குமாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பத்தரமுல்லவில் உள்ள வன ஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

அவரது கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான், செங்கலடி, வவுணதீவு, பட்டிப்பளை, வெல்லாவெளி,ஓட்டமாவடி, வாகரை, வாழைச்சேனை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள எல்லைக் கிராமங்களில் அதிகமான மக்கள் வசிக்கின்றனர். அவர்கள் தமது ஜீவனோபாயமாக விவசாயச் செய்கையை மேற்கொண்டு வாழும் மக்களாவர்.

அவர்களின் குடியிருப்புக்குள் காட்டு யானைகள் புகுந்து ஆள்களைக் கொன்றும், பயிர்களை அழித்தும், வீடு வாசல்களை சேதப்படுத்தியும் வருகின்றன. இதனால் அங்குள்ள மக்கள் பீதியுடன் வாழ்ந்து வருகின்றனர். நாளாந்தக் கருமங்களிலும் ஈடுபடமுடியாமல் தவிக்கின்றனர்.

வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் யானைகளைத் தடுக்க வேலி அமைத்துத் தருவதாக உறுதியளித்தனர்.

இதை அமைப்பதற்கான பொருள்கள் வந்து சேர்ந்துவிட்டதாகவும் கூறினர்.

ஆனால் இதுவரை அதற்குரிய நடவடிக்கையில் ஈடுபடவில்லை. இந்தத் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட உத்தியோகத்தர்கள் அக்கறையுடன் செயற்படுவதும் இரவு,பகல் பாராது காடுகளுக்குச் சென்று யானைகளை விரட்டுவதும் பாராட்டுக்குரியவையாகும்.

வேலி அமைக்கும் வரையிலாவது மனிதருக்கு அச்சுறுத்தலாக இருக்கும் காட்டு யானைகளைப் பிடித்து வேறு தூர இடங்களில் உள்ள காடுகளில் விடுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன் - என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# புதிதாக அமைக்கப்பட்ட சந்தையால் வியாபாரிகள் பெரும் அசௌகரியம்

அம்பாறை,ஏப்.27

பொத்துவில் சந்தைப் பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த சுமார் 300 பேரை அந்த இடத்திலிருந்து அகற்றிவிட்டு கட்டப்பட்டுள்ள சந்தைக் கட்டடத்தில் சுமார் 50 கடைகளுக்கான அறைகளே நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இதனால் ஏனைய வியாபாரிகள் நடை பாதைகளிலும், கட்டடத்தைச் சூழவும் தமது வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சந்தைக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள கடை கள் முறையாகத் திட்டமிட்டு நிர்மாணிக்கப்படாமையால், வெளிச்சமின்றிக் காணப்படுவதாகவும், இதனால்பகல்வேளைகளில் கூட மின்குமிழ்களை ஒளிரவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முறையான திட்டமிடல்களுடன் இந்தப்பகுதியிலுள்ள வியாபாரிகள் அனைவரையும் உள்ளடக்கும் வகையிலான சந்தைக் கட்டடமொன்றை அமைத்துத் தருமாறு இந்தப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

# கிண்ணியா வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை

திருகோணமலை,ஏப்.27

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கி வரும் கிண்ணியா தள வைத்தியசாலையில் வைத்தியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றன. 32 வைத்தியர்கள் தேவைப்படும் இந்த வைத்தியசாலையில் 8 வைத்தியர்கள் மட்டுமே தற்போது கடமையாற்றி வருகின்றனர்.

இந்த வைத்தியர்களே வெளிநோயாளர் பிரிவு, சத்திரசிகிச்சைப்பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியவற் றில் பல்வேறு சிரமங்களுக்கும் மத்தியில் பணியாற்றி வருகின்றனர். இதனால் பொதுமக்களும் சிறந்த சுகாதார சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியாது சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

இந்த வைத்தியசாலையில் கிண்ணியாப் பிரதேச மக்கள் மட்டுமின்றி முள்ளிப் பொத்தானை, தம்பலகாமம், வெள்ளைமணல் மற்றும் மூதூர் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களும் பயன்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஆசிரியர் இடமாற்றத்தில் ஆண், பெண் பாகுபாடு இல்லை

மட்டக்களப்பு,ஏப்.27

கிழக்கு மாகாணத்திலுள்ள சுமார் 21 ஆயிரம் ஆசிரியர்களில் 68 வீதமானோர் பெண் ஆசிரியர்களாவர். கிழக்கு மாகாணப் பாடசாலைகளிலுள்ள மேலதிக ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் போது ஆண், பெண் பாகுபாடுகள் பார்க்கப்படமாட்டாது எனக் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிஸாம் தெரிவித்துள்ளார்.

மே மாதம் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள ஆசிரியர்இடமாற்றம் குறித்து ஊடகவியலாளர்களுக்குத் தெளிவுபடுத்தும் போதே பணிப்பாளர் நிஸாம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியத் தொழிலைப்பொறுத்தவரையில் சம்பளம் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் ஆண், பெண் பால் சமநிலை பேணப்படுகிறது. எனவே, இடமாற்றம் எனும் விடயத்திலும் இது கடைப்பிடிக்கப்படும்.

ஆண் ஆசிரியர்களுக்குப் பிரயோகிக்கப்படும் ஒழுங்கு முறை மற்றும் நிபந்தனைகள் போன்றவை இடமாற்ற விடயத்தில் பெண் ஆசிரியர்களுக்கும் கடைப்பிடிக்கப்படும்.

கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்கள் இந்த இடமாற்றத்தின் போது, அவர்களின் இருப்பிடங்களிலிருந்து அண்மையிலுள்ள பாடசாலைகளுக்கோ, வலயங்களுக்கோ இடமாற்றம் செய்யப்படுவர்-என்றார் (ச)



# மத்திய மாகாணப் பாடசாலைகள்: மண்சரிவுக்கு உள்ளாகும் அபாயம்

## அதிபர்கள் தரப்பில் தெரிவிப்பு

நுவரெலியா, ஏப்.27

மத்திய மாகாணத்திலுள்ள பல பாடசாலைகளில் மண் சரிவு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

கல்வித்துறை அதிகாரிகளுக்கும், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்துக்கும் இடையில் சரியான தொடர்புகள் இல்லாதபடியால் இந்தநிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றது என சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தின் கண்டிக் கிளையின் வதிவிடப் பொறுப்பதிகாரி விஜயவிக்கிரம கருத்துத் தெரிவிக்கையில்,

சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் ஏற்கனவே ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கான மதிப்பீடு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். மத்திய மாகாணக் கல்வி பணிப்பாளரான விஜயசிறி ஹேரத் கருத்துத் தெரிவிக்கையில்,

கண்டி தர்மராஜா கல்லூரியில் செய்யப்பட வேண்டிய பணிகள் பற்றிய மதிப்பீடு ஏற்கனவே கிடைத்துள்ளது. அதற்கான நிதியுதவி அடுத்தவாரத்தில் இசுறுபாயவில் இருந்து கிடைக்கும். ஏனைய பாடசாலைகள் பற்றிய மதிப்பீடுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை எனக் கூறினார். கடந்த டிசெம்பர் மாதம் முதல் இந்தப் பாடசாலைகள் பற்றிய ஆராய்ச்சிகள் நடந்துவந்த போதி லும் இதுவரை ஆக்கபூர்வமான எந்த முடிவும் எடுக்கப்பட வில்லை.

தற்போது பெய்து வரும் மழை தொடருமானால் அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்கு பாடசாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்படும் எனப் பாடசாலை அதிபர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச-5)

# களியாட்டங்களில் அவதானம்; சுற்றுலாப் பயணிகளுக்கு எச்சரிக்கை

நுவரெலியா,ஏப்.27

வசந்தகால களியாட்டங்களைக் கண்டுகளிப்பதற்காக நுவரெலியாவிற்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும் என நுவரெலியா மாவட்டச் செயலாளர் டி.பி.ஜி. குமாரசிறி தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்படும் திடீர் வெள்ளப் பெருக்கின்போது பொதுமக்கள் நீரில் மூழ்கும் சம்பவங்கள் அதிகரித்துவருவதை அடுத்தே அவர் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

பனிமூட்டம், மண்சரிவு, கற்பாறைகள் புரள்தல் ஆகிய காரணங்களால் போக்குவரத்துத் தொடர்பாகவும் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மிகக் குறுகிய நேரத்தில் அதிகூடிய மழை வீழ்ச்சி ஏற்படுவதால் ஆறுகள் திடீர் என்று பெருக்கெடுத்து காட்டாற்று வெள்ளம்போல் பாய்ந்தோடுகின்றன.

இதனாலேயே அடிக்கடி பொதுமக்கள் நீரில் மூழ்கும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

எனவே, எவரும் நீர் நிலைகளுக்கு அருகில் செல்வதையோ அல்லது அந்தப்பகுதியில் நீண்ட நேரத்தைச் செலவிடுவதையோ தவிர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சம்பள நிலுவைகள் வழங்கப்படவில்லை: ஆசிரியர்கள் விசனம்

மாத்தளை கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவைகள் வழங்கப்படாத காரணத்தால் அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர் என இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்கத்தின் இரத்தோட்டைப் பிரிவு தெரிவித்துள்ளது.

2005 ஆம் ஆண்டு முதல் ஒருசில ஆசிரியர்களுக்கு இதுவரை சம்பள நிலுவைகள் வழங்கப்படவில்லை என்று இரத்தோட்டைப் பிரிவின் இலங்கை தேசிய ஆசிரியர் சங்கத் தலைவர் வில்டன் முனசிங்க தெரிவித்துள்ளார். குறிப்பாக சுமார் நான்கு வருடங்களுக்கு மேல் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்னும் ஓரிரு மாதங்களில் அவர்களுக்கான சம்பள நிலுவையும், சம்பள உயர்வும் வழங்கப்படும் - என மாத்தளை கல்வி வலயக்கல்வி அலுவலகம் தெரிவித்துள்ளது. (ச)

## சுலபமாகப் பயணிக்க....



வெள்ளத்தினால் முற்றாகச் சேதமடைந்த வெல்லாவெளி -மண்டூர் பிரதான வீதியில் அமைந்துள்ள கறுத்தப் பாலத்திற்குப் பதிலாக வேறு புதிய பாலம் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. (ச)

## அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகள் தாழிறக்கம்

தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை ஒட்டி மொனராகலை மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட சில வீதிகள் தாழிறங்கியுள்ளன என மாவட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

மொனராகலை - புத்தல பிரதேசத்தில் தேசத்திற்கு மகுடம் கண்காட்சி நடைபெற்ற போது மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அவசர அவசரமாக பலகோடி ரூபா செலவில் பல வீதிகள் கொங்கிறீட் மற்றும் காப்பற் முறையில் செப்பனிடப்பட்டன.

அவசரமாக மழையையும் பொருட்படுத்தாது ஒப்பந்தகாரர்களிடம் கையளிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட பல வீதிகள் சுமார் மூன்று மாதங்களுக்குள் தாழிறங்கியுள்ளன.

குறிப்பாக கும்புக்கன்ன - ஒக்கம்பிட்டி, புத்தல - செல்லக் கதிர்காமம் ஆகிய வீதிகள் பல மைல் தூரத்திற்கு உடைந்தும், தாழிறங்கியும் உள்ளன எனப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# பொத்துவில் கலாசார மண்டபத்தை மக்கள் பாவனைக்குத் திறக்குக!



அம்பாறை,ஏப்.27

நீண்டகாலமாக மூடப் பட்ட நிலையில் பாழடைந்து கிடக்கும் பொத்துவில் கலாசார மண்டபத்தைப் பொதுமக்களின் உபயோகத்துக்கு வழங்குமாறு அந்தப் பிரதேசமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த 1999 ஆம் ஆண்டு அப்போதைய அமைச்சரும், மு.கா. தலைவருமான மர்ஹூம் எம்.எச். எம். அஷ்ரபினால் அடிக்கல் நடப்பட்ட இந்தக் கலாசார மண்டபம், கடந்த 2009 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்த மண்டபம் பொத்துவில் ஜும் ஆப் பள்ளி வாசலினால் பராமரிக்கப்பட்டு வந்தது.

தமக்குச் சொந்தமான காணியில் இந்தக் கட்டடம் அமையப் பெற்றுள்ளதால், இந்தக் கலாசார மண்டபம் தமக்குச் சொந்தமானது எனத் தெரிவித்து முஸ்லிம் கலாசார சங்கம் எனும் அமைப்பு நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தது. அந்த வழக்கின் பிரகாரம், இந்தக் கலாசார மண்டபமும், அது அமைந்துள்ள காணியும் முஸ்லிம் கலாசார சங்கத்துக்கே சொந்தமானது என நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இந்தச் சங்கத்தின் பொறுப்பில் கலாசார மண்டபம் வந்துள்ள போதும், இதை இன்னும் அவர்கள் திறந்து மக்களின் பாவனைக்கு வழங்கவில்லை என்று பொத்துவில் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

இந்தக் கலாசார மண்டபம் பாழடைந்து வௌவால்கள் தங்குமிடமாக மாறி வருவதோடு, கட்டடத்தின் சுற்றுப்புறங்களில் புல் மற்றும் பற்றைகள் வளர்ந்து வருவதாகவும் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்தக் கலாசார மண்டபத்தைப் பொதுமக்களின் உபயோகத்துக்கு வழங்க உரியவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

# சேருவில -II கப்பல் சேவை இடைநிறுத்தம்; மக்கள் பாதிப்பு

திருகோணமலை,ஏப்.27

மூதூர் - திருகோணமலை கடல்வழிச் சேவையில் ஈடுபட்டு வந்த சேருவில - II கப்பல் கடந்த 15 நாள்களுக்கு மேலாகத் தனது சேவையை இடை நிறுத்தியுள்ளது. இதனால் மக்கள் பல்வேறு கஷ்டங்களைத் தினமும் அனுபவித்து வருகின்றனர்.

இந்தநிலையில், திருகோணமலையிலிருந்தும் மூதூரிலிருந்தும் கந்தளாய் ஊடாக மேற்கொள்ளப்படும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் மூலமும், தனியார் பஸ் மூலமும் மக்கள் பிரயாணங்களை மேற்கொள்கின்றனர். இதனால் நேரவிரயமும் பண விரயமும் ஏற்படுகின்றன.

அத்துடன் அவசர வைத்திய தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக மூதூரிலிருந்து திருகோணமலைக்கு ஓட்டோ மூலம் வருவதற்காக ஒருவருக்கு 300 ரூபா வீதம் 3 பேர் சேர்ந்து 900 ரூபா கொடுத்து பிரயாணம் செய்யவேண்டிய அவல நிலைக்கும் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் இறால்குழி கங்கை ஊடாகத் தற்காலிக பாலமூடாக உப்பாறு துறையில் இயந்திரப் பாதை படகு மூலம் தரைமார்க்கமாகப் பயணிக்க வேண்டியுள்ளது. இந்த மாதம் ஆரம்பத்தில் இரண்டு நாள்கள் திருத்த வேலைகளுக்காக நிறுத்தப்பட்ட சேருவில - II கப்பல் தொடர்ந்தும் திருகோணம லைத் துறைமுகத்தில் சேவைக்கு விடப்படாமல் கட்டப்பட்டுள்ளது.

கப்பலில் திருத்த வேலைகள் இருந்தாலும்கூட இவ்வளவு நாள்களாகத் திருத்த வேலைகள் முடியவில்லையா என மக்கள் சந்தேகத்துடன் கேட்கின்றனர்.

கப்பல் சேவையை முன்பு நடத்திய நிறுவனங்களை விடத் தற்போது நடத்திய தனியார் கம்பனி காலத்தில் அதிக வருமானத்தை அவர்கள் பெற்றுள்ளனர் என அறிய முடிகின்றது.

இந்த நிலையில் ஏன் சேருவில - IIகப்பல் சேவை நிறுத்தப்பட்டுள்ளது என மூதூர், திருகோணமலை மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# வாக்குறுதி நிறைவேறாவிடின் மீண்டும் போராட்டம் வெடிக்கும்

## தபால் தொலைத்தொடர்பு தொழிற்சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.27

தபால்மா அதிபர் எம்.கே.பீ. திசநாயக்க மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் மற்றும் மோசடி தொடர்பில் விசாரணை செய்து இரண்டு மாத காலத்துக்குள் அவர் பதவிநீக்கம் செய்யப்படுவார் எனத் தங்களுக்கு எழுத்துமூலம் கொடுத்த உறுதிமொழி நிறைவேற்றப்படாவிட்டால் நாடளாவிய ரீதியில் மீண்டும் போராட்டம் தொடரும் - என தபால் தொலைத்தொடர்பு தொழிற் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தச்சங்கத்தின் பிரதம செயலாளர் சிந்திக்க பண்டார இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பவை வருமாறு:

ஆணைக்குழு, கமிட்டி என்ற விடயங்களில் எங்களுக்கு அவ்வளவு நம்பிக்கை கிடையாது. எனினும், தபால் தொலைத் தொடர்பு அமைச்சர் மீதும், அமைச்சின் செயலாளர் மீதும் நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் பேரில் அவர்களது கமிட்டி யோசனையை நாம் ஏற்றுக்கொண்டோம்.

இந்தக் கமிட்டிக்கு வழங்கப்பட்டுள்ள பணிகள், அதிகாரங்கள் போன்றவை பற்றி எமக்கு இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

நாங்கள் இந்தக் கமிட்டியின் முன் பிரசன்னமாகி அஞ்சல் தொலைத் தொடர்புத்துறையில் நிகழும் சகல ஊழல்களையும் மோசடிகளையும் அம்பலப்படுத்தத் தயாராகவுள்ளோம். இந்தக் கமிட்டி காலத்தைத் தாழ்த்தி தனது பணியில் உதாசீனம் செய்யக் கூடாது என நாம் வலியுறுத்துகிறோம் - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மழைக்கு மத்தியிலும் கடமை...



நாட்டின் சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடி அடை மழை பெய்து வருகிறது. மழைக்கு மத்தியிலும் தமது அன்றாடப் பணிகளுக்கு மாணவர்கள், பொது மக்கள் செல்கின்றனர். (ச)

# பெண்கள் ஜோர்தானில் பகிஷ்கரிப்பு; ஒப்பந்தம் மீறப்பட்டதாகக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.27

இலங்கை உட்பட பல நாடுகளைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் ஆடைத்தொழிற்சாலைப் பெண்கள் ஜோர்தானில் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பளத்தையும், இதர கொடுப்பனவுகளையும் வழங்கத் தவறியமை உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாங்கள் முகம் கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகள் பற்றி ஜோர்தானில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முறைபாடு செய்த போதிலும் இதுவரை எவ்வித தீர்வும் கிடைக்கவில்லையென ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

ஜோர்தானில் அம்மான் நகரிலுள்ள சஹத் அல் சபமஷன் முதலீட்டு வலயத்தில் அமைந்துள்ள ஐந்து ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரிந்த பெண்களே இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இந்த போராட்டத்தில் இலங்கை, இந்தியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா உட்பட பல நாடுகளைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டுள்ளனர்.

தாங்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஜோர்தானுக்கு வந்ததாகவும் தாங்கள் ஏற்றுக்கொண்ட ஒப்பந்தப்படி தங்களுக்குச் சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் போன்றவை தொழில் தருநர்களால் வழங்கப்படவில்லையென இலங்கை பெண்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க கருத்து தெரிவிக்கையில், ஜோர்தானில் உள்ள மூன்று பெரிய தொழிற்சாலைகளில் இந்தப்பிரச்சினை ஏற்கனவே இருந்ததாகவும், இந்த வேலை நிறுத்தம் பற்றி ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜோர்தானில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக பேச்சுக்கு வருமாறு போராட்டக்காரர்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்ட போதும் இதுவரை எவரும் முன்வரவில்லையெனத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

# ஜனாதிபதி குடும்பத்தவர் பெயரைப் பாவித்து மோசடிகளில் ஈடுபட்டோர் 69 பேர் கைது!

கொழும்பு, ஏப்.27

ஜனாதிபதி குடும்பத்தினரின் பெயரைப் பயன்படுத்தி பொது மக்களை ஏமாற்றி மோசடி செய்த 69 பேரை குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் ஏமாந்த 164 பேர் சுமார் ஒரு கோடி ரூபா வரை இழந்துள்ளனர் எனக் குற்றத்தடுப்புப் பிரிவின் விசேட அதிகாரிகள் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணைகளில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ, அமைச்சர் பசில் ராஜபக்ஷ், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் பெயர்களைப் பயன்படுத்தியே அவர்கள் தங்கள் மோசடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

அரசின் உயர்பதவிகள், பதவி உயர்வுகள், பிரபல பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு அனுமதி பெற்றுக் கொடுத்தல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பன போன்ற பல்வேறு துறைகளில் ஆசை காட்டி அவர்கள் பொது மக்களிடம் ஏமாற்றிப் பணம் பெற்றுக் கொண்டிருந்தமை குறித்து பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைத்திருந்தன.

அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கைகளின் பலனாகச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டிருப்பவர்கள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், அவர்களுக்கு எதிராக 38 நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. (ச)

# 8 வருடங்களாக ஒரே இடத்திலேயே பணியாற்றும் தேசியப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

கொழும்பு, ஏப்.27

ஒரே இடத்தில் 8 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றும் தேசிய பாடசாலை ஆசிரியர்கள் மே மாதம் முதல் இடமாற்றப்படவுள்ளனர் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த இடமாற்றங்கள் தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் 340 தேசிய பாடசாலைகள் உள்ளன. இந்தப்பாடசாலைகளில் சிலர் ஒரே இடத்தில் 22 வருடங்களாகச் சேவையாற்றுகின்றனர். அவர்களை மே மாதம் முதல் இடமாற்றம் செய்வோம். அவர்கள் விரும்பினால் அண்மையிலுள்ள மாகாண சபைகளின் கீழ் இயங்கும் பாடசாலைக்கு மாறலாம். அதேபோல் புதிய இடமாற்றக் கொள்கையின் கீழ், மாகாணப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களும் தேசியப் பாடசாலைகளுக்கு மாற்றப்படுவர்.

கிராமியப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகம் உள்ளது. கதிர்காமத்தைச் சேர்ந்த பிள்ளைகள் அந்தப்பிரதேசத் தில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாகத் தங்காலை மற்றும் மாத்தறைப் பாடசாலைகளுக்கு வருவதை நான் கண்டிருக்கிறேன்.

புதிய இடமாற்றத் திட்டம் முதலில் தென் மாகாணத்தில் அமுல்படுத்தப்படும். இரண்டாவதாக மேல் மாகாணத்திலும் அதையடுத்து ஏனைய மாகாணங்களிலும் அமுல்படுத்தப்படும் - என்றார். (ச)

# குறிப்பிட்ட சில வீதிகளில் சாதாரண பஸ் சேவைகள்

கொழும்பு, ஏப்.27

தெரிவு செய்யப்பட்ட சில வீதிகளில் அரைச்சொகுசு பஸ்களுக்கு பதிலாக சாதாரண பஸ் சேவையை நடைமுறைப்படுத்த தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் எண்ணியுள்ளது.

இது தொடர்பான கோரிக்கையை தாம் தேசிய போக்குவரத்துக் ஆணைக்குழுவிடம் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்படும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அரைச்சொகுசு பஸ்களில் ஆசன எண்ணிக்கைக்கு ஏற்றவாறே பயணிகள் செல்ல முடியும் என்ற போதிலும், தற்போது அரைச்சொகுசு பஸ்கள் ஆசன எண்ணிக்கைக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்வதைக் கருத்திற் கொண்டே இந்தக் கோரிக்கையை முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரைச்சொகுசு பஸ்களில் பயணக் கட்டணம் ஒன்றரை மடங்காக அறவிடப்படுவதுடன், அவ்வாறான நிலையில் பயணிகளுக்கு உரிய சொகுசு வழங்கப்படாமை தொடர்பாகத் தமக்குப் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரைச்சொகுசு பஸ்களால் பயணிகளுக்கு ஏற்படும் அசாதாரணம் தொடர்பாகப் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. அதனை ஆராய்ந்து சாதாரண தூர பஸ் சேவையை ஆரம்பிக்கும் முகமாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் எழுத்துமூலம் கோரப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# படை முகாம்களில் வதிவிடப் பயிற்சி; முஸ்லிம் மாணவிகளுக்குப் பிரச்சினை

கொழும்பு, ஏப்.27

2011ஆம் கல்வி ஆண்டுக்காகப் பல்கலைக்கழகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படவுள்ள மாணவர்களுக்காக உயர்கல்வி அமைச்சு முப்படைகளின் நெறிப்படுத்தலின் கீழ் படை முகாம்களில் நடத்தப்படவுள்ள மூன்று வார வதிவிட தலைமைத்துவப் பயிற்சி நெறி கலாசார ரீதியில் முஸ்லிம் மாணவிகளுக்குப் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும் என மாற்றுக் கொள்கைக்கான பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவர் சஹ்ப எச். இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

தமது கலாசாரத்தைப் பின்பற்றும் முஸ்லிம் பெற்றோர்கள் தமது பெண் பிள்ளைகளை இவ்வாறானபயிற்சி நெறியைத் தொடர்வதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தலைமைத்துவப் பயிற்சி நெறி அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் முஸ்லிம் மாணவிகள் தமது பல்கலைக்கழகக் கல்வியைக் கைவிட வேண்டிய நிலைமை ஏற்படும் என சஹ்ப எச். இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

எனவே, முஸ்லிம்களின் கலாசாரத்தைக் கவனத்தில் கொண்டு குறித்த தலைமைத்துவப் பயிற்சி நெறியிலிருந்து முஸ்லிம் மாணவிகளுக்கு விதிவிலக்கு அளிக்குமாறு மாற்றுக் கொள்கைக்கான பல்கலைக்கழக மாணவர் சங்கம் உயர்கல்வி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# மகேஸ்வரி நிதியத்துக்கு மணல் விற்பனைக்கான ஏகபோக உரிமையைத் தாரைவார்த்தது யார்?

## 'காட்டுதர்பார்' நடத்தி குடாநாட்டு மக்களின் பணம் சூறையாடல்

யாழ். மாவட்டத்தில் மணல் விற்பனையின் ஏகபோக உரிமை எந்த ஒரு தனியார் அமைப்பிடமோ அல்லது சமூகசேவைத் தொண்டர் நிறுவனத்திடமோ தாரை வார்த்துக் கொடுக்கப்படவில்லை.

பொது மக்களுக்குத் தேவையான மணலை நேரடியாகத் தாமே பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அனுமதிப் பத்திரங்களை வழங்கும் அதிகாரம் பிரதேச செயலாளர்களிடமே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தில் யாழ். மாவட்டத்துக்கு மட்டும் என்று விசேட சட்டங்கள் எவையும் உருவாக்கப்படவில்லை. சட்டம் எல்லோருக்கும் பொதுவானதே என்கிறார் புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகப் பிரதிப் பணிப்பாளர் திருமதி றேமலதா.

சுனாமி, இயற்கை அனர்த்தங்கள், வெள்ளப்பெருக்கு மற்றும் வேறு காரணங்களாலும் தமது வீடு வாசல்களை இழந்து நிற்கும் யாழ். மாவட்ட மக்கள் தமக்குத் தேவையான மணலைப் பெறுவதற்குப் பல்வேறு சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

**மக்களின் பணம் சூறையாடல்**

''மகேஸ்வரி நிதியம்'' என்ற அரச சார்பற்ற தனியார் நிறுவனம் மணல் விநியோகத்தில் ஏகபோக உரிமை தமக்கே வழங்கப்பட்டுள்ளது என்றும் தம்மை மீறி வேறு எவரும் மணல் விற்பனையில் ஈடுபட முடியாது எனவும் 'காட்டுதர்பார்' நடத்தி மக்களின் பணத்தைச் சூறையாடி வருகின்றது.

அவர்களிடமே மணல் வாங்க வேண்டும். அவர்கள் அமர்த்தி உள்ள லொறிகளிலேயே மணலைக் கொண்டு செல்ல வேண்டும். அவர்கள் கேட்கும் பணத்தை அவர்களிடமே செலுத்த வேண்டும்.

இதுதான் மகேஸ்வரி நிதியத்தின் கண்டிப்பான கட்டளைகள்.

மகேஸ்வரி நிதியம் அரசின் ஒரு கிளை நிறுவனமும் அல்ல. பதிவு செய்யப்பட்ட இலாபம் தேடும் வர்த்தக நிறுவனமும் அல்ல. சாதாரணமான அரச சார்பற்ற ஒரு நிறுவனம் மட்டும் தான். நாட்டில் எத்தனையோ தொண்டர் நிறுவனங்கள் இயங்குகின்றன. அவை எல்லாம் இப்படிவியாபாரம் நடத்திக் கொள்ளை இலாபம் அடிக்கவில்லை.

இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள் எனத் தொடர்புடைய பலரிடமும் விவரம் கேட்டபோது மணல் அகழ்வு மற்றும் கொண்டு செல்லுதல் உட்பட அனைத்து விடயங்களும் மகேஸ்வரி நிதியத்தின் மூலமே நடைபெறுகின்றன. அவர்களுக்கே ஏகபோக உரிமை வழங்கப்பட்டுள்ளது. தம்மால் எதுவும் செய்ய முடியாது என்று கைவிரித்து விடுகின்றனர்.

ஒரு சாதாரண நிறுவனத்துக்கு ஏகபோக உரிமை வழங்கியது யார்?

**அஞ்சி நடுங்கும் அரச அதிகாரிகள்**

மகேஸ்வரி நிதியத்தின் காப்பாளராக அதன் பின்னணியில் நின்று செயல்படுத்துபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்பதால் யாழ். மாவட்ட அரச அதிகாரிகள் ஏன் இப்படி அஞ்சி நடுங்குகின்றனர்? அவர்களது அதிகாரங்களை ஏன் அமைச்சரின் கால்களில் அடைவு வைத்து விட்டனர்? என்று தெரியவில்லை.

யாழ். மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபரான கே.கணேஷ், மகேஸ்வரி நிதியத்துக்கு மணல் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான அனுமதி தெஹிவளை காலி வீதியில் உள்ள புவிச் சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தால் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

## அரச அதிகாரிகள் வாய்திறக்க முடியாமல் அஞ்சி நடுங்கும் நிலை

முன்பு யாழ். செயலகத்தில் மணல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டபோது மணல் பெறுவதற்குச் செலவிடப்பட்ட தொகையைத்தான் மகேஸ்வரி நிதியத்திடம் அனுமதிப் பத்திரத்தைப் பெறுகின்றபோதும் செலவிடுகின்றனர் என்று எழுத்து மூலம் அறிவித்திருந்தார். அவர் அரச அதிபராக இருந்த வேளையிலேயே இப்படி அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்ற சுனாமி, வெள்ளப்பெருக்கு, இயற்கை அனர்த்தங்கள், யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ் விடங்களை மீளக்கட்டியெழுப்ப மணலின் தேவை அதிகரித்துள்ளது. ஆனால் கொழும்பில் உள்ள புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் மூலம் மட்டுமே மணல் வழங்குவதற்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. இதனால் ஒரு சிலர் மட்டும் இப்படியான அனுமதிப் பத்திரங்களைப் பெற்று ஏகபோகம் அனுபவிக்கின்றனர். இதனால் பொதுமக்கள் பெரிதும் சிரமத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். மணல் விநியோகத்தில் பல ஊழல்களும் மோசடிகளும் இடம்பெற்று வருவதாகப் பல குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நாடாளுமன்றத்திலும் பல முறை கேள்வி எழுப்பி வந்துள்ளார்.

**அதிகாரம் பகிர்ந்தளிப்பு**

இதன் காரணமாகவே புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் அதிகாரங்கள் பிரதேச செயலகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா கனியவளங்கள் திருத்தச் சட்டத்தின் 1992/33 ஆம் பிரிவின் திருத்தம் ஒன்றை கொண்டு வந்ததின்படி கனிய வள திருத்தச் சட்டம் 2009/66 அமைய பிரதேச செயலகங்களுக்கு அனுமதி வழங்கும் உரிமம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகத் தெளிவான விவரங்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டபோது கீழ்க்கண்ட விவரங்களைப் பெறமுடிந்தது. அதனைப் பாவனையாளர்களின் நலன்கருதி இதன் கீழ் பிரசுரிக்கின்றோம்.

**வர்த்தக நோக்கமற்ற சொந்தத் தேவைக்கான மண்/மணல்/கிரவல்கள் என்பவற்றைப் பெறுவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கல்**

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்துடன்
* காணி உறுதி
* வீடு கட்டுவதானால் அதன் வரைபடம்.
* திருத்த வேலையாயின் அதன் விவரம்.
* மணல் பெறும் இடத்தின் விவரம்.
* மணல் தருபவரின் சம்மதக் கடிதம்.
* தேவையான மண்/மணல்.

ஆகிய விவரங்களுடன் கிராம சேவகர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

பாவனையாளர்கள் எவரும் இந்தத் திட்டத்தின் படி மணல் பெறுவதற்கான அனுமதிப்பத் திரங்களைப் பெற பிரதேச செயலாளருக்கு விண்ணப்பிக்கலாம்.

**கட்டணங்கள்**

* கொண்டு செல்வதற்கான அனுமதிக்கட்டணம் 109 ரூபா 80 சதம்.
* ஒரு கியூப் மணலுக்கான உரிமம் 78 ரூபா 40 சதம் மட்டுமே.
* பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்கள் அந்த அந்தப் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும். வேறு பிரதேசங்களில் இருந்தோ அல்லது வெளியிலோ கொண்டு செல்லவோ அன்றி கொண்டு வரவோ முடியாது.
* இரவு நேரங்களில் மணல் கொண்டு செல்ல முடியாது. காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டுமே அனுமதிக்கப்படுவர். ஒருமுறை வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஒரு முறை கொண்டு செல்ல மட்டுமே செல்லுபடியாகும்.

இது மட்டுமன்றி பிரதேச செயலகங்களால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான சகல விவரங்களும் தனித்தனியாக அந்தந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள பிராந்திய பணிப்பாளர்களுக்குப் பிரதி மாதமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வாறான கணகாணிப்பு பிராந்திய அலுவலகங்கள் தெஹிவளை கொழும்பு, கண்டி, மாத்தளை, பதுளை, இரத்தினபுரி, மொனராகலை, குருநாகல், யாழ்ப்பாணம் (சுண்டிக்குளி), அம்பாறை, அம்பாந்தோட்டை, பொலனறுவை, களுத்துறை, திருகோணமலை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

அனைத்து மாவட்டங்களிலும் ஒரேமாதிரியான விதிமுறைகளே கடைப்பிடிக்கப்படுகின்றன. யாழ்.மாவட்டத்திற்கு மட்டும் தனியான சட்டம் ஒன்று இயற்றப்படவில்லை.

* மகேஸ்வரி நிதியத்திடம் தான் மணல் பெறவேண்டும்
* அவர்களிடம்தான் அனுமதி பெறவேண்டும்.
* மகேஸ்வரி நிதியத்தினரால் நடத்தப்படும் வாகனங்களில் மட்டும் தான் மணல் ஏற்றிச் செல்லவேண்டும் என்று எந்த நிபந்தனையும் இல்லை.

அனுமதி பெற்றவர்கள் தாம் விரும்பிய வாகனத்தில் (அனுமதிபெற்று) கொண்டு செல்ல முடியும் எனவும் கூறினார் பிரதிப் பணிப்பாளர்.

இதன் அடிப்படையில் யாழ் மாவட்டத்தில் உள்ள பாவனையாளர்களும் லொறி உரிமையாளர்களும் மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள சுண்டிக்குளியில் உள்ள பிராந்திய முகாமையாளர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பேச முடியும்.

அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் 021 222 4595.

(2)

# நெதர்லாந்தில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டதை எதிர்த்து ஐரோப்பிய நீதிமன்றில் ஈழத்தமிழர் மனு

கொழும்பு, ஏப். 27

இலங்கைத் தமிழ் ஊடக வியலாளர் ஒருவர் நெதர்லாந்தில் தமக்கு அரசியல் தஞ்சக் கோரிக்கை மறுக்கப்பட்டதை எதிர்த்து ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுத் தாக்கல் செய்யவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், தென்மராட்சியைச் சேர்ந்த சின்னத்தம்பி பார்த்தீபன் என்ற ஊடகவியலாளரே இந்த மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்யவுள்ளார் என அவர் தரப்பில் வாதாடவுள்ள சட்டத்தரணி தெரிவித்தார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு உயிர் அச்சுறுத்தல் காரணமாக இலங்கையைவிட்டு வெளியேறிய இவர், நெதர்லாந்து நாட்டில் அரசியல் தஞ்சம் கோரிக்கையை அந்த நாட்டு குடிவரவு - குடியகல்வு அமைச்சு நிராகரித்திருந்தது.

இதையடுத்து அவரது சட்டத்தரணி மேல் நீதிமன்றில் மேன்முறையீடு செய்திருந்தார்.

ஊடகவியலாளர் என உறுதிப் படுத்துவதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை எனத் தெரிவித்து கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் அந்த மனுவை மேல் நீதிமன்றம் நிரா கரித்தது.

ஆனால் அவர் தகுந்த ஆவணங்கள் சமர்ப்பித்திருந் தார் என்று அவரது சட்டத்தரணி தெரிவித்தார்.

இந்த நிலையில் அவரின் சட்டத்தரணி ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்யவுள்ளார். (சி)

# வாகனங்களுக்கான வரி அதிகரிப்பு

வாகனங்களுக்கான தீர்வை வரி அதிகரிக்கப்படும் என சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். பல எரி பொருள்களில் இயங்கக் கூடிய 1600 சி.சி. இற்கு குறைந்த கொள்ளளவுடைய வானங்களுக்கு 8 சதவீத தீர்வை வரி விதிக்கப்படும் என பிரதி சுங்க ஆணையாளர் அஜந்த டயஸ் தெரிவித்தார்.

1600 சி.சி.க்கு மேற்பட்ட கொள்ளளவுடைய வாகனங்களுக்கான தீர்வைவரி 24 சதவீதமாக அதிகரிக்கப்படும். 2000-3000 சி.சி. கொள்ளவுடைய பல் எரி பொருள் வானங்களுக்கான வரி 75 சத வீதமாக அதிகரிக்கப்படும் 3000 சி.சி.யை விட அதிக கொள்ளளவுடைய வாகனங்களுக்கானவரி 100 சதவீதமாக அதிகரிக் கப்படும்.

முன்னர் பல் எரிபொருள் வாகனங்களுக்குத் தீர்வை அறவிடப்படவில்லை. 15 சதவீத வரியும் 12 சதவீத வற் வரியுமே அறவிடப்பட்டன. கடந்த இரு மாத காலத்தில் சுமார் 3000 பல் எரி பொருள் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை பெற்றோலில் இயங்கும் 1000 சிசி இற்கு குறைந்த வாகனங்களுக்கான வரி 23 சதவீதத்திலிருந்து 38 சதவீதமாக அதிகரிக்கப்படும். 1000-1500 சிசி பெற்றோல் வாகனங்களுக்கான வரி 43 சதவீதமாக அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளை பெறலாம். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காக காத்திருக்கலாம். தவறு என தெரிந்தும் துணிச்சலாக சில காரியங்களைச் செய்வீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களை பெறுவர். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும்.



**இடபம்:**
சக ஊழியர்கள், நண்பர்கள் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். நேர்வழி சிந்தனைகள் மனதில் குடி கொள்ளும் நாள். நீண்டநாள்களாக மறைத்து வைத்திருந்த ரகசியம் ஒன்றை, மற்றவர்களிடம் சொல்வீர்கள். பணிபுரியும் சிலர் வேறு வேலை காரணமாக திடீர் விடுப்பு எடுக்க நேரிடலாம். ஆனைமுகன் வழிபாட்டின் மூலம் ஆறுதல் பெறலாம்.



**மிதுனம்:**
பெரியளவில் பலனை எதிர்பார்த்துச் செய்த காரியத்தில் சிறியளவில் பலன் கிடைக்கலாம். பெண்கள் விடயங்களில் எச்சரிக்கை அவசியம். உங்களுக்கு வேண்டிய ஒருவர் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களிடம் காட்டலாம். சில பொருள்களை ஆசைப்பட்டு வாங்கியும் அதில் திருப்தி இல்லாமல் போகலாம். மன நிம்மதி பாதிக்கப்படும்.



**கடகம்:**
தயக்கம் இல்லாமல் சில காரியங்களை துணிச்சலாகச் செய்வீர்கள். உறவினர்கள் வழியில் உற்சாகம் தரும் அனுபவங்களைச் சந்திக்கலாம். பல மணி நேரமாகும் என நினைத்த வேலை ஒன்று சுலபமாக முடிவுக்கு வரும். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். சிலரை உபசரிக்க கணிசமான பணம் செலவாகலாம்.



**சிங்கம்:**
நேர் வழி சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும் நாள். நீண்ட நாள்களாக குடும்பத்தில் இருந்த பிரச்னை ஒன்று முடிவுக்கு வரும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சி நடக்கலாம். தேகப் பராமரிப்பில் அக்கறை காட்டுவீர்கள்.



**கன்னி:**
கருணை மனப்பான்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழில் விடயங்களில் அதிக நாட்டத்துடன் செயற்படுவீர்கள். வர்த்தகம் செய்வோர் வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளை கேட்கலாம். மற்றவர்களுக்கு நடந்த நல்ல விடயங்கள் எமக்கு நடக்கவில்லையே என, ஆதங்கம் அடைவீர்கள். வீண் பேச்சுக்களால் அவதியுண்டு.



**துலாம்:**
பொறுமை, பக்குவம், புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டிய நாள். உடல் உபாதைகளால் மருத்துவச் செலவு ஏற்படலாம். சுபகாரிய விடயங்களில் நினைத்தது நடப்பது தள்ளி போகலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் உறவினர் ஒருவருடன் நீங்களும் துணைக்குச் செல்லலாம். சக ஊழியர் விடுமுறையால் வேலைப்பளு கூடும்.



**விருச்சிகம்:**
நல்லவர், கெட்டவர் என்று பார்க்காமல் உதவி செய்யும் நாள். சக ஊழியர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். பிள்ளைகள், உடன்பிறப்புகள் தொடர்பான விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறலாம். உங்களால் மற்றவர்கள் ஆதாயம் பெறலாம்.



**தனுசு:**
கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். பிடிவாதமான செயற்பாடுகளை தவிர்க்க வேண்டும். திட்டமிட்ட ஒரு காரியம் நடக்காமல் போனாலும், திட்டமிடாத ஒரு காரியம் இனிதே நடக்கும். வெளியூரில் இருக்கும் ஒருவரை தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அது முடியாமல் போகலாம். கனவுத் தொல்லையுண்டு.



**மகரம்:**
மையான விடயங்களில் நாட்டம் செல்லும். கடந்த கால ம்பவம் ஒன்றை நினைத்துப் பார்ப்பீர்கள். புதிய தொ ல் முயற்சிகளில் பொறுமை, நிதானம் அவசியம். வியாபாரிகள் எதிர்பார்த்த ஆதாயம் பெற்று மகிழ்ச்சியடைவர். எதிர்பார்த்த வாய்ப்புகள் தேடி வரலாம். தொழில் ரீதியாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். புதிய அனுபவம் பெறலாம்.



**கும்பம்:**
உறவினர்கள் வருகையால் சந்தோஷம், மகிழ்ச்சி அதிகரிக்கும். கடன் விவகாரங்களில் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். கடும் வேலைப்பளுவால் மன உளைச்சலை சந்திக்கலாம். நீண்ட நாள்களாக தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்த ஒருவரை நேரில் சந்திக்கலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருடன் நீண்ட தூரப் பயணம் செல்லலாம்.



**மீனம்:**
திறமைக்கு ஏற்ற மதிப்பு, மரியாதை கிடைக்கும். குடும்ப உறுப்பினர்களை குறை சொல்லாமல் அரவணைத்துச் செல்வீர்கள். புதியவர்களின் நட்பைப் பெறலாம். சில வேலைகளை தாமதமாக தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். ஆசைகள் பூர்த்தியாகும்.



# எல்லாம் ராஜ… மண் பொம்ம… மக்கள் பிரதி…

கொழும்பில் மண்ணைக் கொட்டி, அம்பாந்தோட்டையில் தண்ணீரை நிரப்பி மக்கள் பிரதிநிதிகளை எல்லாம் மண் பொம்மைகளாக்குகின்றது மஹிந்த ராஜபக்ஷ அரசு. இப்பொழுது நாடாளுமன்றம் முதல் நாட்டாமைகள் வரை பேசப்படும் மூன்று முக்கியமான தலைப்புச் செய்திகளாக இருக்கின்றன இவை.

என்னடா இது மண்ணும் தண்ணீரும் பொம்மையும் அவ்வளவு முக்கியமான விடயங்களாகிவிட்டனவா என்று யோசிக்கத் தோன்றுகின்றதா?

ஆம், மண் தண்ணீருடன் பலகோடி டொலர்களும், பொம்மைகளுடன் அடிப்படை உரிமைகளும், சுதந்திரமும் தட்டிப்பறிக்கப்படப் போகின்றன என்ற அபாயமும் ஏற்படவுள்ளதாகப் பலரும் விமர்சிக்கின்றனர்.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் பல ஆயிரம் கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது. பல லட்சம் ரூபாய்கள் செலவில் விழாக்கள் கொண்டாடப்பட்டன.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் கடல் நீரை நிரப்புவதற்காக மட்டும் பல கோடிகள் செலவிடப்பட்டன. தண்ணீர் நிரப்பவே மூன்று விழாக்கள் நடத்தப்பட்டன.

ஆனால் துறைமுகம் திறந்து வைக்கப்பட்டுக் கிட்டத்தட்ட ஒரு வருடமாகப் போகின்றவேளையிலும் அங்கு எந்த ஒரு கப்பலும் வந்ததாகத் தெரியவில்லை. அப்படியே இரகசியமாக வந்து போனாலும் எத்தனை கப்பல்கள் வந்து போயின என்று வெளிப்படையாகக் கூறும் தைரியமும் அரசிடம் இல்லை. இந்த விவரங்களை எல்லாம் திரட்டிக்கொண்ட எதிர்க்கட்சிகள் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் சிறு பிள்ளைகள் செய்து விடும் காகித ஓடங்கள் மட்டுமே மிதக்கின்றன என்று கிண்டல் செய்வதுடன் சம்பந்தமற்ற இடத்தில் துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளது. இது வீண் விரயம் என்றும் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டுவதுடன், இந்த லட்சணத்தில் 37 வயதுடைய ஒரு நபரை ஒரு லட்சத்து அறுபத்து ஏழாயிரம் ரூபா மாத சம்பளத்துக்கு துறைமுகக் கூட்டுத்தாபனத் தலைவராக நியமித்துள்ளனர். இவர் என்ன வெட்டிப் புடுங்குகிறார் என்றும் கேள்வி எழுப்புகின்றனர். எத்தனை கப்பல்கள் வந்து போயின என்பதைக் கூற கப்பல்துறை அமைச்சருக் குத் துணிவில்லை என்றாலும் எந்தக் கப்பலுமே வரவில்லை என்று கூறித் தமது இயலாமையைக் காட்டிக்கொடுக்கவும் விரும்பவில்லை.

அரசு இப்படித் திக்குமுக்காடிக்கொண்டிருக்கும் போது அரசுக்குக் கைகொடுத்தார் அமைச்சர் ரவூப் ஹக்கீம். எதிரிகளை விட நண்பர்களாக இருந்து எதிரிகளானவர்களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்களே பயங்கரமானவர்கள் என்பது இங்கு நிரூபிக்கப்பட்டுவிட்டது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாக இன்று குற்றச்சாட்டுக்களை வாரிவீசும் ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைமுறைகளுக்குத் தெரியாத ஒரு விடயத்தைப் போட்டு உடைத்துவிட்டார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.


இப்பொழுது அம்பாந்தோட்டைத் துறைமுகம் பொருத்தமற்றது என்று குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால் அம்பாந்தோட்டையில் துறைமுகம் அமைக்கும் திட்டத்துக்கு அடித்தளம் இட்டதே ஐக்கிய தேசியக் கட்சிதான். அப்போது நான்தான் துறைமுகங்களுக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்தேன். அக்காலத்தில் தான் துறைமுக வேலைத்திட்டம் தொடர்பான சாத்தியவள அறிக்கையும் ஆய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் குழந்தைதான் அம்பாந்தோட்டைத் துறைமுகம் என்று போட்டு உடைத்துவிட்டார் ஹக்கீம். இதனால் ஐக்கிய தேசியக் கட்சியினர் வாயடைத்துப் போய்விட்டதும் ஆச்சரியப்படும் ஒன்றல்ல.

அம்பாந்தோட்டையில் தண்ணீர் நிரப்புவதில் ஹக்கீமின் புண்ணியத்தால் தலையைக் கழட்டிக் கொண்ட கப்பல்துறை அமைச்சர் காலி முகத்திடல் முதல் கொள்ளுப்பிட்டி வரை கடலில் மண்ணைக் கொட்டி 300 ஏக்கர் முதல் 400 ஏக்கர் வரை நிலத்தை உருவாக்கப் போகும் விடயத்தை அம்பலப்படுத்தினார்.

அதாவது காலி முகத்திடல் முதல் கொள்ளுப்பிட்டி வரையிலான கடற்கரையோரப் பகுதியில் 300, 400 ஏக்கர் பரப்பளவை மேடாக்கி உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் நவீன நகரம் ஒன்றை உருவாக்கப் போவதாகவும் இதற்கென 975 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளதாவும் கூறிவிட்டார்.

இந்த நவீன நகரம் உல்லாச புரியாகவே அமைக்கப்படும் எனவும், இதன் மூலம் வருடாந்தம் பல கோடி ரூபாய்களை வெளிநாட்டு வருமானமாகப் பெறமுடியும் என்று சவடாலடித்துவிட்டார்.

இந்த இரண்டு செய்திகளும் மக்கள் மத்தியில் பரபரப்பாகப் பேசப்பட்டதுடன் விமர்சனங்களுக்கும் உள்ளாகின. என்னடா என்றால் அம்பாந்தோட்டையில் தரையிலிருந்து மண்ணை வெட்டி கடலில் கரைத்துவிட்டு கடல் நீரை உள்ளேகொண்டு வருகின்றனர். அதேநேரம் கொழும்பில் கற்களையும்



மண்ணையும் நிரப்பிக் கடலில் மேடை அமைக்கப் போகின்றார்களாம் என்று ஆளுக்கு ஆள் ஆச்சரியத்துடன் பேசுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.


இது இப்படி இருக்கவே கடந்த வாரம் அமைச்சரவைச் செய்திகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பிரியதர்சன யாப்பா போட்ட குண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதல்

# பக்ஷ மயம்!

# மைகளாகும்

# நிதிகள்






அனைத்து அரசியல் வாதிகள் மத்தியிலும் பெரும் கலகலப்பை உண்டாக்கியது.

கொழும்பு, தெஹிவளை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மாநகர சபைகள் போன்றவைகள் கொலன்னாவை நகரசபை மற்றும் கொட்டிக்காவத்த, முல்லேரியா பிரதேச சபைகள் என்பவற்றை உள்ளடக்கிய கொழும்புப் பெருநகர்க் கூட்டுத்தாபனம் ஒன்று உருவாக்கப்பட்டு அதன் நிர்வாகப் பொறுப்புக்கள் அனைத்தும் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநர் ஒருவரின் கைகளில் ஒப்படைக்கப்படும் என அமைச்சர் பிரியதர்சன யாப்பா கூறிவிட்டார்.

மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபைகள் என்பவற்றின் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்பதில் எத்தனை போட்டிகள், குத்து வெட்டுக்கள்; குண்டு வீச்சுக்கள், உயிரிழப்புகள், கார் எரிப்புகள் என்பவற்றுடன் எத்தனை எத்தனை கோடி ரூபாய்கள் கரியாக்கப்பட்டன.

இவ்வளவு பிரயத்தனங்களுக்கு மத்தியல் பதவிகளைப் பெற்று, பதவிப் பிரமாணம் கூடச் செய்யாத நிலையில் நீங்கள் எல்லோரும் வெறும் மண் பொம்மைகள்தான் மாநகர சபை, நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் உறுப்பினர்கள், தலைவர்கள், மேயர்கள் என்ற பதவிகள் மட்டும்தான் உங்களுக்கு. ஆனால் எந்தவிதமான நிர்வாக ஆட்சி அதிகாரங்கள் எதுவும் கிடையாது.

புதிதாக அமைக்கப்படவுள்ள கொழும்பு பெருநகர் கூட்டுத்தாபனத்துக்கு சர்வ நிர்வாக அதிகாரங்




களையும் கொண்ட குறு நில மன்னரைப் போன்று ஆளுநர் ஒருவர் நியமிக்கப்படுவார். அவரும் ஜனாதிபதியாலேயே நியமிக்கப்படுவார் என்றும் தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

அமைச்சரவையில் ஜனாதிபதியின் முன் வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலமே இதற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

இப்போது உள்ளூராட்சிச் சபைகளின் அதிகாரங்கள், நிதி நிர்வாகம் உட்பட அனைத்தும் இந்த ஆளுநரிடம் தாரைவார்த்துக் கொடுக்கப்படவுள்ளது.

இந்த அடிப்படையில் குறிப்பிட்ட கொழும்புப் பெருநகர்க் கூட்டுத்தாபன பிரதேச எல்லைக்குள் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலையும் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதிகூட இந்த ஆளுநரின் கட்டளைப்படிதான் பயன்படுத்தப்படவேண்டும் என்ற கட்டாயமும் ஏற்படலாம். இது தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் பெரும் பீதியை ஏற்படுத்தியிருக்கின்றது.

இங்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் வெறும் மண் பொம்மைகளாக்கப்படுகின்றனர்.

இங்கே இன்னும் ஒரு விடயத்தையும் பின்நோக்கிப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சகோதரர்களுள் ஒருவரான பஸில் ராஜபக்ஷ பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டு வடக்குக் கிழக்கு மாகாணம் உட்பட அனைத்துப் பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் இவரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இப்பொழுது புதிதாக அமைக்கப்படவுள்ள கொழும்பு பெருநகர்க் கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதியின் மற்றும் ஒரு சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷவிடமும் ஒப்படைக்கப்படலாம். அவர்தான் ஆளுநர் என்றும் நம்பகரமான வட்டாரங்களிலிருந்தும் செய்திகள் கசிந்துள்ளன.

## புத்திரசிகாமணி

இந்தச் செய்திகள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் மட்டுமல்ல ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மத்தியிலும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இன்று கொழும்புப் பெருநகர் நாளை கண்டி, அநுராதபுரம், ஊவா, சம்பிரகமுவ என நாட்டின் எல்லாப் பிரதேசங்களும் கூட்டுத்தாபனங்களாக்கப்பட்டால் நாடாளுமன்றம் எதற்கு? மாகாண சபைகள் எதற்கு? என அங்கலாய்க்கின்றனர் மக்கள் பிரதிநிதிகள். எல்லாம் ராஜபக்ஷ மயம் என்றால் நாம் எதற்கு என்ற கேள்விக்கு எப்போது விடை கிடைக்கும்...?

# மூட நம்பிக்கை



''இன்றைக்கு யார் முகத்தில் முழித்தேன் தெரியவில்லை. பார்க்கிறவர்கள் எல்லாம் என்மேல் எரிந்து விழுகிறார்கள்'' என்று சொல்லி அலுத்துக் கொள்பவர்கள் பல பேர் உள்ளனர்.

பார்க்கிறவர்கள் எல்லாம் எரிந்து விழுகிறார்கள். முழித்த முகத்தில் என்ன கோளாறு என்று யோசிப்பதை விட உங்கள் முகத்தில் அல்லது மனதில் என்ன கோளாறு? என்று யோசிப்பது நல்லது.

ஒரு சிறுவன் பரீட்சை எழுதினான். சித்தியடையவில்லை. ''என்னடா காரணம்?'' என்று விசாரித்தார்கள். அதற்கு அவன் ''வழக்கமாக நான் எழுதும் அந்தப் பச்சைக் கலர் பேனா அன்றைக்குத் தொலைந்து விட்டது; வேறு ஒரு பேனாவால் எழுத வேண்டியதாய்ப் போய்விட்டது; அதுதான் காரணம்'' என்றான்.

''பேனாவின் நிறத்தைப் பார்த்தா புள்ளி போடுகிறார்கள்?'' என்று கேட்டால், ''அப்படியில்லை...... எனக்கு அந்தப் பேனா தான் இராசியானது'' என்றான்.

இராசியான நிறம், இராசியான சைக்கிள், இராசியான வீடு இதெல்லாம் உண்மை என்று நினைக்கிறீர்களா?

மனோத்துவ நிபுணர்கள் இதெல்லாம் அர்த்தமில்லாத விசயம்- மூட நம்பிக்கை என்கிறார்கள்.

ஒரு தடவை, இரண்டு தடவை பச்சைக் கலர் பேனாவால் எழுதிச் சித்தியடைந்துவிட்டான். உடனே சித்தியடைந்ததற்கும் பச்சைக் கலருக்கும் சம்பந்தம் இருப்பதாக நம்பிக்கை அவன் மனதில் கொஞ்சம் கொஞ்சமாக வேர்விட ஆரம்பிக்கிறது. அவ்வளவுதான். மூடநம்பிக்கை அவன் மூளைக்குள் போய் உட்கார்ந்து கொள்கிறது.

மனோதத்துவ நிபுணர்கள் இதையெல்லாம் கூடச் சோதனைகள் மூலம் நிரூபித்திருக்கிறார்கள்.

ஒரு விஞ்ஞானி, சில புறாக்களைத் தனித்தனியாகக் கூண்டுக்குள் அடைத்து பதினைந்து நிமிடங்களுக்கு ஒரு தடவை அவைக்கு சில தானியங்களை ஆகாரமாகக் கொடுத்தார். அதற்குப் பின்னர் கவனித்தால் 15 நிமிடத்திற்கு ஒரு தடவை அந்தப் புறாக்களெல்லாம் வித்தியாசமாக நடந்து கொள்ள ஆரம்பித்தன. ஒரு புறா தலையை மேலும் கீழும் ஆட்டுகிறது. ஒன்று கூண்டுக்குள் அப்படியும் இப்படியுமாகச் சுற்றுகிறது. ஒன்று கழுத்தை ஒரு மூலைப்பக்கமாக நீட்டுகிறது. 15 நிமிடத்திற்கு ஒரு தடவை தவறாமல் உணவு போட்டுக் கொண்டு இருந்தார்கள். அந்தப் புறாக்களும் அந்த நேரம் பார்த்து ஒவ்வொரு விதமாக நடந்துகொள்ள ஆரம்பித்தன. அவையெல்லாம் மூட நம்பிக்கைக்கு ஆளாகிவிட்டன. இது எப்படியென்று அந்த நிபுணரே விளக்குகிறார்.

''முதல் தடவையாக உணவு போட்டபோது தற்செயலாக அந்தப் புறாக்கள் ஏதாவது செய்து கொண்டிருந்தன. உதாரணமாக ஒரு புறா உணவு வரும் நேரத்தில் தற்செயலாகத் தலையை மேலும் கீழும் ஆட்டிக் கொண்டிருந்தால், இரண்டு மூன்று தடவை உணவு வரும்போது இப்படி அது செய்தால் அதற்குப் பின்னர் இந்தப் பழக்கம் உறுதியாகிவிடும். ஒரு கட்டத்தில் தலையை ஆட்டினால் உணவு வரும் என்று அந்தப் புறா நம்ப ஆரம்பித்து விடும்'' அவ்வளவுதான் என்றார்.

இன்னொரு விசயம் என்னவென்றால் மூட நம்பிக்கைக்கு ஆதரவான சான்றுகளை மட்டும் மனிதன் தேட முயற்சிக்கிறான்.

ஒரு நாள், ஒரு மனிதன் முகத்தில் முழித்து அன்றைக்கு ஏதாவது கெடுதல் வந்துவிட்டது என்றால் அதற்கு அந்த மனிதரைப் பார்க்கும் போதெல்லாம் என்ன கெடுதல் நடக்குமோ அதைத்தான் கணக்கில் எடுத்துக் கொள்கிறோம். அன்றைக்கு ஏதாவது நல்லது நடந்தால் கூட அதை நினைத்துப் பார்ப்பதில்லை.

ஒரு விமான விபத்தில் தப்பி வந்தவர்களைப் பேட்டி எடுத்த போது ''நாங்கள் செய்த பிரார்த்தனைதான் எங்களைக் காப்பாற்றியது என்று சொன்னார்கள். அதே விபத்தில் இறந்து போனவர்கள் கூடக் கடைசிக் கட்டத்தில் பிரார்த்தனை செய்திருப்பார்கள். ஆனால் அதைச் சொல்வதற்கு அவர்கள் உயிரோடு இல்லை. இதனால் நிரூபிக்கிறது கஷ்ரமாகிப் போய்விட்டது.

பல நல்ல நம்பிக்கைகளைக் கூட நிரூபிக்க ஆதாரங்கள் இல்லாததால் மூடநம்பிக்கை என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த 'இராசி' பார்க்கிற விஷயத்தைச் சிலபேர் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு கணவர் தன் மனைவியைப் பார்த்து ''தினமும் காலையில் உன் முகத்தில் முழித்தால் அன்றைக்குப் பூராகவும் எனக்கு இராசிதான்? எல்லாம் நல்ல விதமாக நடக்கிறது'' என்று சொன்னார்.

அவரைத் தனியாக அழைத்து வந்து ''நீங்கள் அப்படிச் சொல்வது நிஜம்தானா?'' என்று கேட்டார் ஒருத்தர்.

அதற்கு அவர் ''அப்படிச் சொன்னதால்தான் காலையில் எழுந்து தேநீர் போட்டு என்முன் வந்து முகத்தைக் காட்டுகிறாள். இல்லையென்றால் அவள் நித்திரைவிட்டு எழ எட்டு மணிக்கு மேல் ஆகிவிடும். நான்தான் அவளுக்குத் தேநீர் போட்டுக் கொடுக்க வேண்டி வந்துவிடும்'' என்றார்.


**கோ. சுவாமிநாதன்.**

# அதிகளவு இசைப்பாடல்களைக் கேட்டால் மன அழுத்தம் ஏற்படும்



புத்தகங்கள் படிப்பதைக் காட்டிலும், எம்.பி3 யில் இசை கேட்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இதனால் அவர்கள் மன அழுத்தத்துக்கு ஆளாகின்றனர் என ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. அமெரிக்காவில் பிட்ஸ்பர்க் ப்லகலைக்கழகம், வடக்கு கரோலினா பல்கலைக்கழகம், கலிபோர்னியாப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டனர். 106 இளைஞர்கள் மற்றும் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள 46 பேரிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இரண்டு மாதம் நடத்தப்பட்ட ஆய்வில் ஒவ்வொரு வார இறுதியிலும் இவர்கள் அழைக்கப்பட்டு எவ்வாறு பொழுது போக்கினர் என்று கேள்வி கேட்கப்பட்டது. இவ்வாறு நடத்தப்பட்ட ஆய்வில் எப்போதாவது எம்.பி3 யில் இசை கேட்பவர்களைக் காட்டிலும் அதிகளவில் இசை கேட்பவர்களின் மன நிலை எட்டு மடங்கு அதிகமான மன அழுத்தத்தில் உள்ளது.
'இதே போல் எப்போதாவது புத்தகம் படிப்பவர்களுடன் அதிகளவில் புத்தகம் படிப்பவர்களை ஒப்பிடுகையில் 10இல் ஒருவருக்கு மன அழுத்தப் பாதிப்பு ஏற்படுகிறது என்பது தெரியவந்துள்ளது. இதுகுறித்து ஆய்வில் ஈடுபட்ட முக்கிய விஞ்ஞானி பிரையன் பிரிமாக் கூறுகையில், மன அழுத்தத்தில் இருப்பவர்கள் இதில் இருந்து தப்பிக்க இசை கேட்கின்றனரா அல்லது அதிகளவில் இசை கேட்பதால் மன அழுத்தம் ஏற்படுகிறதா அல்லது இரண்டும் சேர்ந்தே இருக்கிறதா என்பது தெளிவாகத் தெரியவில்லை'' என்று கூறியுள்ளார்.

# குழந்தை அழுவதை அறியத்தரும் மென்பொருள்



குழந்தைகளைக் கவனிக்க நம்முடன் யாருமே இல்லாத பட்சத்தில் நாம் மட்டும் தனியாக இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தையின் பக்கத்தில் நம்முடைய கைபேசியை வைத்து விடுங்கள். குழந்தை அழும்போது, இன்னொரு கையடக்கத் தொலைபேசிக்கு அந்த கையடக்கத் தொலைபேசியிலிருந்து அழைப்பு வந்துவிடும்.
இந்த மென்பொருளின் பெயர் CRY GUARD. முதலில் இதை நம்முடைய கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்து பின்னர் நம்முடைய இன்னொரு கையடக்கத் தொலை பேசியில் எண்ணைக் கொடுக்க வேண்டும்.

# ஒவ்வொரு காலத்துக்கும் ஏற்ற உணவுகளைப் பட்டியலிடும் இணையம்



நாம் சாப்பிடும் உணவு ஒவ்வொரு பருவகாலத்திற்கும் மாறுபடுகிறது. சில உணவுப்பொருள்கள் மற்றும் காய்கறிகள் சில காலங்களில் கிடைப்பதில்லை. அந்தந்தக் கால நேரத்தில் கிடைக்கும் சத்தான உணவு என்ன என்பதை நமக்குப் பட்டியலிட்டு காட்டுகிறது ஓர் இணையத்தளம்.

மாறி வரும் சூழ்நிலையால் ஒவ்வொரு காலநிலையிலும் சில இயற்கையான பொருள்கள் நமக்குக் கிடைக்கின்றன. ஆனால் அப்படிக் கிடைக்கும் பொருள்களில் எதையெல்லாம் நாம் பயன்படுத்துகிறோம். எந்தப் பொருள்கள் எல்லாம் நமக்கு அதிக அளவில் ஊட்டச்சத்துக் கொடுப்பதாக உள்ளது என்பதை நமக்குச் சொல்ல ஓர் இணையத்தளம் உள்ளது. www.eattheseasons.com/ என்ற இணையத்தளத்துக்குச் சென்றால் ஒவ்வொரு பருவகால நிலைக்கும் ஏற்ப நாம் சாப்பிட வேண்டிய உணவுப்பொருள்கள் என்னென்ன என்பதை துல்லியமாகக் கூறுகிறது. நாம் எந்த மாதத்தில் இருக்கிறோம் என்பதையும் இந்த மாதத்தில் கிடைக்கூடிய பொருள்கள் என்ன என்பதில் தொடங்கி, ஒவ்வொரு காய்கறியிலும் கிடைக்கும் புரதச்சத்து மற்றும் அந்தக் குறிப்பிட்ட காய்கறியின் வரலாறு, அது எந்த நாட்டில் அதிகமாகக் கிடைக்கும் இப்படி அனைத்து விதமான தகவல்களையும் நமக்குக் கொடுக்கிறது. நம் உடல் ஆரோக்கியமாக இருக்க ஒரு மருத்துவர் என்னவெல்லாம் சாப்பிடச் சொல்வாரோ அதை எல்லாம் இந்த இணையத்தளம் எமக்கு அறிவிக்கிறது.

# நோயற்ற நல்வாழ்வுக்கு குரக்கன் உணவு





குரக்கனில் 72 வீதம் வரையில் மாச்சத்து அடங்கியுள்ளது. நூறுகிராம் குரக்கன் வழங்கும் சக்தியின் அளவுப் பரிமாணம் கிலோ கலோரி-328ஆகும். இது குரக்கன் கொண்டுள்ள மிகச் சிறப்பான குண விசேடமாகிறது. இவற்றுக்கு அப்பால் 7.8 வீதமான புரதம் (புரோட்டீன்) 1.3 வீதமான கொழுப்பு, 2.7 வீதமான கனியுப்புக்கள் 3.6 வீதமான நார்ப் பொருளையும் குரக்கன் தன்னகத்தே கொண்டுள்ளது.

குரக்கன் தானியத்தை உணவாகக் கொள்வதன் மூலம் நாளாந்தம் ஒருவருக்குத் தேவைப்படும் கல்சியம் மற்றும் பொஸ்பரஸ் அளவுப் பிரிமாணத்தை இலகுவாகப் பெறமுடிகிறது. இதன் காரணமாகக் குரக்கனை உணவில் கொள்வோருக்கு ஒஸ்ரியோ பொரோசீஸ் மற்றும் ஒஸ்ரியோ ஆத்தரைரீஸ் போன்ற நோய்த் தாக்கங்கள் ஏற்படும் அபாயம் குறைந்து போகிறது. இன்னும் சொல்வதானால், குரக்கனில் பிரதானமான ''விட்டமின் "B"'' சத்தான தயமின், ரைபோப்லேவின் மற்றும் நியாசின் செறிந்துள்ளன. குரக்கனிலுள்ள இந்த விஷேட குணநலன் காரணமாகக் குறிப்பாக நீரிழிவு மற்றும் இதய நோயாளர்கள் தொடர்பாகக் குரக்கன் குணம் மிக்கதொரு உணவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும், குரக்கனில் காணப்படும் நார்ப்பொருளுக்கு உடலுக்கு ஒவ்வாத கொலெஸ்ரோலைக் குறைத்துவிடும் ஆற்றலும் உள்ளது. நீரிழிவு நோயாளருக்கு மிகச் சிறந்த உணவாக மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுவதற்குக் குரக்கன் தானியத்தில் க்ளைடிமிக் இன்டெக்ஸ் பெரிதும் குறைவாக இருப்பதே காரணமாகிறது.

எனவே குரக்கன் தானியத்தைக் கொண்டு சுவைமிக்க உணவு வகைகளைத் தயாரித்துக் கொள்வதன் மூலம் எமது பிரதான உணவு முறைகளுக்குக் குரக்கனைச் சேர்த்துக்கொள்வது பயன் மிக்கதாகும். பெரும்பாலும் எமது முன்னோர்களின் ஆகாரமாகக் குரக்கன் பிட்டு, குரக்கன் ரொட்டி போன்றவை முக்கிய இடத்தை வகித்துள்ளன என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. *(தொடரும்)*

# தொலைக்காட்சி பார்க்கும் குழந்தைகளுக்கு இதயநோய் பாதிப்பு அதிகம்



தினமும் அதிக நேரம் தொலைக்காட்சி பார்க்கும் குழந்தைகளுக்கு இதய நோய் வர மிக அதிக வாய்ப்பு இருப்பதாக மருத்துவ ஆய்வு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. பணக்காரர்கள் முதல் ஏழைகள் வரை அனைவரது வீட்டிலும் தவறாமல் இடம் பெறும் சாதனம் தொலைக்காட்சி தான். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் பேசி, விளையாடுவதை விட தொலைக்காட்சி முன் அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர்.
ஓர் இடத்தில் அமராமல் ஓடி ஆடும் குழந்தைகளுக்கு உணவு கொடுக்க சிரமப்படும் தாய்மார்கள், குழந்தைகளை ஓர் இடத்தில் அமர வைக்கத் தொலைக்காட்சியில் ஏதாவது கார்டூன் சேனலைப் போட்டு விட்டு உணவு கொடுக்கின்றனர்.
இதன் விளைவு இன்றைய இளம் தலைமுறையினர் காலை முதல் இரவு தூங்கும் வரை தொலைக்காட்சி பார்ப்பதையே பிரதான பொழுது போக்காகக் கொண்டுள்ளனர். இவ்வாறு அதிக நேரம் தொலைக்காட்சி பார்க்கும் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து. ஆய்வில் இறங்கியது சிட்னி பல்கலைக்கழக ஆராய்ச்சிக்குழு.
3-6 வயதிலான சுமார் 1500 குழந்தைகளிடம் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் முடிவு பல அதிர்ச்சி தரும் தகவல்களை வெளியிட்டுள்ளன. அதன்படி சராசரியாக நாள் ஒன்றிற்கு 2 மணி நேரம் தொலைக்காட்சி பார்க்கும் குழந்தைகள், 40 நிமிடங்கள் வரை ஓடி, ஆடி விளையாடும் செயல்களில் ஈடுபட்ட போதிலும் அவர்களின் கண்களின் பின்புறம் உள்ள நரம்புகளை சுருக்கி விடுவதுடன் இதயம் உள்ளிட்ட பல முக்கிய உறுப்புக்களுக்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் நரம்புகளையும் சுருக்குகிறது.
இதனால் இதயம் உள்ளிட்ட பல உறுப்புகளுக்கான சீரான இரத்த ஓட்டம் பாதிக்கப்படுகிறது. இதுவே நாளடைவில் இதய நோய், இரத்த அழுத்தம் மற்றும் நீரழிவு நோயை ஏற்படுத்த மிக அதிக வாய்ப்புக்கள் இருப்பதாக எச்சரிக்கிறது.
நாள் ஒன்றிற்கு சுமார் ஒரு மணி நேரம் மட்டுமே தொலைக்காட்சி பார்த்துவிட்டு அதிக நேரம் விளையாடும் குழந்தைகளின் இரத்த ஓட்டம், இரண்டு மணி நேரம் தொலைக்காட்சி பார்த்த குழந்தைகளின் இரத்த ஓட்டத்தை விட சிறப்பாக உள்ளது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# கிராமிய வழிபாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் புளியந்தீவு ஸ்ரீ நாகேஸ்வரன் ஆலயம்



புளியந்தீவுப் பகுதி அனலைதீவின் தென்பகுதியில் உள்ளது. இதைச் சிவ பூமியாக நோக்குகிறார்கள் அனலைதீவு மக்கள். மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என ஓர் ஆலயத்துக்குத் தேவையான அம்சங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது ஸ்ரீ நாகேஸ்வரன் ஆலயம். பற்றைக்காடு நிறைந்த - பாம்புகளின் புகலிடமாக உள்ள பகுதி இதுவாகும். ஆலய விருட்சமாக அரசமரமும் சிவனுக்குரிய கொன்றை மரமும் புனிதமாகப் பேணப்படுகின்றன.

ஈழத்தில் குறிப்பாக நயினாதீவு, புளியந்தீவுப் பகுதிகளில் காலத்தால் முந்திய ஈழத்தில் வேரூன்றிக் காணப்பட்ட நாக வழிபாடு சிறப்பாக இருந்துள்ளது. இதன் காரணமாகப் புளியந்தீவில் நாகதம்பிரான் வழிபாடுகள் இருந்து பிற்பட்ட நாள்களில் சிவாலயமாகப் பரிணமித்த ஆலயம் இது என நாகேஸ்வரன் ஆலயம் பற்றிய வரலாற்றில் அறிய முடிகின்றது. இவை தவிர நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலயத்துடன் இந்த ஆலயத்துக்கு நிறைந்த தொடர்புகள் உள்ளன. புளியந்தீவில் இருந்து நாகம் ஒன்று தினமும் தனக்குப் பூஜிக்கப்பட்ட அல்லது சிவனுக்குப் பூஜிக்கப்பட்ட மலர் ஒன்றினைத் தனது வாயில் எடுத்து வந்து கடல் வழியாக நயினை நாகபூஷணி அம்பாளை வழிபட்டுத் திரும்புவதாகச் சொல்லப்படுகிறது. இது நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய வரலாற்றிலும் கூறப்படுகின்றது. இதுபற்றிய சித்திரங்கள் இரண்டு ஆலயங்களிலும் காணப்படுகின்றன. நயினாதீவு சித்திரத் தேரிலும் இக் காட்சி உண்டு. அத்துடன் இரு தீவுகளுக்கும் இடைப்பட்ட கடலில் பாம்பு சுற்றிய கல், கருடன் இருந்த கல் என இரண்டு கற்களைக் காணலாம்.

'அனலைதீவு வாழ்வும் வளமும்' நூலில் இந்த ஆலயத்தின் சிறப்புக்கள் குறித்து விரிவாக உள்ளது எனவும் அனலைதீவு மக்கள் தெரிவித்தனர். நயினை அம்பாள் ஆலயம் 1620-1624 வரையான காலப் பகுதியில் போர்த்துக்கேயரின் தாக்குதலுக்கு உட்பட்ட சமயம் நாகதம்பிரான் விக்கிரகம் புளியந்தீவில் உள்ள அரசமரப்பொந்தொன்றில் மறைத்து வைக்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்று வந்ததாகக் கூறப்படுகின்றது.

இதுமட்டுமல்லாது தேவர்கள் மற்றும் வியாக்கிரம பாதர், பதஞ்சலி போன்ற ரிஷிகள் இங்கு கிடைத்த மூலிகைகளைக் கொண்டு நோய்களை நீக்கியுள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

புலிமுகம் கொண்ட அரசன் ஒருவன் தனது சாபம் நீங்க இந்தத் தலத்தில் தங்கி சிவனருளாலும் மூலிகைகளினாலும் புலிமுகம் மறைந்து மனித முகம் கிடைக்கப் பெற்றான் எனவும் இந்தத் தீவு புலியேந்தி என்று அழைப்பதற்கான காரணப் பெயராக இந்தச் சம்பவம் உள்ளது என்றும் கூறப்படுகிறது.

தமிழர்களின் கிராமியத் தொன்மை வழிபாடுகளை நினைவு கூரும் வகையில் ஞாயிறு தோறும் நாகவழிபாடாக பாம்புக்குப் பால் அபிஷேகம், ஆவணி ஞாயிறில் சூரிய வழிபாடு என்பன இடம் பெறுகின்றன. அதுமட்டுமல்லாமல் சிவராத்திரி, நவராத்திரி, ஆனி உத்தரம், சோமவாரம், பிரதோஷ விரதம், திருவெம்பாவை ஆகிய விரதங்கள் கிரமப்படி நடைபெறுவதுடன் மாதந்தோறும் நடேசர் அபிஷேகமும் மார்கழித் திருவாதிரையும் முக்கிய சிறப்புப் பெற்ற நிகழ்வுகளாகத் தொடர்ந்து வருகின்றன. வருடாந்த உற்சவம் பத்துத் தினங்கள் நடைபெறுகின்றன. ஆவணி பௌர்ணமியன்று தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

நயினை தெப்பத் திருவிழாவின் போது நாகபூஷணி அம்பாள் இந்த ஆலயத்துக்கு எழுந்தருளி வருவதாகவும் புளியந்தீவு நாகேஸ்வரன் ஆலயத்துக்கான இறங்குதுறை சீரற்றதை அடுத்து இந்த வழமை இடம்பெறாது போய்விட்டதாகவும் கூறப்படுகிறது.

அனலைதீவு மக்கள் மீண்டும் முன்பு போல் நாகபூசணி அம்பாள் இங்கு தெப்பத் திருவிழாவின் போது எழுந்தருள வேண்டும் என விரும்புகிறார்கள்.

சிவராத்தி புராணம், ஏகாதசிப் புராணம் போன்றவற்றை எழுதிய வரதபண்டிதரின் இலங்கை மான்மியம் என்ற நூலில் நாகேஸ்வர மான்மியம் பகுதியில் உள்ள பாடல்களிலும் புளியந்தீவு சிவலாயம் பற்றிய முன்னோர்களின் செவிவழிக்கதைகளிலும் புலியேத்தி என்னும் புளியந்தீவு நாகேஸ்வரன் ஆலயம் எட்டு ஈஸ்வரங்களில் ஒன்றாக விளங்கியதாக அறியப்படுவதாக ஆல யம் பற்றிக் கூறியவர்கள் தெரிவித்தனர்.

"பூவாயிற் கொண்டு பொறியரவம் பூசை செயும்
தேவாழ் புலியூர்ச் சிவபெருமான்-பாமாலை
ஒத்துணை புரியு முள்ளத்துறை கலைமான்
பாதத்துணை புரியும் பார்"

என ஸ்ரீ நாகேஸ்வரனின் அருள் குறித்த நம்பிக்கை அனலைதீவு மக்களிடம் நிறையவே காணப்படுகின்றது. *

**லக்ஸ்மன்**

# இறால் வளர்ப்புக்கு சிறந்த வளம் நிறைந்த காரைநகர்ப் பிரதேசம்

(சென்றவாரத் தொடர்ச்சி)



உள்ளூரில் பிடிக்கப்படும் மீன்களில் மிகக் குறைந்தளவு மீன்களே கடற்கரையோரங்களிலும் உள்ளூர்ச் சந்தைகளிலும் பேரம் பேசல், கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

வெளியூர்களில் தராசில் நிறுத்தி கிலோக்கணக்கில் விற்பனை செய்வதைப் போன்று இங்கு மீன்கள் தராசில் நிறுத்தி விற்பனை செய்யப்படுவதில்லை. மீன்கள் அதிகமாகப் பிடிக்கப்படும் குறிப்பிட்ட சில மாதங்களில் விலை குறைவாக இருக்கும். அருந்தலாகக் கிடைக்கக் கூடிய காலங்களில் மீன் விலை அதிகமாக இருக்கும்.

பிடிக்கப்படும் மீன்களில் பெரும் பகுதி காரைநகர்ப் பிரதேசத்துக்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டு வெளியூர்ச் சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. பொன்னாலை, மூளாய், சுழிபுரம், சங்கானை போன்ற இடங்களில் உள்ள சந்தைகளுக்கு இங்கிருந்து மீன்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. அதிகாலை வேளை காரைநகர்ப் பிரதேசத்தினுள் நுழையும் சைக்கிள், மோட்டார் சைக்கிள் வியாபாரிகள் கடற்கரைக்குச் சென்று நேரடியாகவே கடற்றொழிலாளர்களிடம் பேரம் பேசி மீன்களைப் பெற்றுச் செல்கின்றனர். விலை வீழ்ச்சியடையும் காலங்களில் பிடிக்கப்படும் மீன்களும் கருவாடு போடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

1970 களில் இருந்து 1980 கள் வரையான காலப்பகுதிகளில் இந்தப் பிரதேசத்தில் பிடிக்கப்படும் கடல் உணவில் பெரும் பகுதியை சீ-நோர் நிறுவனம் கொள்வனவு செய்தது. இந்த நிறுவனம் ஐஸ் போடுதல், தகரத்தில் அடைத்தல் இறால் பதனிடல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு பெருமளவு கடலுணவை கொழும்பு போன்ற தென்னிலங்கையின் பல பாகங்களுக்கும் எடுத்துச்சென்று விற்பனை செய்து வந்தது. 1980களில் சீ-நோர் நிறுவனம் செயல் இழந்த பின்னர் காலத்தேவைக் கேற்ப கடலுணவைப் பதனிட்டு வெளியூர்களுக்கு எடுத்துச் செல்லும் முயற்சியும் கைவிடப்பட்டது.

1980களின் பிற்பகுதியில் குறிப்பிட்ட அமைப்பு ஒன்றினால் இறால் வளர்ப்பு பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டு இலாபம் தரும் தொழிலாக வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. 1991 இடப்பெயர்வின் பின் இறால் வளர்ப்பு முற்றாகக் கைவிடப்பட்டது.

மீண்டும் தற்போது இந்தத் திட்டம் காரைநகர் ஊரிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பிற்பகுதியில் கிராமியக் கைத்தொழில், சுயதொழில் அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் ஊரி கடற்றொழிலாளர் சங்கத்தினால் மேற்படி திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

10 லட்சம் ரூபா செலவில் சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவுடைய பிரதேசத்தில் கடல் நீர் தேக்கப்பட்டு இறால் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தப் பண்ணையில் இருந்து ஏற்றுமதித் தரத்திலான சுமார் ஆயிரம் கிலோ இறால் பிடிக்கப்பட்டு இந்த வருடம் முற்பகுதியில் வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஒரு கிலோ இறால் ரூபா 650 வரை விலைபோனதாகக் கூறப்பட்டது. தொடர்ந்து இரண்டாம் கட்ட இறால் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. புத்தளத்தில் இருந்து தருவிக்கப்பட்ட இறால் குஞ்சுகளே இங்கு வளர்க்கப்படுகின்றன.

காரைநகர்ப் பிரதேசத்தில் அம்பாள் கடற்றொழிலாளர் சங்கம், சிவகௌரி கடற்றொழிலாளர் சங்கம், மருதபுரம் மருதமலை முருகன் கடற்றொழிலாளர் சங்கம், கல்லந்தாழ்வு ஸ்ரீ முருகன் க.தொ.சங்கம், வியாவில் ஐயனார் க.தொ. சங்கம், நீலங்காடு க.தொ.சங்கம், ஊரி க.தொ.சங்கம், பிட்டியெல்லை க.தொ. சங்கம், தோப்புக்காடு க.தொ. சங்கம், பாலாவோடை க.தொ. சங்கம் ஆகிய பத்துக் கடற்றொழிலாளர் சங்கங்கள் இயங்கிவருவதுடன் இந்தப் பத்துச் சங்கங்களை உள்ளடக்கி காரைநகர் கடற்றொழிலாளர் சமாசமும் செயற்பட்டு வருகின்றது. இந்தச் சங்கங்களில் சுமார் 1500 தொழிலாளர்கள் அங்கம் வகிப்பதாகக் கூறப்படுகின்றது. இந்தக் கடற்றொழிலாளர் சங்கங்கள் கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் கடற்றொழில் விருத்திக்கும் பல்வேறு வழிகளில் உதவி வருகின்றன. *

**டர்சிகன்**

(முற்றும்)

பிறந்தநாள் வாழ்த்துடன்
முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
27.04.1950



மறைவு
28.04.2010

வைத்திய கலாநிதி திருமதி
**மேரி சொபியா விஸ்வலிங்கம்**
(விஸ்ப பாரதி மெடிக்கல் கிளினிக்)

அன்பு மொழி பேசி எம்மை ஆதரவாய் அரவணைத்து
இன்ப வாழ்வில் எம்முடன் இதயம் மகிழ வாழ்ந்திரே!
துன்பச் சுவடே தெரியாமல் அன்புடனே வாழ்ந்திருந்தீர்
தூய உள்ளமே! எம்மைப் பிரிய எப்படி மனம் வந்தது?
இடைநடுவில் எம் எல்லோரையும்
ஏங்கித் தவிக்கவிட்டு விட்டு எங்கு தான் சென்றீர்?
உன் உடல் மறைந்தாலும் உருவம் மறையாது
ஓர் ஆண்டு விரைந்தோடிப் போயிற்றே.
இதயம் நெகிழ்ந்து உம்மை நினைந்து இதய அஞ்சலி
செலுத்துகின்றோம்.

8, இராசாவின் தோட்ட ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(21,25,49)

# மோ. சைக்கிள் மரத்தில் மோதி இருவர் காயம்

நெல்லியடி, ஏப்.27

தலைக்கவசம் அணியாது வேகமாக மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையால் வீதிக்கு அருகில் இருந்த மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானார்கள்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் புலோலி பல்லப்பைச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

புலோலி முருகன் கோயிலடியைச் சேர்ந்த எஸ். நிதிரஞ்சன் (வயது-35), எஸ். கார்த்திக் (வயது-25) ஆகியோரே காயமடைந்தனர்.

இருவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர்களில் படுகாயமடைந்த எஸ். நிதிரஞ்சன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஓ-319-320)

## தொழில்நுட்ப இணைப்பாளர் பதவிக்கு விண்ணப்பம்

கிளிநொச்சி, ஏப்.27

கிளிநொச்சி மாவட்டத் திட்டமிடல் செயலகத்துக்கு தொழில்நுட்ப இணைப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

தேசிய தொழில்நுட்படிப்ளோமா அல்லது தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ், வீதி மற்றும் நீர்ப்பாசனத்துறையில் 3 வருடகால அனுபவம் உடையவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை நாளை புதன்கிழமை அல்லது அதற்கு முன்னர் மாவட்டத் திட்டமிடல் செயலகத்தில் நேரில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்படுகிறது. (ஓ-10)

## தேவாலயத்தில் சிலை திருட்டு

புன்னாலைக் கட்டுவன், அச்செழு யூலன் வீதியில் அமைந்துள்ளபுனிதஹென்றியரசர் தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த ஹென்றியரசர் சிலை ஒன்று நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் திருட்டுப் போயுள்ளது.

இந்தச் சிலை மரத்தில் செதுக்கப்பட்டது என்றும் இதன் பெறுமதி ஏறத்தாழ ரூபா 25 ஆயிரம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தேவாலயத்தில் 5 வருடங்களுக்கு முன்னரும் இதே போன்ற சிலை திருட்டுப் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-323)

வேலையாள்கள் தேவை

சோடாப் போத்தல்களை வாகனங்களில் ஏற்றி இறக்கும் பணிக்கு வேலையாள்கள் தேவை.
368/B, முஸ்லிம் கல்லூரி வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.
தொ.இல: 021-2225595
(3531)

VISA - வீசா
Consultancy Service
*UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,*
Visit / Tourist, Business, Family
Students, Migration, Medical Visas
Call : 0776 209 887
SIC, 101/35, Stanley Road, Jaffna
(Behind PEOPLES BANK)

ஓம் ஸ்ரீ சாய்ராம்
நெஞ்சை விட்டகலாத
முதலாமாண்டு நினைவஞ்சலி



திருமதி தேவநேசம்
ஸ்ரீதரன்
ஜனனம்
22.09.1944
சாயியுடன்
08.05.2010
திதி: சித்திரை மாத
அபரபக்ஷ தசமி

"ஆத்மாவுக்குப் பிறப்போ, இறப்போ கிடையாது. ஒரு முறை இறந்த பிறகு அவன் இல்லாமல் போவதுமில்லை அவன் இறப்பற்ற, நித்தியமான என்றும் நிலைத்திருக்கும், மரணமற்றவன். உடல் அழிக்கப்படுவதால் அவன் அழிக்கப்படுவதில்லை"
-பகவத்கீதை

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" -குறள்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
ஜெய் சாயிராம்

நீங்காத்துயரில் ஆழ்ந்திருக்கும்:
கணவர் (ம.க.ஸ்ரீதரன்-இளைப்பாறிய கணக்காளர்),
சகோதர சகோதரிகள், மைத்துனர்,
மைத்துனிமார், குடும்பத்தினர்.

24, சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(21,25,49)

லங்கா வோல்டைல்ஸ்
மகத்தான
மலிவு விற்பனை!
40% தள்ளுபடி
ஏராளமான வடிவங்களிலும்
அளவுகளிலும் பெறலாம்.
ஏப்ரல் 25முதல் 30வரை
261, மின்சார நிலைய வீதி.
(யாழ்.போதனா வைத்தியசாலைக்குப் பின்புறமாக),
யாழ்ப்பாணம்.
இந்த அரிய வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்!
யாழ்.ஏக விநியோகஸ்தர்
நியூ கமல் செரமிக்ஸ்
இல.37, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். T.P: 0213205444

பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
07.03.1920
உதிர்வு
18.04.2001

அமரர்
நாகலிங்கம் பொன்னம்பலம்

திதி: (27.04.2011) தசமி
வையக வாழ்விலே வழிகாட்டிய தந்தையே!
மெய்யது நீங்கி ஓர் தசாப்த மாகிலும்
பொய்யிலா நின் புகழ் நீண்டு நிலைத்திட
கையது கூப்பிக் கரன் தாழ் பணிகின்றோம்.

கேணிக்கரை,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(25,23,49)

கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறமா No. 1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 28.04.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவுசெய்யவும்.

★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி 0774656377
★ முகுந்தன், பருத்தித்துறை 0771392593

திருப்பிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.
(3412)
நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்,
தொ.பே இல:- 021 222 6944.

கோண்டாவில் கிழக்கில் வீடு விற்பனைக்கு

பலாலி வீதிக்கு அண்மையில் கோண்டாவில் கிழக்கில் இராசவீதியையும் பலாலி வீதியையும் இணைக்கும் கோட்டைக்காடு வீதியில் பரப்பு 1½ நிலத்தில் அமைந்துள்ள வீடு, சுற்றுமதிலுடன் உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: 0779633993.

இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

எவரெஸ்ட் தாளங்காய்த் தைலம்



★ வாதம், மூட்டுவீக்கம், மூட்டு வேதனை என்பவற்றுக்குச் சிறந்த நிவாரணி
★ யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய சித்த மருத்துவர்களின் கையாட்சி முறைப்படி தயாரிக்கப்பட்டது.
★ யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லா மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
எவரெஸ்ட் மருந்தகம்
(பதிவு Ay/MF/JA/295)
உசன், மிருசுவில்.

பணியாளர் தேவை

திருநெல்வேலியிலுள்ள கணக்காளர் நிறுவனத்துக்கு,
* பயிலுநர்கள்-A/L வர்த்தகம் கற்றவர்கள் தேவைப்படுமிடத்து தங்குமிடவசதி, உணவு வழங்கப்படும்.
* விடுதி பராமரிப்பாளர் - சமையல் வேலை (இரவுநேர வேலை) தெரிந்தவர்கள். பழக விரும்புபவர்கள்.
தொடர்பு: 0779530496.
(3601) (38)

# செருப்புக்கு அளவாகக் காலை வெட்டலாமா?

சாதாரணதரப் பெறுபேறுகள் வெளிவந்துவிட்ட நிலையில் இரண்டாம் தவணையில் தாம் உயர்தரத்துக்குள் நுழைவதைப்பற்றி ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்த மாணவர்களிடத்தே பாடத்தெரிவு என்கிற விடயம் ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அதுவும் ஸற் ஸ்கோர் சிஸ்டத்தில் உயர்தரத்தில் தெரிவுசெய்யப்படும் பாடங்களே பல்கலை அனுமதியைத் தீர்மானிப்பவையாக மாறியிருக்கின்றன.

ஆனால் அனேக குடாநாட்டுப் பாடசாலைகள் இன்னமும் பழைய பஞ்சாங்கத்துக்குள் மூழ்கியவையாகவே இருப்பதால் மாணவர்கள் தாம் விரும்பிய, பல்கலை அனுமதியை இலகுவாக்கும் பாடங்களை தெரிவு செய்வதில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. அதிலும் கலைப்பிரிவு மாணவர்களுக்கே பாடத்தெரிவு என்பது கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட நிலையை உண்டுபண்ணியுள்ளது.

ஆர்ட்ஸ் படிக்கிற எல்லோரும் கட்டாயம் தமிழ்ப்பாடம் எடுக்க வேணும்

இது பல பாடசாலைகளின் தாரக மந்திரம். தமிழ் நமது தாய்மொழி என்பதாலும், சிலவேளைகளில் பல்கலை அனுமதி சறுக்கினால் தேசிய கல்வியியல் கல்லூரி அனுமதிக்கான சந்தர்ப்பத்தை தமிழ்ப்பாடம் அதிகரிக்கும் என்பதாலும் இவ்வாறு மாணவர்களுக்கு பாடசாலைகள் அறிவுறுத்துகின்றன. தமிழ் மொழியின் எதிர்காலத்தையும், மாணவர்களின் எதிர்காலத்தையும் முன்னிறுத்தியே இவ்வாறு சொல்லப் பட்டாலும் அதை வலிந்து திணிப்பது ஆரோக்கியமானதா என்பது விவாதத் துகுரியது. ஏனெனில் மாணவர்களின் சுயவிருப்புதல் இன்றித் திணிக்கின்ற எந்தவொரு விடயமும் அவர்களிடத்தே எதிர்மறையான தன்மையையே உண்டு பண்ணும். அதனால் அவர்கள் உயர் தரத்தில் வேண்டாவெறுப்பாகத் தமிழ்ப் பாடத்தைக் கற்பதை விடவும் அதைக் கற்காமல் இருப்பதே மேலானது. அத்துடன் ஸற் ஸ்கோரில் தமிழ்ப்பாடத்தின் நிலை என்னவென்பதும் கேள்விக் குறிதான். கலைப்பிரிவில் கல்வி கற்கின்ற வர்கள் தமிழ்ப் பாடத்தைக் கட்டாயம் எடுக்க வேண்டும் என்பதும் மரபார்ந்த நம் சிந்தனையில் ஊறிப்போன விடயம் தான். அதனை இனியாவது மாற்ற வேண்டும். மாணவர்கள் தாமாகவே முன்வந்து தமிழ்ப்பாடத்தைக் கற்கும் நிலையை மாணவர்கள் சிறுவயதிலிருந்தே ஏற்படுத்த வேண்டுமே யொழிய திணிக்க முற்படக்கூடாது.

அதேபோலத் தாம் விரும்பிய , ஸற் ஸ்கோரில் உயர்நிலையைப் பெற்றுத் தரக் கூடிய ஏனைய பாடங்களையும் மாணவர்கள் தெரிவு செய்யமுடியாதுள்ளது. ஏனெனில் அனேக பாடசாலைகளில் அவ்வாறான பாடங்களைக் கற்பிப்பதற்கு உரிய ஆசிரியர்கள் இல்லையென்று கைவிரிக்கப்படுகின்றது. அதனால் வேறு வழியின்றி பாடசாலைகளில் எந்தெந்தப் பாடங்களுக்கு ஆசிரியர்கள் இருக்கிறார்களோ அந்தப் பாடங்களையே அட்டவணையில் இடர்ப்பாடு ஏற்படுவதாகக் கூறி மாணவர்களைத் தெரிவு செய்யவைக்கின்றனர். உதாரணமாக யாழ்.நகரில் உள்ள பெண்கள் பாடசாலை ஒன்றில் புவியியல் பாடத்தை எடுப்பவர்கள் தமிழ்ப் பாடத்தையும் தமிழ்ப்பாடத்தை எடுப்பவர்கள் புவியியலையும் தெரிவுசெய்யமுடியாது. ஆனால் இவ்விரு பாடங்களுக்கும் அங்கு ஆசிரியர்கள் தாராளமாக இருக்கிறார்கள். மேற்குறித்த பாடங்கள் இரண்டையும் ஒரே மாணவர் எடுத்தால் அது பாட அட்டவணைத் தயாரிப்பில் சிக்கலைக் கொண்டுவரும் என்று மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காலுக்கு அளவாகச் செருப்பைத் தேர்ந்தெடுக்காமல் எடுத்த செருப்புக்கு அளவாகக் காலை வெட்டுவது போன்றே இவற்றைப் பார்க்கமுடியும். இப்போது மாணவர்களை இந்தப் பாடத்தைத் தான் கற்கவேண்டும் என வற்புறுத்திவிட்டு, பின்னர் உயர்தரப் பெறுபேறு வெளிவந்தவுடன் யாழ்.மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சி என ஆராய்ச்சி செய்து அங்கலாய்ப்பதில் என்ன பயன்?

பாடசாலைகளில் உயர்தரப் பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிரப்பப்படவேண்டும். ஏராளமான துறை சார்ந்த பட்டதாரிகள் இன்னமும் வேலையற்றவர்களாக வருடக்கணக்கில் காத்திருக்கிறார்கள். அவர்களை உள்ளீர்த்து ஆசிரிய வெற்றிடங்களைப் பூர்த்திசெய்து, மரபார்ந்த சிந்தனைகளை விடுத்து, நவீன உலகியலுக்கு ஏற்ப மாணவர்களை உருவாக்கக் கல்வித்துறையினர் முன்வர வேண்டும்.

ஓடுகாலி

# விண்ணை வென்ற மண்ணின் மைந்தன்

**விண்வெளியில் மனிதன் கால் பதித்துச் சாதனை படைத்த 50 ஆவது ஆண்டுநினைவுதினம் கடந்த 12 ஆம் திகதியாகும். இந்தச் சாதனையை நிலைநாட்டியவர் யூரி ககாரின். இதனை நினைவுகூரும் வகையில் இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் போன்ற கோள்கள் மனிதனின் கற்பனைக்கு அப்பாற்பட்டிருந்த காலம் அது. அண்டவெளியில் கோடிக்கணக்கான வருடங்களாகச் சஞ்சரித்து வரும் இந்தக் கோள்களைப் பற்றிய கற்பனைக் கதைகளும் கனவுகளும் நிலவி வந்த காலப்பகுதியில் அண்டவெளியில் பரிசோதனை நிலையமொன்றை அமைத்து புவிக்கிரகத்தில் இருந்து ஏனைய கோள்களின் நடமாட்டத்தை அவதானிக்க மனிதன் மேற்கொண்ட கன்னி முயற்சியின் ஐம்பதாவது ஆண்டு இம்மாதம் 12ஆம் திகதி வந்தது.

அதுவரை மூடுமந்திரமாகவே இருந்து வந்த சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும் மனிதனது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட இந்த விண்வெளிப் பிரவேசம் முதலடியாக அமைந்தது. அந்த முதலடியை வெற்றிகரமாக எடுத்து வைத்து மனித சமுதாயத்துக்கு மகத்தான சேவையொன்றை ஆற்றிய யூரி ககாரின் இன்று நம்மிடையே இல்லையெனினும் அவரது நாமம் புவிக்கிரகம் இருக்கும் வரைவில் அழியாத இடம் பெற்றுள்ளது. சுருக்கமாகக் கூறப்போனால் உயிருக்குத் துணிந்து அண்டவெளியில் முதலடி எடுத்து வைத்த யூரி ககாரின் தைரியமும் திறமையும் காலத்தால் அழியாதவை.

சோவியத் ரஷ்யாவைச் சேர்ந்த இந்த மாவீரன் பிறந்தது 1934 ஆம் ஆண்டு மார்ச் ஒன்பதாம் திகதி. சோவியத் ரஷ்யாவின் கூட்டுறவுப் பண்ணையொன்றில் பணிபுரிந்த பெற்றோர்களின் நான்கு பிள்ளைகள் அடங்கிய குடும்பத்தில் இரண்டாவதாகப் பிறந்தவர் ககாரின். எலக்ஸி இதுநொச்சி ககாரின் என்பது அவரது குடும்பப் பெயர். தந்தை திறமை வாய்ந்த ஒரு தச்சுத் தொழிலாளி. தாயாரான "டிமோபெயச்சினா ககாரினா" வாசிப்பில் தீவிர வேட்கை கொண்டவர். பெற்றோர்கள் பண்ணை வேலையில் ஈடுபட்டிருக்கும் சமயத்தில் ககாரினைக் கவனித்துக் கொள்வது அவரது மூத்த சகோதரியே.

துறுதுறுப்பும், சுறுசுறுப்பும் மிக்க ஆரோக்கியமான குழந்தையாக இருந்த ககாரின் விண்வெளியை ஒரு நாள் வெற்றிக் கொள்ளப் போகிறார் என அவரது குடும்பத்தினர் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை.

ககாரினின் இளமைப் பருவத்தில் அவரது குடும்பம் இரண்டாம் உலக மகா யுத்தத்துக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. சோவியத் யூனியனில் வாழ்ந்த கோடிக்கணக்கான மக்களைப் போலவே ககாரினின் குடும்பமும் நாசிப் படைகளின்



கெடுபிடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அவர்கள் குடியிருந்த வீடு ஜேர்மனிய அதிகாரியொருவரால் ஆக்கிரமிக்கப்பட்ட பிறகு ககாரினின் குடும்பம் இரண்டு வருடங்கள் சிறியதொரு வீட்டில் குடியேற வேண்டி வந்தது. ககாரினின் மூத்த சகோதர, சகோதரிகள் இருவரும் யுத்தப்பணிகளுக்காக ஜெர்மனிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். யுத்தம் முடிவடையும் வரை அவர்களால் வீடு திரும்ப முடியவில்லை.

யுத்தக் கெடு பிடிகளுக்குள்ளாகி முடக்கப்பட்டுப் போயிருந்த ககாரினின் மனதில் அண்டவெளி பற்றித் தெரிந்து கொள்ளும் வேட்கை கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது.

அண்டவெளியையும் அதில் சுற்றி வரும் கோள்களையும் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது அவரது கனவாக இருந்தது. என்றாவது ஒரு நாள் தான் அண்ட வெளியில் பிரவேசிக்கவேண்டும் என்ற ஆவல் அவர் மனதில் மேலோங்கி நின்றது. இதுவரை எவருமே நினைத்துக் கூடப் பார்த்திராத இந்த அண்ட வெளிச் சுற்றுலாவை மேற்கொண்டே ஆக வேண்டும் என்ற நோக்கில் கிரகங்களையும் பிரபஞ்சத்தையும் பற்றிய கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் ஒரு பாடசாலையில் சேர்ந்தார். அங்கு விமானம் ஓட்டும் பயிற்சியிலும் ஈடுபட்டார்.

அதன்பின் இராணுவ விமானியான ககாரின் வெலன்டினா கொரியச்சேவா எனும் யுவதியை 1957 இல் மணம் புரிந்தார். அதேவருடம் சோவியத் ரஷ்யாவின் முதல் விமானப்படையில் லெப்டினன்ட்டாகச் சேர்ந்த ககாரின் 1959ஆம் வருடம் சிரேஷ்ட லெப்டினன்ட்டாகப் பதவியுயர்வு பெற்றார்.

1960 இல் சோவியத் அரசு விண்வெளி ஆராய்ச்சிக்கெனத் தேர்ந்தெடுத்த இருபது பேரில் தேர்ச்சி பெற்ற விமானியான ககாரினும் ஒருவரானார். இவர்கள் இருபதுபேரும் தீவிர பயிற்சிகளுக்கு உட்படுத்தப்பட்ட பின் இறுதித் தேர்வில் ககாரினும், ஹேர்மன்டிடோட்ச்சும் வெற்றிபெற்று முதலாவது விண்வெளிச் சுற்றுப் பயணத்துக்குத் தெரிவாகினர். பயிற்சியின் போது இவர்கள் இருவரும் காட்டிய திறமையும், தீவிர பயிற்சிகளுக்கு ஈடுகொடுத்த அவர்களது தேக ஆரோக்கியமும் அவர்களது தெரிவுக்குப் பிரதானதகுதிகளாகின. ககாரின் விளையாட்டுக்களில் திறமை காட்டியதுடன் பனிச் சறுக்கு ஹொக்கி விளையாட்டில் சிறந்தவராகக் கணிக்கப்பட்டார். கூடைப்பந்து விளையாட்டிலும் திறமைமிக்க அவர் விளையாட்டுப் பயிற்சியாளராகவும் போட்டிகளில் நடுவராகவும் பணிபுரிந்துள்ளார். இதன் மூலமாக அவர் தனது மனவலிமையைப் போலவே உடல் வலிமையையும் வளர்த்துக் கொண்டார்.

ககாரினின் நீண்ட நாள் கனவு 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி நனவாகியது. வெஸ்டொக்-1 எனும் விண்வெளி ஓடத்தின் மூலம் அவரது முதற்பயணம் ஆரம்பித்து அண்ட வெளியில் பிரவேசித்த முதல் மனிதன் என்ற சரித்திரப் பெருமையை அவர் தட்டிக் கொண்டார். வொஸ்டொக்-1 விண்வெளி ஓடத்தின் அறை சிறியதாக அமைந்திருந்தது எனினும் 5 அடி 2 அங்குல உயரமான ககாரினின் உடலமைப்பு அவரது பயணத்துக்கு ஈடு கொடுத்தது. இந்தப் பயணத்தின் போது "மதர் லேண்ட் ஹியர்ஸ் தி மதர் லேண்ட் நோஸ்" (Motherland Hears, Motherland knows) எனும் கீதங்களுக்கு முன்னுதாரணமாக ககாரின் விளங்கினார். தனது பயணத்தின்பின் பால் வீதியின் நிலைமையை விளக்கிய ககாரின் விண்வெளியில் தனது எடை குறைந்ததையும் எடுத்துரைத்தார்.

இந்த வரலாற்றுச் சாதனையின் பின் ககாரினின் புகழ் உலகெங்கும் பரவத் தொடங்கியது. பல நாடுகளுக்கு அவர் விமானப் பயணங்களை மேற் கொண்டு பேட்டியளித்தார். சக்திமிக்க சோவியத் ரஷ்யாவுக்கு ககாரினின் விண்வெளிப் பயணம் மேலும் வலுவூட்டியது. ஜேர்மனி, கனடா, ஜப்பான், பின்லாந்து, இத்தாலி, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்த ககாரின் இலங்கைக்கும் விஜயம் செய்து இந்த நாட்டுக்கு ஒரு கௌரவமாகக் கணிக்கப்படுகிறது.

இந்த விண்வெளிப் பயணத்தின் பின் ககாரின் சோவியத் ரஷ்யாவின் விமானப் படை கேர்ணலாக (சேனாதிபதி) பதவியுர்வு பெற்றமை அவரது இமாலய சாதனைக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம். அந்நாட்டு அதிகாரிகள் ககாரின் செய்யும் விமானப் பயணங்களை இயன்ற வரை தவிர்த்து வந்தார்கள். வரலாற்றுச் சாதனை படைத்த இந்த மாவீரன் சாதாரண விமான விபத்தில் பலியாகி விடக்கூடாது என்பதே அதிகாரிகளின் முன்னெச்சரிக்கைக்கு காரணம் எனினும் விதியின் விளையாட்டு வேறுவிதமாக இருந்தது. 1968 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி ககாரினும் விமானப் பயண ஆலோசகர் விளத் மீர்செரி யோனினும் பயணித்த விமானம் கிர்யாச் நகரின் அண்மையில் விபத்துக்குள்ளாகி இந்த வரலாற்று நாயகனை இவ்வுலகில் இருந்து பிரித்து விட்டது.

இந்த விமான விபத்துக்கான சரியான காரணம், இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை எனினும் தொழில் நுட்பக் கோளாறு காரணமாக விமானம் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

சோவியத் நாட்டுக்கு ககாரின் தனது வீரச் சேவையால் பெற்றுக் கொடுத்த பெருமையை நினைவு கூர்ந்து அந்த நாட்டு அரசு அவரது உருவம் பொறித்த நாணயத்தை வெளியிட்டது. அத்துடன் 2008 ஆம் ஆண்டு "ககாரின் விருது" என்ற பெயரில் ஹொக்கி விளையாட்டுக்கான விருது ஒன்றையும் அரசு அறிமுகப்படுத்தியது. மேலும் சோவியத் நாட்டின் ஒரு நகரம் "ககாரின் நகரம்" எனப் பெயரிடப்பட்டது. இவற்றைக் கெல்லாம் சிகரம் வைத்தாற் போல ஏப்ரல் 12 ஆம் திகதி சர்வதேச மட்டத்தில் யூரியின் இரவு (YurisNight) என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

விண்வெளியில் முதன் முதலாகக் ககாரின் பிரவேசித்து இப்போது (ஏப்ரல்12) ஐம்பது வருடங்களாகின்றன. அவரது அடியையொற்றி எத்தனையோ புதிய பிரயாணங்கள், புதிய சாதனைகள் நடந்துள்ளன. இவை அனைத்துக்கும் களம் அமைத்துக் கொடுத்த யூரி ககாரின் உலக மக்களின் மனதில் ஒரு தனியிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

சுடர் மணியம்

# சிரியாவில் கலவரத்தை அடக்க இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம்; 49 பேர் உயிரிழப்பு

டமாஸ்கஸ், ஏப். 26

சிரியாவில் கலவரத்தை அடக்க இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 49 பேர் பலியாகினர். 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சிரியாவில் ஜனாதிபதி பாஷர் அல்-ஆஷாத்துக்கு எதிராகக் கடந்த மாதத்திலிருந்து மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கடந்த 48 ஆண்டுகளாக அமுலில் இருக்கும் அவசர சட்டத்தை இரத்துச் செய்யவேண்டும் என்றும், தங்களுக்கு ஜனநாயக முறைப்படி சலுகைகள் வழங்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.


அதற்காக ஜனாதிபதி பாஷர் அல்-ஆஷாத் பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், பதவி விலக மறுக்கும் அவர் போராட்டத்தை ஒடுக்க இராணுவத்தைப் பயன்படுத்தி வருகிறார்.

அமுலிலிருந்த அவசர சட்டத்தை கடந்த 2 நாள்களுக்கு முன்னர் இரத்துச் செய்தார். இருந்தும் பொதுமக்கள் தங்கள் போராட்டத்தைக் கைவிடவில்லை.

புனித வெள்ளியன்று சிரியாவில் அனைத்து நகர வீதிகளிலும் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு போராட்டம் நடத்தினர். ஜனாதிபதி ஆட்சியிலிருந்து தங்களுக்கு சுதந்திரம் வேண்டும் எனக் கோஷங்களை எழுப்பினர். இவர்களின் போராட்டத்துக்கு ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் இரு தரப்பினருக்குமிடையே மோதல் ஏற்பட்டு அது கலவரமாக மாறியது. கலவரத்தை அடக்க இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. கண்ணீர்ப் புகைக் குண்டுகளும் வீசப்பட்டன. அதில், 49 பேர் உயிரிழந்தனர். 100இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

எரேஷ் நகரில் 14 பேரும், கிராக்கில் ஒருவரும், டமாஸ்கஸ் புறநகரிலுள்ள தவுமாவில் 9 பேரும், பாரேஷில் 6 பேரும் கொல்லப்பட்டனர். ஹமா, லடாகியாவில் தலா 2 பேரும், மத்திய ஹோம்ஸ் பகுதியில் 4 பேரும் இராணுவத்தின் துப்பாக்கிக் குண்டுக்கு உயிரிழந்தனர்.



அமெரிக்கா, வாஷிங்டனில் நடந்த சிறுவர்களுக்கான ஈஸ்டர் விளையாட்டுப் போட்டியில், பார்வையாளர்களாக அந்த நாட்டு அதிபர் ஒபாமா மற்றும் அவரது மனைவி மிட்சலே ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 4 ஆவது மாடியிலிருந்து குழந்தை தவறி விழுந்தது; சுற்றுலாப் பயணி காப்பாற்றினார்

புளோரிடா, ஏப். 26

அமெரிக்காவிலுள்ள புளோரிடாவைச் சேர்ந்தவர் ஹெலினா மைல்ஸ். இவர் தனது 16 மாத கைக்குழந்தை ஜா-நியா மைல்ஸ் சுடன் ஒர்லாண்டோவிலுள்ள ஒரு ஹோட்டலில் 4ஆவது மாடியில் தங்கியிருந்தார்.

இரவு 11 மணியளவில் குழந்தை ஜா-நியா அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலின் 4 ஆவது மாடி அறையில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. அதை ஹெலினா மைல்ஸ் கவனிக்கவில்லை.

அதே நேரத்தில் ஹோட்டலின் தரைத் தளத்திலுள்ள நீச்சல் குளத்தில் ஹெலன் பியர்ட் (வயது - 44) என்ற பெண் குளித்துக்கொண்டிருந்தார். பிரிட்டனைச் சேர்ந்த அவர் ஒர்லாண்டோ நகருக்கு சுற்றுலா வந்திருந்தார்.

அப்போது 4ஆவது மாடியில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை ஜா-நியா திடீரென அங்கிருந்து தவறி விழுந்தது.

அது தவறி விழுந்த வேகத்தில் 3ஆவது மாடியின் பல்கனியில் தொங்கியபடி இருந்தது. இதை ஹெலன் பியர்ட் தற்செயலாகப் பார்த்துவிட்டார்.

உடனே பதறிய அவர் அக் குழந்தையைத் தூக்கிக் காப்பாற்ற நீச்சல் குளத்தை விட்டு வெளியேறி ஓடினார். அதற்குள் தொங்கிக்கொண்டிருந்த குழந்தை கை பிடியை விட்டுவிட்டது.

எனவே தரையை நோக்கி கீழே வேகமாக வந்தது.

அப்போது ஹெலன் பியர்ட் அக் குழந்தையை லாவகமாக தனது கைகளில் தாங்கிப்பிடித்துக் காப்பாற்றினார். இதனால் குழந்தை காயமின்றித் தப்பியது. இதைத் தொடர்ந்து அதிர்ச்சியில் மயங்கிய குழந்தையை வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட்டது.

தனது குழந்தையைக் காப்பாற்றிய சுற்றுலாப் பயணி ஹெலன் பியர்டுக்கு குழந்தையின் தாயார் ஹெலீனா மைல்ஸ் நன்றி கூறினார்.

என் குழந்தையைக் காப்பாற்ற கடவுள்தான் ஹெலனை அனுப்பி வைத்துள்ளார். அவர் மூலம் எனது குழந்தை காப்பாற்றப்பட்டுள்ளது.

அதற்காகக் கடவுளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். இச்சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது.

## சூடானில் துப்பாக்கிச் சண்டை: 55 பேர் பலி

சூடானில் தென்பகுதி, தெற்கு சூடான் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இது எதிர்வரும் ஜூலை மாதம் முதல் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்படவுள்ளது. அங்கு 7 தீவிரவாதக் குழுக்கள் அரசுக்கு எதிரான வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றன. தாங்னினி தீவிரவாதக் குழுவுக்கும், சூடான் மக்கள் விடுதலை இராணுவத்துக்கும் இடையே ஞாயிற்றுக்கிழமை துப்பாக்கிச் சண்டை நடந்தது.

ஜோங்கிலே மாகாணத்திலுள்ள கால்டாக் நகரில் சுமார் 3 மணி நேரம் கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது. அதில், தாங்-னினி தீவிரவாதிகள் 55 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 5 பேர் அந்தத் தீவிரவாத அமைப்பின் அதிகாரிகள் ஆவர். இராணுவத் தரப்பில் 34 சிப்பாய்கள் காயமடைந்தனர். பொது மக்கள் 43 பேருக்கு காயம் ஏற்பட்டது. அவர்கள் அனைவரும் மலாக்கல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# வாலிபர் மூளையில் 23 வருடகால துப்பாக்கிக் குண்டு; சத்திரசிகிச்சை மூலம் நீக்கம்

பீஜிங், ஏப். 26

சீனாவைச் சேர்ந்தவர் வாங்கியாங்கிங் (வயது - 40). விவசாயி ஆன இவர் கடந்த 1988ஆம் ஆண்டு வடக்கு சீனாவில் ஹெபி மாகாணத்திலுள்ள ஷான்ஜியா கோயின் நகரில் தங்கியிருந்தார்.

ஒருநாள் அவர் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்போது அவரது தலையில் ஏதோ ஒன்று தாக்கியது போல் உணர்ந்தார். இதைத்தொடர்ந்து அவர் மயக்கமடைந்தார்.

மயக்கம் தெளிய அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் அவர் சகஜ நிலைக்குத் திரும்பினார்.

அதைத் தொடர்ந்து அவருக்கு அடிக்கடி தலை சுற்றலும், மயக்கமும் ஏற்பட்டன. அதுபோன்று 23 வருடங்கள் ஓடிவிட்டன.

அவர் கடுமையான தலைவலியால் அவதிப்பட்டார். எனவே, அவர் நரம்பியல் நிபுணரிடம் சிகிச்சைக்கு சென்றார். அங்கு அவரது தலைப் பகுதி ஸ்கேன் செய்து பார்க்கப்பட்டது. அப்போது அவரது மூளையில் துப்பாக்கி குண்டு பாய்ந்திருந்தமை தெரியவந்தது.

இதையடுத்து அந்தத் துப்பாக்கிக் குண்டு சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டது.

அந்த குண்டு சுமார் 2 செ.மீற்றர் நீளம் இருந்தது. தற்போது வாங்கியாங்கிங் நலமுடன் உள்ளார்.

அவரது தலையில் இந்தக் குண்டு எப்படிப் பாய்ந்தது? யார் துப்பாக்கியால் சுட்டார்கள் என அவருக்குத் தெரியவில்லை. ஆனால், கடந்த 23 ஆண்டுகளுக்கு முன்னர் வீதியில் நடந்து சென்றபோது கல் தன்னை தாக்கியது போன்று இருந்தது என அவர் தெரிவித்தார்.

அந்த இடத்தின் அருகேயுள்ள ஒரு மலையில் ஒரு நபர் நின்றுகொண்டிருந்தார்.

அவர்தான் தன்னை துப்பாக்கியால் சுட்டு இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.


## பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08 . 07 . 1947



மறைவு
21 . 04 . 1998

### அமரர் கதிரவேலு கந்தையா

(இரத்தினம்- மெக்கானிக்)

அன்போடு எமை வளர்த்து
ஆளாக்கி மேதினியில் எம்மை
மேலோராய் வாழச் செய்ய
தன்னை மெழுகுதிரி ஆக்கிய
எம் அன்புத் தந்தையை
நன்றி உணர்வுடன்
நினைவு கூருகின்றோம்
ஆறாது எம் இதய வேதனை
மாறாது உம் நினைவுகள்!

அச்சுவேலி வடக்கு. குடும்பத்தினர்.

(3544) (38-23-50)



## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக்கூட்டம்- 2011

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சங்கத் தலைவர் என்.இராஜதேவன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

★ குறிப்பு: பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 07.05.2011ஆம் திகதிக்கு முன்பாக செயலாளர், பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

செ.சிவானந்தன்
கௌரவ செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

என்.இராஜதேவன்
தலைவர்.

(3548) (38)



## காணி தேவை

நெல்லியடிப் பகுதியில் பிரதான வீதியை அண்மித்த இடங்களில் வர்த்தக நிலையங்கள் அமைப்பதற்கு உகந்த காணி அல்லது கட்டடங்கள் விலைக்குத் தேவை.

தொடர்பு: 0779234372

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 33 வயது, பூரம், 8இல் செவ்வாய், உயரம் 5'-10'' உள்ள, படித்த மெலிந்த அழகான யாழ்.நகரில் பிரபல தனியார் நிறுவனத்தின் உரிமையாளருக்கு, மெலிந்த அழகான படித்த மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். குறிப்பின் மூலப்பிரதியின் கொப்பியுடன் விண்ணப்பிக்கவும்.

C/O இல.4138, உதயன், யாழ்ப்பாணம்.



## நன்றி தெரிவிக்கின்றோம்



வன்னியில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதால் பாதிப்புக்குள்ளான ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று அந்தந்த வலயங்களில் ஒப்பம் இடுவதற்கு ஆவன செய்துதந்த கௌரவ அமைச்சர்

### டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கும் யாழ்.மாவட்ட அமைப்பாளர் தோழர் கமலேந்திரன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வன்னியில் இருந்து இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள்.

(3547) (38-23-50)

# கடாபியின் குடியிருப்பு வளாகம் மீது 'நேட்டோ' விமானப்படை தாக்குதல்

திரிபோலி, ஏப். 27

லிபியா தலைவர் மும்மர் கடாபி வசிக்கும் குடியிருப்பு வளாகத்தின் மீது, 'நேட்டோ' விமானப் படைகள் திங்கட்கிழமை குண்டுகளை வீசித் தாக்கின. அதேவேளை, மிஸ்ரட்டா நகரின் மீது கடாபி படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

தலைநகர் திரிபோலியிலுள்ள கடாபி வசிக்கும் குடியிருப்பு வளாகத்தின் மீது, 'நேட்டோ' விமானப் படைகள் இரண்டு குண்டுகளை வீசி கடுமையாகத் தாக்கின. இத்தாக்குதலுக்குப் பின் லிபியா தொலைக்காட்சி, ஜமாகிரியா, சகாபாபியா ஆகிய மூன்று தொலைக்காட்சி நிலையங்களின் ஒளிபரப்பு அரை மணி நேரத்துக்கு தடைப்பட்டது.

இத்தாக்குதலில் ஆறு பேர் பலியாயினர். மிஸ்ரட்டா நகரின் உள்பகுதியில் சிக்கியுள்ள

### மூன்று தொலைக்காட்சி சேவைகள் ஸ்தம்பிதம்

கடாபி படைகளைச் சுற்றி எதிர்த்தரப்பு முற்றுகையிட்டுள்ளது. அதேநேரம், நகரின் வெளிப் பகுதிகளில் கடாபி படைகள் முற்றுகையிட்டுள்ளன.

எனினும், தொடரும் நேட்டோ தாக்குதலால், தேவையான அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்காமல் வெளியிலுள்ள படைகள் திண்டாடி வருகின்றன. தொடர்ந்து அந்நகரின் குடியிருப்புப் பகுதிகள் மீது, கடாபி படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

லிபியாவில் மிஸ்ரட்டா நகரின் மீது தாக்குதல் நடத்தி வந்த கடாபி தரப்பு, ஞாயிற்றுக்கிழமை திடீரென தாக்குதலை நிறுத்தியது. அந்நகரின் பழங்குடித் தலைவர்களும், எதிர்த்தரப்பும் பேச்சுகள் நடத்துவதற்கு ஏதுவாக திடீர் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது என கடாபி தரப்பு தெரிவித்தது.

"கடாபி தரப்பு போரை நிறுத்தவில்லை. மிஸ்ரட்டாவின் ஒரு தெருவில் பதுங்கியுள்ளனர். போரை தொடர்ந்து நடத்துவதற்கு தயாராகி வருகின்றனர்" என்று எதிர்த்தரப்பு குற்றஞ்சாட்டியது.

இதற்கிடையில், எதிர்த்தரப்புக்கு 810 கோடி ரூபா நிதியுதவி அளிக்கப்படும் என குவைத் அரசு ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது.

லிபியாவில் ஜனாதிபதி கடாபிக்கு எதிராகப் போராட்டம் நடத்திவரும் பொதுமக்கள் இராணுவ தாக்குதல் மூலம் கொல்லப்பட்டு வருகின்றனர்.

எனவே, மக்களுக்கு ஆதரவாக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் களம் இறங்கியுள்ளன. அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையில் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் இராணுவமும் உள்ளது.

அவற்றில் பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் இராணுவ போர் விமானங்கள் குண்டு வீச்சில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் இத்தாலி இராணுவம் இதுவரை தாக்குதலில் ஈடுபடவில்லை.

இத்தாலியின் விமானப்படை போர் விமானங்களும் கடாபியின் இராணுவத் தளங்கள் மீது குண்டு வீச முடிவு செய்துள்ளன.

இது குறித்து இத்தாலி பிரதமர் சில்வியோ பெர்லுஸ் கோனி, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடன் தொலைபேசியில் பேசினார். அப்போது, கடாபியின் இராணுவத் தளங்களின் மீது மட்டும் இத்தாலி போர் விமானங்கள் குண்டுவீசி தாக்குதல் நடத்தும் என்று அவர் தெரிவித்தார்.


# பாகிஸ்தானில் பஸ்ஸுக்கு தீ வைப்பு: 15 பேர் பலி!

இஸ்லாமாபாத், ஏப். 27

பாகிஸ்தானில் பயணிகள் பஸ்ஸுக்கு ஆயுதம் தாங்கிய மர்ம நபர்கள் தீ வைத்தனர். இதில் 8 பெண்கள், 5 குழந்தைகள் உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானின் சிபி நகரிலிருந்து குவெட்டா நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸை சுற்றிவளைத்த தீவிரவாதிகள் இந்தக் கோர சம்பவத்தை நிகழ்த்தியுள்ளனர்.

அதேவேளை, பாகிஸ்தானில் கராச்சி நகரில் பல்டியா டவுனில் நடந்த குண்டு வெடிப்பில் ஒருவர் இறந்தார். 10 பேர் படுகாயமடைந்தனர். கடற்படைச் சிப்பாய்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸில் குண்டு வைக்கப்பட்டிருந்தது.



தென்கொரியத் தலைநகர் சியோலில், அந்நாட்டு அதிபர் லீ மியுங்-பக்கை (வலது), ஆஸ்திரேலியா பிரதமர் ஜூலியா கில்லர்ட் சந்தித்துப் பேசினார்.

# ஜப்பானில் உயிரிழந்தவர்களை தேடும் பணியில் ரோபோக்கள்

ஜப்பானில் கடந்த மாதம் ஏற்பட்ட பூகம்பமும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆழிப் பேரலை ஆகியவற்றில் சிக்கி உயிரிழந்தோரை கடலில் தேடும் பணியில் 2 ரோபோக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. கடந்த 5 நாள்களாக மேற்கொள்ளப்பட்ட பணியில் இதுவரை எவரது சடலமும் கிடைக்கவில்லை என ஜப்பான் அரசு செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

கடலுக்கடியில் தேடும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இந்த ரோபோக்களில் புகைப் படக்கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. அத்துடன் சோனார் கருவியும் உள்ளது. இரண்டு ரோபோக்களில் ஒன்று ஜப்பானிலும் மற்றொன்று அமெரிக்காவிலும் தயாரிக்கப்பட்டதாகும்.

இப்பகுதியில் கடலில் சீற்றம் அதிகமாக இருப்பதால் தேடும் பணியில் ஈடுபடுவது சிரமம் என நீச்சல் வீரர்கள் தெரிவித்ததால், ரோபோக்கள் ஈடுபடுத்தப்பட்டன.

கடலில் மூழ்கிய காரைக் கண்டுபிடித்த ரோபோக்கள் அதில் உயிரிழந்தோர் எவரேனும் உள்ளனரா என்றும் தேடியது. ரோபோக்கள் எடுத்த படப் பதிவுகள் செய்தியாளர்களுக்குக் காட்டப்பட்டன. கடலில் கலந்துள்ள கதிர்வீச்சின் அளவை அறிய மற்றொரு ரோபோ பயன்படுத்தப்படவுள்ளது.

# வில்லியம் - கேட் திருமணம் நாளை மறுதினம்

நாளை கழித்து ஏப்ரல் 29 ஆம் திகதி பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம் அவரது நெடுநாள் காதலி கேட் மிடில்ரனை சம்பிரதாய பூர்வமாக பிரிட்டிஷ் அரச குடும்ப மரபுப்படி திருமணம் முடித்துக்கொள்கின்றார்.

இப்போதைய பிரிட்டிஷ் மகாராணி இரண்டாவது எலிசபெத் - மற்றும் அவரது கணவர் பிலிப் மவுன்ட் பேட்டன் பிரபு ஆகியவர்களின் பேரனும் தற்போதைய முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் மற்றும் அவரது முன்னாள் மனைவி இளவரசி டயனாவுக்கும் பிறந்த மூத்த புதல்வர் ஆவார் வில்லியம்.

வில்லியம் மணக்கப்போகும் கேட்மிடில்ரனின் பின்புலம் அவ்வளவாக அரச வம்ச இரத்தம் கலந்ததாக இல்லை. வில்லியம் குடும்பம் முற்று முழுதாக "புளூ பிளட்" (நீல இரத்தம்) என்றழைக்கப்படும் அரச பரம்பரையின் வழிவந்தவர்களாவர்.

லண்டனில் மன்னர் பரம்பரை வரலாற்றுடன் ஒன்று கலந்துவிட்ட வெஸ்ட்மின்ஸ்ரர் அபே என்றழைக்கப்படும் தேவாலயத்தில் இவர்களின் திருமணம் நடைபெறவிருக்கின்றது.

இங்கிலாந்து தேவாலயத் தலைமை பேராயரும் உலக அங்கிலிக்கன் தேவாலயங்களின் தலைவருமான கான்றிபெரி பேராயர் றோவான் வில்லியம்ஸ் திருமணத்தை ஆசீர்வதித்து நடத்திவைப்பார்.

### திருமணச் செலவு

திருமணச் செலவுகளை மணமகன் - மணமகள் ஆகிய இருவீட்டாரும் பகிர்ந்து கொள்ள விருக்கிறார்கள். திருமணத்துக் கென மருமகன் இளவரசர்வில்லியத்துக்கு தமது மகளின் சார்பில் ஏறத்தாழ 100,000 பவுண்ஸ் களை (163,000 டொலர், 113,000 யூரோ) பெண் வீட்டார் வழங்க விருக்கிறார்கள் என லண்டன் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

ஹோட்டல்களின் அறைகளுக்கான வாடகை, மணமகளுக்கான ஆடைகள், தோழியின் ஆடைகள், கௌரவ தோழியின் ஆடைகள், தேன்நிலவு ஆகியவற்றுக்கான செலவுகள் அனைத்தும் மைக்கல் மிடில்ரன் குடும்பத்தினரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

லண்டன் மாவட்டத்திலுள்ள பங்கிராவியாவில் கோரிங் ஹோட்டலில் வாடகைக்கு எடுக்கப்படவிருக்கும் அறைகளுக்கும் அவர்களே பணம் செலுத்துவார்கள். இவைகளில் இரண்டு படுக்கை அறைகள், ஐந்து வரிசை அறைகள், இவை கேட்டுக்கும் அவரது சகோதரி பெப்பா, கௌரவ தோழிக்கும் உரியவை.

மிடில்ரன் தம்பதியினரும் அவர்களின் மகன் மணமகளின் சகோதரனும் இந்த ஹோட்டலிலேயே தங்குவார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹோட்டல் செலவு மாத்திரம் 20,000 பவுண்ஸுக்கு மேல் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கேட்டின் மணப் பெண் ஆடைகளுக்கு 30,000 உம் கௌரவத் தோழி பிப்பாவின் ஆடைகளுக்கு 20,000 உம் செலவாகுமாம்.

இளவரசர் வில்லியமின் சகோதரர் இளவரசர் ஹெறி மணமகனின் தோழனாக (பெஸ்ட் மேன்) விளங்குவார்.

### அன்பளிப்புகள் யாவும் கருணை இல்லங்களுக்கு

திருமண வீட்டின் இரவுப் போசனம் எதுவாக இருக்கும் என்பது இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அது முழுக்கவும் பிரிட்டிஷ் உணவாகவே இருக்கும் என்று உறுதியாக நம்பப்படுகின்றது.

தமது திருமணத்துக்கு வரும் விருந்தாளிகள் அளிக்க விருக்கும் அன்பளிப்புக்களை வழங்கும்படியாக 26 கருணை நிறுவனங்களின் பெயர்களை மணமக்கள் அறிவித்திருக்கிறார்கள். மகாராணி தமது திருமணத்தின் போது 2,500 அன்பளிப்புக்களைப் பெற்றிருந்தார்.

திருமணத்துக்குப்பிறகு கேட் அதிகாரப்பூர்வமாக கெதரின் என்று அழைக்கப்படுவார் என்று தெரிகிறது.

வில்லியமும் கேட்டும் ஸ்கொட்லாந்தில் சென்ட் அன்ரூஸ் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது காதலிக்கத் தொடங்கினார்கள்.



இளவரசர் வில்லியம் இப்போது றோயல் விமானப்படையில் தேடிக்காப்பாற்றும் ஹெலிகொப்டர் அணியில் விமானியாகப் பணிபுரிகின்றார். திருமணத்தின் பின்னர் விமானப்படையினர் இரவு வெகுநேரம் இசை நிகழ்ச்சிகளை வழங்கவிருக்கின்றனர். திருமண உடைகள் பற்றிய விவரம் ஒன்றுமே வெளியிடப்படவில்லை. ஆனால் திருமணத்தின்போது வில்லியம் தனது விமானப்படை விமானியின் உடையில் காட்சியளிப்பார் என்று கூறப்படுகின்றது.

திருமணத்தின் பின்னர் தம்பதியினர் வேல்ஸில் தமக்குரிய மாளிகையில் குடியேறுமுன் தேன்நிலவுக்கு எங்கு செல்வார்கள் என்பது இன்னமும் அறிவிக்கப்படவில்லை, அது கென்யா அல்லது மொரிஷியஸ் என்று பேசிக் கொள்ளப்படுகின்றது.

# லட்சக்கணக்கான மக்கள் புட்டபர்த்தியில் அலைமோதுகின்றனர்

# அரச மரியாதையுடன் இன்று 9 மணிக்கு உடல் அடக்கம்

புட்டபர்த்தி, ஏப்.27

கடந்த ஞாயிற்றுக்கிழமை மகா சமாதியடைந்த சத்தியசாயி பாபாவின் இறுதிச் சடங்குகள் இன்று காலை 9 மணி முதல் 9.30 மணி வரை நடைபெற வுள்ளன. முழு அரச மரியாதை யுடன் சாயிபாபாவின் உடல் அடக்கம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கான ஏற்பாடுகள் மும் முரமாக நடைபெற்று வருகின் றன. சாயிபாபாவின் உடல் வைக்கப்பட்டு இருக்கும் சாய் குல்வந்த் மண்டபத்திலேயே அவரது உடல் அடக்கம் செய் யப்படவுள்ளது.

சாய்பாபாவின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சியில் பாரதீய ஜனதா மூத்த தலைவர் அத்வானி கலந்து கொள்கிறார்.

இந்தநிலையில் சாயிபாபா வுக்கு இறுதி அஞ்சலி செலுத்து வதற்காக வரும் பக்தர்கள் வசதிக் காகத் தரிசன நேரம் அதிகரிக்கப் பட்டுள்ளது. மாலை 6 மணியள வில் முடிவடைந்து வந்த தரிச ணம் நேரம் இன்றைக்கு நள்ளிரவு வரை நீடிக்கப்பட்டுள்ளதாக சாய் டிரஸ்ட் தெரிவித்துள்ளது.

சாயிபாபாவின் உடலுக்கு பிரதமர் மன்மோகன் சிங், காங் கிரஸ் தலைவர் சோனியாகாந்தி ஆகியோர் நேற்று இறுதி அஞ் சலி செலுத்தியுள்ளனர். பெருந் திரளான பக்தர்கள் கண்ணீர் மல்க கண்ணீர் அஞ்சலி செலுத் திய வண்ணம் உள்ளனர். அரசி யல் தலைவர்கள், உயர்அதிகாரி கள், தொழில் அதிபர்கள், முக்கிய பிரமுகர்கள் சாயிபாபாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகிறார்கள். பல்லாயிரக்கணக் கான பக்தர்கள் வரிசையில் சென்று அஞ்சலி செலுத்தி வரு கின்றனர். கர்நாடக முதல்-மந் திரி எடியூரப்பா நேற்று முன்தி னம் பிரசாந்தி நிலையத்துக்குச் சென்று சாயிபாபாவின் உடலுக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.


மத்திய மந்திரிகள் விலாஸ் ராவ் தேஷ்முக், பிரபுல் பட்டேல், ஆந்திர மாநில முன்னாள் முதல் -மந்திரியும் தெலுங்கு தேசக் கட்சி யின் தலைவருமான சந்திரபாபு நாயுடு, ஆந்திர மாநில மந்திரி கள் பி.சபிதா ரெட்டி, சுனிதா லட்சும ரெட்டி, டி.கே.அருணா, மொபிதேவி வெங்கடரமணா, கர்நாடக மந்திரி ஆர்.அசோக், யோகா குரு பாபா ராம்தேவ் ஆகி யோர் சாயிபாபாவின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

முக்கிய பிரமுகர்கள் மற்றும் பக்தர்கள் அஞ்சலி செலுத்து வதற்காக சாயிபாபாவின் உடல் நேற்று மாலை 6 மணி வரை சாய் குல்வந்த் மண்டபத்தில் வைக்கப்படது. குஜராத் முதல்-மந்திரி நரேந்திரமோடி ஆமதா பாத்தில் இருந்து தனி விமானம் மூலம் நேற்றுக்காலை புட்டபர்த் திக்குச் சென்று சாயிபாபாவின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத் தினார்.

ஆந்திர மாநிலம் முழுவதிலும் இருந்து மட்டு மின்றி தமிழ்நாடு, கர்நாடகம், ஒரிசா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந் தும் ஏராளமான பக்தர்கள் புட்ட பர்த்திக்கு வந்து சாயிபாபாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகிறார்கள். லட்சக்கணக் கான பக்தர்கள் புட்டபர்த்தியில் குவிந்த வண்ணம் உள்ளனர். வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளனர்.

பக்தர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தபடி இருப் பதால் ஆண்கள் மற்றும் பெண் களுக்குத் தனித்தனி கூடுதல் வரிசைகளை ஏற்படுத்துவது பற்றி பரிசீலித்து வருவதாக மந் திரி ரகுவீர ரெட்டி தெரிவித்தார்.

## பக்தர்கள் அஞ்சலி...



கடந்த ஞாயிற்றுக்கிழமை மகா சமாதியான சத்தியசாயிபாபாவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக பிரசாந்தி நிலையத்துக்குத் திரண்ட பக்தர்கள் வெள்ளம்.

# 21 ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் பாபா ஏற்றிவைத்த அணையா ஓமகுண்டம்

வேலூர், ஏப். 27

வேலூர் வழியாக 1990 இல் சென்னைக்குச் சென்ற ஸ்ரீசத்திய சாயிபாபா வேலூர், கலாஸ் பாளையம் பகுதியில் அமைந் துள்ள ஷீரடி சாயி பாபா கோயி லுக்கு வருகை தந்துள்ளார். அப் போது அவர் அணையா ஓம குண்டத்தை ஏற்றி வைத்து பக்தர் களுக்கு ஆசி வழங்கியுள்ளார்.

இன்றளவும் இந்த ஓமகுண் டத்தில் நெருப்பு அணையா மல் தொடர்ந்து யாகத் தீ வளர்க் கப்பட்டு வருகிறது.

வேலூர், கலாஸ்பாளையத் தைச் சேர்ந்த சாயிபாபா பக்தை ஹேமாவதி அம்மாள், அப்பகுதி யில் உள்ள ஆசிரமப் பள்ளியில் மாணவர் ஒருவரைச் சேர்க்கச் சென்றுள்ளார்.

பள்ளியின் எதிரே 'காணப் பட்ட குப்பை மேட்டில் ஷீரடி சாயிபாபாவின் திருவுருவம் அவரது கண்களில் தோன்றி மறைந்தது.

அதையடுத்து, அந்தப்பகுதி யில் 1985 இல் ஷீரடி சாய்பாபா கோயில் ஒன்றை நிறுவினார். புட்டபர்த்தியில் இருந்து சித்தூர் வழியாகச் சென்னை சென்ற சாயி பாபா வேலூருக்கு 1990 பெப்ரவரி 5 ஆம் திகதி வருகை தந்தார்.

அப்போது அவர் கலாஸ் பாளையத்தில் அமைந்துள்ள ஷீரடி சாயிபாபா கோயிலில் ஷீரடி சாய்பாபாவின் உருவச் சிலை முன் அணையா ஓம குண் டத்தை ஏற்றினார்.

அதைத் தொடர்ந்து அவர், ஓம குண்டத்தின் மீது கரங் களை உயர்த்தி ஆசிர்வதிக்கும் போது அவரது கரங்களில் இருந்து பொன், வெள்ளி, நவரத் தினங்கள் ஓமகுண்டத்தில் விழு வதைப் பக்தர்கள் கண்டு மெய்சி லிர்த்த காட்சியையும் சுமார் 20 நிமிடம் இந்தக் கோயிலில் இருந்து சாயிபாபா பக்தர்களுக்கு அருளாசி வழங்கியதையும் ஹேமாவதி அம்மாள் நினைவு கூர்ந்தார்.

பாபா முக்தி அடைந்த செய் தியை அறிந்த பக்தர்கள் கோயி லில் பிற்பகலில் பஜனை பாடல் கள் பாடினர். வேலூர் நகரைச் சேர்ந்த சாயிபாபா பக்தர்கள் பெரும்பாலானோர் ஞாயிற்றுக் கிழமை பிற்பகலில் புட்டபர்த் திக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இக்கோயிலில் வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் பொது மருத் துவ முகாமும், மாதம் தோறும் 3 ஆவது திங்கட்கிழமைகளில் இலவசச் கண் சிகிச்சை முகாமும் சாயிபாபா பக்தர்களால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. (வ)

# ஜெயலலிதாவை முதல்வராக்குமாறு தான் கூறவில்லை என்கிறார் சீமான்



சென்னை, ஏப். 27

நாம் தமிழர் கட்சியின் வேலூர் மாவட்ட கலந்தாய்வுக் கூட்டம் காட்பாடி காந்தி நகரில் நடந்தது. கூட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசினார்.

அப்போது அவர் கூறியவை வருமாறு -

ஆந்திரா, கேரளாவில் சாதிக் கட்சிகள் இல்லை. தமிழ்நாட்டில் தான் சாதிக் கட்சிகள் உள்ளன. அவர்கள் தமிழன் என்ற தேசிய இனத்தைச் சாதி என்ற பெயரில் கூறு போடுகிறார்கள். ராமதாஸ், திருமாவளவன் ஆகியோர் கருணாநிதி வீட்டில் போய் நிற்காமல் தனியாக நின்று இருந்தால் சீமானுக்கு இந்த வேலையே இருந்து இருக்காது. நானும் அவர் களுடன் சேர்ந்திருப்பேன்.

இலங்கையில் ஒரு லட்சத்து 72 ஆயிரம் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அது நடந்து ஒரு ஆண்டு கூட ஆகவில்லை. அப்படி இருந்தும் இந்தத் தேர்த லில் தமிழர் இனத்தைப் பற்றி ஒரு தலைவர் கூடப் பேசவில்லை. இனத்தைக் கொன்ற சோனியா அருகில் போய் அவர்கள் நிற்கின் றனர். தமிழ்நாட்டின் வரலாற்று எதிரி காங்கிரஸ். இந்தக் காங்கி ரஸை ஒழிக்க வேண்டும் என்ற காரணத்துக்காகத்தான் இரட்டை இலைச் சின்னத்துக்கு வாக்குப் போடுங்கள் எனக் கூறினேன். ஜெயலலிதாவை முதல்வர் ஆக் குங்கள் என்று நான் கூறவில்லை. இவ்வாறு அவர் கூறினார். (வ)

# புதிய அலுவலகத்துக்கு துறைகள் மாற்றம்: முக்கிய ஆவணங்களை அழிக்க தி.மு.க. முயற்சி

## தேர்தல் ஆணையத்துக்கு அ.தி.மு.க.மனு

சென்னை, ஏப்.27

புதிய தலைமைச் செயலகத் துக்கு துறைகளை மாற்றுகிறோம் என்ற பெயரில், முக்கிய ஆவ ணங்களை அழிக்க தி.மு.க. முயற்சிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும்' என, தேர்தல் ஆணை யத்துக்கு அ.தி.மு.க., வேண்டு கோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாகத் தலைமைத் தேர்தல் ஆணையம் குரேஷி மற்றும் தேர்தல் ஆணையாளர் கள், தலைமைத் தேர்தல் அதி காரி ஆகியோருக்கு அ.தி.மு.க., பொருளாளர் ஓ.பன்னீர்செல் வம், தலைமை நிலையச் செயலர் செங்கோட்டையன், வட சென்னை மாவட்ட செயலர் ஜெயக்குமார், எம்.பி., மனோஜ் பாண்டியன் ஆகியோர் அ.தி.மு.க.சார்பில் மனு ஒன்று அனுப்பியுள்ளனர்.

அந்த மனுவில் குறிப்பிடப் பட்டவை வருமாறு:

கோட்டையில் உள்ள தலை மைச் செயலகத்தில் உள்ள துறைகளை புதிய தலைமைச் செயலகத்துக்கு மாற்றும் பணி யில், தற்போதுள்ள தி.மு.க., அரசு ஈடுபட்டு வருகிறது. தற் போதுள்ள அரசு துறைகளை மாற்றுகிறோம் என்ற போர்வை யில், முக்கிய ஆவணங்களை அழிக்க முயற்சி நடப்பதாகத் தெரிகிறது.

காபந்து அரசுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ளன. சட்டம், ஒழுங்கு நிலவரத்தைப் பராம ரிப்பது, அரசு ஊழியர்களுக்கு சம்பளம் அளிப்பது உட்பட அன்றாட நிர்வாகத்தைக் கவ னிக்கும் பணியை மட்டுமே மேற்கொள்ள முடியும்.

தலைமைச் செயலகத்தில் தற்போதுள்ள துறைகளை வேறு இடத்துக்கு மாற்றுதல் போன்ற முக்கிய கொள்கை முடிவுகளை எடுக்கக் கூடாது. அவ்வாறு செய்வது, அடுத்து தேர்தல் முடிவுகளுக்கு பின் அமைய உள்ள அரசின் உரிமையில் தலையிடுவது ஆகும்.

அத்துடன் கோட்டையில் உள்ள தலைமைச் செய லகம் மத்திய பாதுகாப்பு அமைச் சகத்துக்குச் சொந்தமான இடத் தில் உள்ளதால், தமிழக அரசுக்கு அந்த இடம் தொடர்பான முடி வெடுக்கும் உரிமை இல்லை. தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ள நிலையில், அரசு துறைகளை இடமாற்றம் செய் வதைத் தடுக்கும் வகையில் உரிய உத்தரவுகளை தேர்தல் ஆணை யம் பிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அ.தி.மு.க., சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## 2 ஜி அலைக்கற்றை விவகார வழக்கு:

# சி.பி.ஐயின் குற்றப் பத்திரிகையில் கனிமொழியின் பெயரும் சேர்ப்பு



2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பான முறைகேட்டில் சதிக்கு உடந்தையாக இருந்ததாக மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியின் பெயர் சி.பி.ஐ. நேற்று முன்தினம் தாக்கல் செய்த துணைக் குற்றப்பத்திரிகையில் சேர்க்கப்பட்டுள்ளது. தடுப்புச் சட்டப் பிரிவு 7 மற்றும் 11இன் கீழ் அவர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கலைஞர் தொலைக்காட்சியின் நிர்வாக இயக்குநர் சரத்ரெட்டி, சினியுக் பிலிம்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த கரீம் மொராணி ஆகியோர்களின் பெயர்களும் இதில் இடம்பெற்றுள்ளன. சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஓ.பி. சைனி முன்னிலையில் இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

குற்றப்பத்திரிகையில் இடம்பெற்ற கனிமொழி உள்ளிட்டோர் மே 6ஆம் திகதி நேரில் ஆஜராக வேண்டும் என நோட்டீஸ் அனுப்புமாறு நீதிபதி உத்தரவிட்டார். 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டு வழக்கில் சி.பி.ஐ. தாக்கல் செய்யும் இரண்டாவது குற்றப்பத்திரிகையா இதுவாகும்.

முதல்வர் கருணாநிதியின் மனைவியும் கலைஞர் ரி.வி.யின் பங்குதாரருமான தயாளு அம்மாளின் பெயர் இந்தக் குற்றப்பத்திரிகையில் இடம்பெறவில்லை. 2ஜி அலைக்கற்றை முறைகேடு வழக்கில் சிறப்பு நீதிமன்றத்தில் மத்திய புலனாய்வு அமைப்பின் சார்பாக ஏற்கெனவே கடந்த 2ஆம் திகதி 80,000 பக்கங்களைக் கொண்ட முதல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் துணைக் குற்றப் பத்திரிகை ஏப்ரல் 25இற்குள் தாக்கல் செய்யப்படும் என உச்ச நீதிமன்றத்தில் சி.பி.ஐ. சார்பாக உறுதி அளிக்கப் பட்டிருந்தது. அதன்படி, கலைஞர் ரி.வி பங்குதாரர்களான கனிமொழி எம்.பி, சரத்ரெட்டி ஆகியோருக்கு எதிராக சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஓ.பி. சைனியிடம் துணைக் குற்றப்பத்திரிகையை சி.பி.ஐ. நேற்று முன்தினம் தாக்கல் செய்தது.

2ஜி ஒதுக்கீட்டில் ஆதாயம் பெற்ற ஸ்வான் நிறுவனத்தின் அங்கமான சினியுக் நிறுவனத்திடம் இருந்து கலைஞர் தொலைக்காட்சி 214 கோடி ரூபா பெற்றிருப்பதாக சி.பி.ஐ. தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக கலைஞர் ரி.வி. யின் பங்குதாரர்களான தயாளு அம்மாள், கனிமொழி, நிர்வாக இயக்குநர் சரத்ரெட்டி ஆகியோரிடம் சி.பி.ஐ. விசாரணை நடத்தியது. கலைஞர் ரி.வி. யில் தயாளு அம்மாளுக்கு 60 சதவீதமும், கனிமொழி மற்றும் சரத்ரெட்டி ஆகியோருக்குத் தலா 20 சதவீதமும் பங்குகள் உள்ளன.

·சி.பி.ஐ. தாக்கல் செய்திருக்கும் துணை குற்றப்பத்திரிகையில் ராஜீவ் அகர்வால் மற்றும் ஆசிப் (ஸ்வான் தொலைத் தொடர்பு நிறுவன மேம்பாட்டாளரின் சகோதரர்) ஆகியோரது பெயர்களும் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகி றது.

இவர்கள் இருவரும் ஏற்கெனவே சி.பி.ஐயால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். (வ)

சந்திப்பு...



டில்லியில் உள்ள இந்திய விமானப்படை அதிகாரிகளின் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி, உயரதிகாரிகளுடன் கைகுலுக்குகிறார்.

## கருணாநிதி தொடர்பான அவதூறு வழக்கு:

# ஆஜராகுமாறு ஜெயலலிதா, நெடுமாறனுக்கு சமன்

முதல்வர் கருணாநிதி சார்பில் தொடரப்பட்ட அவதூறு வழக்கில் அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா, உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ.நெடுமாறன் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்ப சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முதல்வர் சார்பில் அரசு வழக்கறிஞர் சாஜஹான் ஜெயலலிதாவுக்கு எதிராக 2 அவதூறு வழக்குகளையும், நெடுமாறனுக்கு எதிராக ஒரு அவதூறு வழக்கையும் அமர்வு நீதிமன்றத்தில் கடந்த வாரம் தாக்கல் செய்திருந்தார்.

அவற்றில், கடந்த 13, 14 ஆகிய திகதிகளில் அ.தி.மு.க. பொதுச்செயலர் ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டிருந்தார். அதேபோல, பழ. நெடுமாறன் ஊடகங்களுக்கு அளித்த பேட்டி கடந்த 17ஆம் திகதி வெளியானது. அதில் அவர், தேர்தல் ஆணையத்தை முதல்வர் வசைபாடுவது ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு எதிரானது என்று கூறியிருந்தார்.

அவர்கள் இருவரும் தெரிவித்துள்ள கருத்துக்கள் அனைத்தும் தவறான, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள். அவை முதல்வரின் நன்மதிப்புக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளன. எனவே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

அந்த மனுக்கள் நீதிபதி பி. தேவதாஸ் முன்னிலையில் திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தன. அப்போது நீதிபதி பிறப்பித்த உத்தரவின்பேரில் அவதூறு வழக்குகள் தொடர்பான ஆவணங்கள் பார்வையிடப்பட்டன. அதன்படி, பழ. நெடுமாறன் ஜூன் 20ஆம் திகதியும், ஜெயலலிதா ஜூன் 21 ஆம் திகதியும் நீதிமன்றத்தில் ஆஜராக அவர்களுக்கு அழைப்பாணை அனுப்ப வேண்டும் என்று உத்தரவிட்டார். (வ)

# குற்றப்பத்திரிகையில் கனிமொழியின் பெயர்; தி.மு.க.- காங்.உறவில் விரிசல் இல்லை

## காங்.செய்தித் தொடர்பாளர் அறிவிப்பு

டில்லி, ஏப். 27

குற்றப்பத்திரிகையில் கனிமொழியின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதால் தி.மு.கவுடன் உள்ள உறவில் பாதிப்பு இல்லை. எனவே தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி தொடரும் என்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் மனீஸ் திவாரி செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

ஸ்பெக்ட்ரம் வழக்கில் 2ஆவது குற்றப்பத்திரிகையை சி.பி.ஐ. நேற்று முன்தினம் தாக்கல் செய்தது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் தி.மு.க.-காங்கிரஸ் உறவு பாதிக்கப்படுமா என்று டில்லியில் செய்தியாளர்கள் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் மனீஸ் திவாரியிடம் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:

2 ஜி ஸ்பெக்டரம் முறைகேடு தொடர்பான சி.பி.ஐ. விசாரணைக்கும் தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. இந்த வழக்கை உயர்நீதிமன்றத்தின் மேற்பார்வையில் சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. இந்த விசாரணையில், மத்திய அரசு எந்தக் காலகட்டத்திலும் தலையிடவில்லை. சி.பி.ஐ. சுதந்திரமாகச் செயற்பட்டு வருகிறது. அதற்கும் அரசியல் கூட்டணிக்கும் தொடர்பு இல்லை. அரசியலில் சரியான சூழ்நிலை தான் கூட்டணியை நிர்ணயிக்கிறது.

தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி தொடரும். 2006ஆம் ஆண்டு தமிழக சட்டசபைத் தேர்தலையும், 2009 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலையும் தி.மு.க.வுடன் கூட்டணி சேர்ந்து சந்தித்தோம். இரண்டு தேர்தலிலும் எமது கூட்டணி மாபெரும் வெற்றிபெற்றது.

இப்போது 2011ஆம் ஆண்டு தமிழக சட்டசபைத் தேர்தலையும் கூட்டணி அமைத்து சந்தித்து இருக்கிறோம். இந்தத் தேர்தலிலும் தி.மு. க.-காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்று ஆட்சியை அமைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. துணை குற்றப்பத்திரிகையில் கனிமொழி பெயர் சேர்க்கப்பட்டுள்ளதால் அவரைத் கைது செய்ய முடியாது. முறைகேடு நடந்ததில் அவருக்கு பங்கு உண்டா என்பதை நீதிமன்றம் ஆய்வு செய்த பிறகு சட்டப்படிதான் எதுவும் செய்ய முடியும்.

குற்றப்பத்திரிகையில் தயாளு அம்மாள் பெயர் இடம் பெறாததற்கு எந்தவித நிர்ப்பந்தமும் இல்லை. சி.பி.ஐ. எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாக செயற்படுவதை உயர்நீதிமன்றம் கண்காணித்து வருகிறது. இதில் மத்திய அரசு எந்தவிதத்திலும் தலையிடவில்லை. உயர் நீதிமன்றம் நேரடியாகக் கண்காணிப்பதால் குற்றப் பத்திரிகையைசரியாகத்தயாரிக்காமல் தவிர்க்க முடியாது. இந்தமுறை நீதிமன்றத்தில் தயாளுஅம்மாளுக்குத் தொடர்பு இல்லை என்பதால் அவரை குற்றப்பத்திரிகையில் சேர்க்காமல் விட்டிருக்கலாம். இவ்வாறு மனீஸ் திவாரி கூறினார். (வ)

## நடிகர் பிருத்விராஜுக்கும் சுப்பிரியாவுக்கும் திருமணம்



நடிகர் பிருத்விராஜுக்கும் மும்பையைச் சேர்ந்த பி.பி.சிச் செய்தியாளர் சுப்ரியா மேனனுக்கும் கேரள மாநிலம் பாலக்காட்டில் நேற்று முன்தினம் திருமணம் நடைபெற்றது.

இந்தத் திருமணம் குறித்து ஊடகங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படவில்லை. பிருத்விராஜின் தாய் மல்லிகா சுகுமாறன், சகோதரர் இந்திரஜித், அவரது மனைவி பூர்ணிமா மற்றும் அவர்களது குழந்தைகள் உள்ளிட்ட 60 அழைப்பாளர்கள் மட்டும் திருமணத்தில் கலந்துகொண்டனர்.

சுப்ரியா மேனனின் சொந்த இடம் பாலக்காட்டின் சாந்திநகர் . அவர் தனது தந்தை விஜய் மேனன், தாய் பத்மா, நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் திருமணத்துக்குக்குச் சென்றார். படப்பிடிப்பாளர்கள், தொலைக்காட்சிச் செய்தியாளர்கள் திருமணம் நடைபெற்ற இடத்துக்குள் அனுமதிக்கப்படவில்லை. எனினும் பத்திற்கும் மேற்பட்ட தனியார் புகைப்படப்பிடிப்பாளர்கள் அந்த விழாவை படம்பிடித்தனர். (6

# மேற்கு வங்கத்தில் இன்று 3ஆம் கட்டத் தேர்தல்

கொல்கத்தா, ஏப்.27

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலின் 3ஆம் கட்டமாக 3 மாவட்டங்களில் உள்ள தொகுதிகளில் இன்று தேர்தல் நடைபெற உள்ளது.

இந்தத் தேர்தலில் 1.44 கோடி வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கொல்கத்தா, வடக்கு மற்றும் தெற்கு 24 பர்கானா மாவட்டங்களில் நடைபெற உள்ள இன்றைய தேர்தலில் முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்ஜி உள்ளிட்ட 479 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

தேர்தலை நேர்மையாகவும், அமைதியாகவும் நடத்த 600 இற்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படை வீரர்கள் நிறுத்தப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (வ)

## பண்டா

நேபாளம் நாட்டிலிருந்து கிழக்குத் திசை நோக்கி சீனா வரை பரந்து காணப்படும் பிரதேசத்தில் இந்தவகை சிகப்பு நிற பண்டாக்கள் வசித்து வருகின்றன. வளர்ந்த சிவப்பு நிற பண்டா ஒரு சிறிய நாயின் அளவில் காணப்படும். இது மிருதுவான உரோமத்தால் மூடப்பட்ட நீளமான வாலைக் கொண்டிருக்கும்.

இந்தவகை பண்டாக்கள் மிகவும் உறுதியான உடலமைப்பைக் கொண்டுள்ளதோடு பலசாலிகளாகவும் காணப்படும் இவை மரமேறுவதில் மிகுந்த சாமர்த்தியசாலிகளாகவும் விளங்குகின்றன. இந்த மிருகங்கள் உயர்ந்த மரங்களிலேயே அதிக காலத்தைக் கழிக்கின்றன.

சிகப்பு நிறப் பண்டாக்கள் அநேகமாகத் தாவர உண்ணிகளாகவோ உள்ளன. இவை வேர்கள், மூங்கில்கள், பழங்கள், புதர்கள் என்பவற்றை உண்ணும் பழக்கமுடையன. ஆனால் சிலவேளைகளில் பூச்சிகள், பறவைகளின் முட்டைகள், ஏனைய பிராணிகள் என்பவற்றையும் உண்ணும் வழக்கமுடையன.

இரவு வேளைகளில் இவை மிகுந்த சுறுசுறுப்புடன் காணப்படுகின்றன. பகல் வேளைகளில் உறங்குவதற்கென வசதியான மரக்கிளையொன்றை இவை தேடிக் கண்டுபிடித்துக் கொள்கின்றன. அத்துடன் இரவு வேளைகளிலேயே தமக்கான உணவைத் தேடிக்கொள்கின்றன. இவற்றின் மூக்கினுள் உணரக் கூடிய தன்மையுள்ள மீசைபோன்ற பாகம் உள்ளது. இவை இரவில் மரங்களில் ஏறுவதற்கு அந்தப் பாகம் உதவுகின்றது.

கோடை காலத்தின் முற்பகுதியில் பண்டாக் குட்டிகள் பிறக்கின்றன. பெண் பண்டா மரத்தில் வசதியானதொரு பள்ளத்தைக் கண்டுபிடித்துத் தனது குட்டியைப் பிரசவிக்கின்றது. வழக்கமாக ஒன்று அல்லது இரண்டு பண்டாக் குட்டிகளே பிறக்கின்றன. இந்தக்குட்டிகள் மிருதுவான உரோமத்தால் மூடப்பட்டிருப்பதைக் காணலாம். இவற்றுக்கு 5 மாதங்கள் ஆகும் வரை தாய்ப் பண்டா பாலூட்டும். இரண்டு வயது நெருங்கும் போது இந்தச் சிறிய பண்டாக்கள் தாயை விட்டுப் பிரிந்து தனியே வாழச் சென்று விடுகின்றது.வளர்ந்த பண்டாக்கள் காடுகளில் தனித்து வாழ்கின்றன.

கடும் சிவப்பு நிறத்திலான உரோமம் காரணமாக சிகப்பு பண்டாக்களை மனிதர்கள் இனங் காண்பது கடினமாகவே உள்ளது.

சிகப்பு பண்டாக்கள் மனிதருக்கு அருகில் வசிப்பதை விரும்புவதில்லை. இவை தமது இருப்பிடத்தை விட்டு வெளியே செல்லும் வேளைகளில் மனிதர்களால் பயமுறுத்தப்படும் போது மிகுந்த பீதியடைகின்றன.

தற்போது இவை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. அதனால் அழியாமல் பாதுகாக்கப்படும் மிருகங்களின் பட்டியலிலும் இவை இடம்பிடித்துள்ளன.


-ராஜன்

## மழைக்காடுகள்

மரம், செடி, கொடிகள் அடர்ந்த
மிதமான வெப்பமண்டலக் காலநிலை
நிலவும் காடுகள் மழைக்காடுகள்
என்று அழைக்கப்படுகின்றன.
இக் காடுகளில் சராசரி மழை அளவு
200 செ.மீ ஆகவும் அதிகபட்சமாக
1000 செ.மீ ஆகவும் இருக்கும். இந்த நிலை
மழைக்காடுகளுக்கு மட்டும் உரித்தானதாகும்.
உலகில் வாழும் உயிரினங்கள்,
தாவர வகைகளில் மூன்றில் இரண்டு
பங்கு மழைக் காடுகளில்தான் உள்ளன.
இன்னும் இனங்காணப்படாத
அதிசய உயிரின வகைகள் மழைக்
காடுகளில் காணப்படுகின்றன.
உலகின் மிக நீண்ட தொடர் மழைக்
காடுகள் தென் அமெரிக்காவில்
அமேசன் வடிநிலப் பகுதியில் காணப்படுகிறன.

சா.பபிதா, தரம் 8 ஏ,
கோண்டாவில், இராமகிருஸ்ண
மகாவித்தியாலயம்.

## பூனை பிரபு

முன்னொரு காலத்தில் உழவன் ஒருவன் பூனை ஒன்றை வளர்த்து வந்தான். வயதாகிப்போன அந்தப் பூனையால் எலிகளைப் பிடிக்க முடியவில்லை.

இந்தப் பூனையால் எந்தப் பயனும் இல்லை; இதைக் காட்டில் விட்டு விடுவோம், என்று நினைத்து அதைக் காட்டில் விட்டுவிட்டு வந்தான். அங்கே உலவிக் கொண்டிருந்த பூனையைப் பெண் நரி ஒன்று பார்த்து ''ஐயா! தாங்கள் யார்? இப்பொழுது தான் தங்களை முதன் முறையாகப் பார்க்கிறேன்'' என்று கேட்டது. ''நான் பூனைப் பிரபு'' என்று கம்பீரமாகச் சொன்னது பூனை.



அதன் அழகிலும் கம்பீரத்திலும் மயங்கியது நரி ''ஐயா! என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள்; உண்மையுள்ள மனைவியாக நான் நடந்து கொள்வேன். உங்கள் விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றி வைப்பேன்'' என்றது. பூனையும் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டது. இரண்டிற்கும் திருமணம் நடந்தது.

தான் சொன்னபடியே நடந்தது நரி. தனியே சென்று கோழிக் குஞ்சுகளைப் பிடித்து வந்து பூனைக்கு உண்ணக் கொடுக்கும். சில சமயம் அது பட்டினியா கவே கிடக்கும். ஒரு நாள் நரி உணவு தேடச் சென்ற போது வழியில் அதை முயல் ஒன்று சந்தித்தது.

''நண்பியே! உன் வீட்டிற்கு நான் வரலாம் என்று இருக்கிறேன். எப்பொழுது வருவது?'' என்று கேட்டது முயல். ''என் வீட்டிற்கு வரும் எண்ணத்தை விட்டுவிடு. அங்கே பூனைப் பிரபு இருக்கிறார். அவர் கொடூரமானவர். உன்னைக் கண்டால் ஒரு நொடியில் கொன்று தின்று விடுவார்'' என்றது நரி. அங்கிருந்து ஓடிய முயல் வழியில் ஓநாயைச் சந்தித்தது. ''உனக்குச் செய்தி தெரியுமா? நரியின் வீட்டில் பூனைப் பிரபு இருக்கிறாராம். அவர் மிகக் கொடூரமானவராம். யாரையும் கொன்று தின்று விடுவாராம்'' என்றது. இந்த விந்தையான செய்தியைப் பன்றியிடம் சொன்னது ஓநாய். பன்றி இதைக் கரடியிடம் சொன்னது. முயல், ஓநாய், பன்றி, கரடி நான்கும் ஒன்றாகக் கூடின.

''எப்படியாவது பூனைப் பிரபுவை நாம் பார்க்க வேண்டுமே?'' என்றது கரடி. ''உயிரின் மீது உனக்கு ஆசை இல்லையா?'' என்று கேட்டது முயல். ''எனக்கு நல்ல வழி ஒன்று தோன்றுகிறது. நாம் நால்வரும் சேர்ந்து பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்வோம். பூனைப் பிரபுவையும் நரியையும் விருந்திற்கு அழைப்போம்'' என்றது ஓநாய். எல்லோரும் இதற்கு ஒப்புக் கொண்டனர்.

மேசையின் மேல் விதவிதமான உணவுப் பொருள்கள் பரிமாறப்பட்டன. ''யார் சென்று பூனைப் பிரபுவை அழைப்பது?'' என்ற சிக்கல் எழுந்தது. ''எனக்குத் தூங்கி வழிகின்ற முகம். நான் சென்று எப்படி அழைப்பேன்?'' என்று மறுத்தது பன்றி. ''எனக்கு அதிக வயதாகி விட்டது. உடல் நலமும் சரியில்லை'' என்றது ஓநாய். ''ஏதேனும் ஆபத்து என்றால் என்னால் வேகமாக ஓட முடியாது'' என்றது கரடி. மூன்றும் முயலைப் பார்த்து, ''விருந்துச் செய்தியை நீதான் சொல்லிவர வேண்டும்'' என்றன. முயல் நடுங்கிக் கொண்டே நரியின் வீட்டை அடைந்தது. நீண்டநேரம் வெளியிலேயே காத்திருந்தது. வெளியே வந்த நரி முயலைப் பார்த்து வியப்பு அடைந்தது.

[தொடரும்]

## அழகுப் பொம்மை



சின்ன வண்ணப் பொம்மை பார்
சிரிக்கும் அழகுப் பொம்மை பார்
கண்ணைச் சிமிட்டும் பொம்மை பார்
கண் கவரும் பொம்மை பார்

தொட்டுத் தொட்டுப் பேச
தூர ஓட மாட்டாள்
முத்தம் ஒன்று கேட்டால்
வந்து தர மாட்டாள்

சத்தம் போட்டுக் கேட்டால்
சத்தம் இன்றி இருப்பாள்
சாதுவான பொம்மை
சாய்ந்து ஆட மாட்டாள்

பிறந்தநாள்ப் பரிசாய்
வாணி தந்த பொம்மை
பிரியத்துடன் நானும்
பார்த்து உன்னை இரசிப்பேன்

அ.சயா.

## ஆளுமை விருத்தி...



பயிற்சி முடிவு: உரும்பிராய் கிட்ஸ் பார்க்கில் செயற்றிறன் அரங்க இயக்கத்தினால் நடத்தப்பட்ட சிறார்களின் ஆளுமை விருத்திக்கான அரங்கப் பயிற்சியின் இறுதிநாள் நிகழ்வு. (ற)

# யாழ்.பிரதேச விளையாட்டுப் போட்டி; யமஹா வி.க. சம்பியன் கிண்ணம் சுவீகரித்தது

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ். பிரதேச செயலக மட்டத்தில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் கூடுதல் புள்ளிகளைப் பெற்று யாழ். யமஹா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கடந்த இரு மாதங்க ளாக நடத்தப்பட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் 25 கழகங்கள் பங்கேற்றன.

குழுப்போட்டி, தனிப்போட்டி, ஓட்டப்போட்டி ஆகியவற்றின் வெற்றிகளைப் பெற்ற யமஹா வி.க. சம்பியனானது.

கிரிக்கெட், எல்லே, மேசைப் பந்தாட்டம், கரப்பந்தாட்டம் மற்றும் மெய்வன்மைப்போட்டி ஆகியவற்றில் யமஹா வி.க. கூடுதல் புள்ளிகளைப் பெற்றிருந்தது.

கிரிக்கெட் போட்டிக்கான வெற்றிக்கிண்ணத்தை அக்கழகத்தை சேர்ந்த பி.கிரிசாந்தியும் எல்லே போட்டிக்கான அக்கழகத்தைச் சேர்ந்த அனிஸ் தயானந்தன், சகல போட்டிக்கான



கிண்ணத்தை அக்கழகத்தின் தலைவர் சுபீதர் பெர்னாண்டோ ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (ஐ)

# வடமராட்சியில் 21 பாடசாலைகளுக்கு விளையாட்டு முற்றத்துக்கான உபகரணம்

பருத்தித்துறை,ஏப்.27

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள 21 பாடசாலைகளுக்கு 'யுனிசெவ்' நிறுவனம் விளையாட்டு முற்றத்துக்கான உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இப் பாடசாலைகள் தும்பளை, சிவப்பிரகாச மகா வித்தியாலயம், பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம், கற்கோவளம் மெதடிஸ்த மிசன் கலவன் பாடசாலை ஆகியவற்றுக்கு விளையாட்டு முற்றத்துக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-190)

# தென்மராட்சியில் மெய்வன்மைப் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம்,ஏப்.27

தென்மராட்சி கல்விவலயத்தின் ஏற்பாட்டில் மெய்வன்மை பயிற்சி முகாம் நாளை முதல் மூன்று தினங்கள் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் காலை 8.30 மணி தொடக்கம் மலை 5.30 மணிவரை இடம்பெறவுள்ளது என்று சாவகச்சேரி உடற்கல்வி உதவிப்பணிப்பாளர் என்.சிவகுமார் தெரிவித்துள்ளார். (ஐ-23)

# கோண்டாவில் சனசமூக நிலைய விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.27

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண சனசமூக நிலைய 59 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டிக் கிராம அபிவிருத்திச் சங்கமும் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் பாலர் பாடசாலையும் இணைந்து நடத்திய குழு நிலைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள்,

தாச்சிப் போட்டியில்- பாரதி வி.க. -முதலாமிடம், காந்தி வி.க. இரண்டாமிடம், அண்ணா- மூன்றாமிடம்.

துடுப்பாட்டப் போட்டியில்- காந்தி வி.க.- முதலாமிடம், அண்ணா- இரண்டாமிடம், பாரதி வி.க.- மூன்றாமிடம்.

கரம் போட்டியில்- பாரதி வி.க. - முதலாமிடம், அண்ணா- இரண்டாமிடம், காந்தி வி.க.- மூன்றாமிடம்.

கரப்பந்தாட்டப் போட்டியில் - பாரதி வி.க.- முதலாமிடம், காந்தி- இரண்டாமிடம், அண்ணா வி.க.- மூன்றாமிடம் பெற்றனர். (எ-23)

# இளைஞர் - சம்சாரிகள் அணிகள் மோதல் 104 ஓட்டங்களால் வென்றனர் இளைஞர்

கொழும்புத்துறை, ஏப். 27

ஈஸ்ரர் ஞாயிறு தினத்தையொட்டி கொழும்புத்துறையில் நடைபெற்ற இளைஞர் - சம்சாரிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் இளைஞர் அணியினர் வெற்றிபெற்றனர்.

கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய வளாகத்தில் 48 ஆவது வருடப் போட்டியாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தை பங்குத்தந்தை அருட்திரு. அன்ரன் மத்தாயஸ் அடிகள் பூவா தலையா போட்டு தொடக்கி வைத்தார்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இளைஞர் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 7 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்தி சம்சாரிகள் அணியினரை ஆட அழைத்தனர்.

சம்சாரிகள் அணியினர் சகல இலக்குகளையும் இழந்து 53 ஓட்டங்களை எடுத்தனர். 104 ஓட்டங்களால் இளைஞர் அணி வெற்றிபெற்றது.

இளைஞர் அணியில் முதலாவது இணைப்பாட்டத்தில் அ.றொசான், டொ.சுகிர்தன் இணைந்து 100 ஓட்டங்களைப் பெற்றனர். (ஐ-135)

# மாகாண சைக்கிள், மரதன் ஓட்டம் வவுனியாவில் சனியன்று ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 27

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் மாகாணமட்ட விளையாட்டுப் போட்டித் தொடரின் அங்கமான ஆண், பெண் இரு பாலாருக்குமான சைக்கிள், மரதன், வேக நடைப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை வவுனியாவில் இடம்பெறும்.

இந்தப் போட்டி வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் சி.அண்ணாத்துரை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் பி.எச்.எம். சாள்ஸ்ஸும் சிறப்பு விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-23)

# தென்மராட்சி பாடசாலைகளின் மெய்வன்மைப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்ட மெய்வன்மைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:-

**11 வயதுப் பிரிவு பெண்கள்**

75 மீற்றர் ஓட்டம் - ர.தவநந்தினி - உசன் இராமநாதன் ம.வி., ந.வினுஸ்ரா - சாவகச்சேரி மகளிர் கல்லூரி, ம.மதுசிகா - மட்டுவில் கமலாசினி வித்தி.

100 மீற்றர் ஓட்டம் - ர.தவநந்தினி - உசன் இராமநாதன் ம.வி., ம.மதுசிகா -மட்டுவில் கமலாசினி வித்தி, ந.வினுஸ்ரா - சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

நீளம் பாய்தல் - த.தர்சிகா - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, ஜோ.கீர்த்தனா - சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை, க.ராதிகா - கெற்பேலி இந்து ஆரம்ப பாடசாலை.

உயரம் பாய்தல் - சி.நாக பூசணி - சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, ம.லோசிகா - மட்டுவில் கமலாசனி பாடசாலை.

**13 வயதுப் பிரிவு பெண்கள்**

100 மீற்றர் ஓட்டம் - க.கனுஜி - மிருசுவில் அ.த.க. பாடசாலை, வி.விதுர்ஷா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கி.சாருஜா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

200 மீற்றர் ஓட்டம் - க.கனுஜி - மிருசுவில் அ.த.க. பாடசாலை, க.றெபேக்கா - நாவற்குழி ம.வி., வ.தனசிகா - உசன் இராமநாதன் ம.வி.

நீளம் பாய்தல் - கு.அனுசா - சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி., வி.விதுர்ஷா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பா.கிருஜா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

உயரம் பாய்தல் - வி.விதுர்ஷா - சாவகச்சேரி இந்துக் கல் லூரி, பா.கிருஜா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, க.அகல்யா - வரணி ம.வி.

4x100 அஞ்சல் ஓட்டம் - வரணி ம.வி., குடமியன் அ.த.க. பாடசாலை.

**15 வயதுப் பிரிவு பெண்கள்**

100 மீற்றர் ஓட்டம் - தி.கிரு சாந்தி - குடமியன் அ.த.க. பாடசாலை, இ.மைதிலி - கொடிகாமம் அ.த.க. பாடசாலை, சு.கஜீபா - கச்சாய் அ.த.க. பாடசாலை.

200 மீற்றர் ஓட்டம் - ம.ரட்சகி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இ.சந்திரலேக்கா - மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை, இ.இராஜலட்சுமி - உசன் இராமநாதன் ம.வி.

400 மீற்றர் ஓட்டம் - இ.இராஜலட்சுமி - உசன் இராமநாதன் ம.வி., கு.விதுலசனா - விடத்தற்பளை கமலாசனி ம.வி., ஜெ.சோபிதா - வரணி ம.வி.

100 மீற்றர் தடைதண்டல் ஓட்டம் - கோ.டினா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ச.அபிராமி - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., வி.பவீந்தினி - மட்டுவில் கமலாசனி ம.வி.

நீளம் பாய்தல் - நி.சங்கவி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ம.ரட்சகி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, த.அபிர - சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.

உயரம் பாய்தல் - சி.பிரியங்கா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ச.அன்பரசி - வரணி ம.வி., த.லக்சனா - நாவற்குழி ம.வி.

குண்டு போடுதல் - ச.வைஸ்ணவி - மீசாலை விக்னேஸ்வார ம.வி., த.ருக்சானா - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, ஆ.தாட்சாயினி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

தட்டு எறிதல் - சு.கஜீபா - கச்சாய் அ.த.க. பாடசாலை, ச.வைஸ்ணவி - மீசாலை விக்னேஸ்வர ம.வி.

ஈட்டியெறிதல் - சு.கஜீபா - கச்சாய் அ.த.க. பாடசாலை, க.காயத்திரி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பா.சர்மிலா - கொடிகமம் திருநாவுக்கரசு ம.வி.

4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, குடமியன் அ.த.க. பாடசாலை, கச்சாய் அ.த.க. பாடசாலை.

4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் - குடமியன் அ.த.க. பாடசாலை, கொடிகாமம் திரு நாவுக்கரசு ம.வி., மிருசுவில் அ.த.க. பாடசாலை.

(தொடரும்)

# தெல்லிப்பழைப் பொலிஸ் நடத்திய 38 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டம்



வலி.வடக்கு, ஏப்.27

தெல்லிப்பழைப் பிரதேச செயலகமும் தெல்லிப்பழைப் பொலிஸாரும் இணைந்து தமிழ் - சிங்களப் புத்தாண்டையொட்டி நடத்திய விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

38 கிலோமீற்றர் தூரத்துக்கான போட்டியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சைக்கிள் ஓட்ட வீரர்கள் யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் கலந்து கொண்டனர்.

போட்டியில் கலந்து கொண்ட வீரர்களுக்குக் காங்கேசன் துறைப் பொலிஸ் அத்தியட்சகர் அறிமுகம் செய்து வைக்கப் பட்டார்.

போட்டியில் முதலாம் இடத்தை எட்மன் (வட்டுக்கோட்டை), இரண்டாம் இடத்தை குயின்டன் (கொக்குவில்), மூன்றாம் இடத்தை ராஜன் (பண்டத் தரிப்பு) ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (த-86)

**தவறிவிட்டது**

இல.25, திருமகள் வீதி, அரியாலை என்னும் முகவரியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பத்மமுரளி என்பவரது தேசிய அ.அட்டை [880270842V], விசேட அ.அட்டை என்பன 22.04.2011 அன்று மனோகரா சந்திக்கும் 4ம் சந்திக்கும் இடையில் நாவலர் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத் தவர்கள் மேற்காணும் முகவரியில் அல்லது ஸ்ரீரங்கநாதன் ரேடர்ஸ், 192, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P: 0776450755

**இன்னும் 4நாட்கள் மட்டுமே**
**சிறப்புச்சலுகை**

எமது நிறுவனத்தில்...

எந்தவொரு கணனி கற்கை நெறிகளையும் கற்க விரும்பும் கணனி ஆர்வலர்களுக்கு பதிவுக்கட்டணமின்றி கற்பதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்!!!

பாடநெறிக்கட்டணம் 1000/= மட்டுமே!!!

**Computer Express**
**Institute of Information Technology**

Batch I - 27.04.2011 9Am or 3pm
Batch II - 29.04.2011 9Am or 3pm
Batch III - 30.04.2011 11Am or 2pm
Batch IV - 01.05.2011 11Am or 2pm

இச்சலுகை 30-04.2011வரை மட்டுமே பதிவுகளுக்கு முந்துங்கள்

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
0774907444.021 222 8250, 0777222422

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சகாதேவன் (சதா)

(நயினாதீவு)



நயினாதீவு, 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 4 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை சகாதேவன் (சதா) நேற்று (26.04.2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் கோமதியின் அன்புக்கணவரும் பவித்திரா(பிரான்ஸ்), கஜந்தினி,தங்கீர்த்தனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவிசங்கரின்(பிரான்ஸ்) அன்பு மாமனும் தருமலிங்கம் (VMR,கொழும்பு), புவனேஸ்வரி(கனடா), தனபாலசிங்கம் (கனடா) பரராசசிங்கம், மகேஸ்வரி, காசிலிங்கம்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திலகவதி, மெய்யழகன், அருளானந்தசிவம், பரமானந்தம், சிவானந்தன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (3555)

தகவல்:
குடும்பத்தினர்.

## வலிகாமம் ஆசிரியருக்கு இன்று கலந்துரையாடல்

தரம் 5 இல் கல்வி கற்கும் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான தரவட்டக் கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள விசேட கல்வி அலகில் நடைபெறவுள்ளது.(ஒ-38)

## 'ஞானச்சுடர்' வெளியீடு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆன்மிக சஞ்சிகையின் 160 ஆவது, சித்திரை மாத இதழ் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தின் பேரவைஉறுப்பினர் எஸ். அருண கிரிநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை டாக்டர் கா. பாலகிருஷ்ணனும், மதிப் பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் திருமதி தவமலர் சுரேந்திரனும் நிகழ்த்துவார்கள். (ஒ-236)

## அதிபர்களுக்கான செயலமர்வு

யாழ். கல்வி வலயத்தின் ஆரம்பப் பிரிவுகளைக் கொண்ட பாடசாலை அதிபர்களுக்கான (தரம்-5) செயலமர்வு இன்று புதன்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட அதிபர்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ். கல்வி வலய வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-323)

## சோமஸ்கந்தாமாணவருக்கு

கோப்பாய், ஏப்.27

கடந்த டிசெம்பர் மாதம் ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சைக்கு தேசிய அடையாள அட்டை இன்றி தோற்றி பெறுபேறு கிடைக்கப் பெறாத புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி மாணவர்களை இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு சந்திக்குமாறுபாட சாலை அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-72)

**தவறிவிட்டது**

இல 21/1, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த திருமதி வெனிற்றா ரேவதி ஞானப்பிரகாசம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை [578550720V] உட்பட முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் 19.04.2011 அன்று கிளிநொச்சி பஸ்தரிப்பு நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலே குறிப்பிட்ட முகவரியில் அல்லது இல 98, திருநகர், கிளிநொச்சி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தொடர்பு: 0213219647




## உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 744 திகதி 25-04-2011

வெற்றி எண்கள்

**04 12 25 46 M**

ஜக்பொட் பரிசு ரூ. 11,452,570/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 11,452,570/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 22 | 2,000/= | 44,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 400 | 1,000/= | 400,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 641 | 1,000/= | 641,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16373 | 60/= | 982,380/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7708 | 40/= | 308,320/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 193952 | 20/= | 3,879,040/= |
| | | மொத்தம் | ரூ. 7,054,740/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| புத்தளம் | 601008331-6-46 |
| களுத்துறை | 601006433-5-25 |
| கொழும்பு | 601008947-1-01 |
| வவுனியா | 601014471-9-09 |
| காலி | 601012657-6-06 |
| கேகாலை | 601008777-9-19 |
| மட்டக்களப்பு | 601012134-4-14 |
| கம்பஹா | 601009811-2-42 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,454,740/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 11,978,920/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2011 ஏப்ரல் 28 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

**விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்**

அங்கீகரிக்கப்பட்ட கணனி டிப்ளோமா சான்றிதழ்கான கற்கைநெறிகள்.

Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
AutoCAD
Internet and E-mail

பல்கலைக்கழக, HNDA, HNDM, aat,A/L, மாணவர்கள் மற்றும் கணக்கியல் துறையில் ஆர்வமுடையவர்களுக்கான
Tally Dip. in Computerized Accounting
#Quick Books # Accpack # MYOB

DMI COMPUTER EDUCATION

நவீன தொழில்நுட்பங்கள், Advanced Video Editing மென்பொருட்களையும் உள்ளடக்கிய தமிழ் மொழி விளக்கங்களுடனான முழுமையான Video Editing கற்கை நெறி.

Diploma in Video Production & Multimedia

Int. to Digital Video, Adobe Premiere CS4, Particlelllusion, Photoshop CS5 Pinnacle Studio HD 14, COOL 3D Studio, Adobe After Effects, & Nuendo,

Free: Title CDs, Effects CDs, Background DVDs, &Software DVDs

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி

**DMI COMPUTER EDUCATION**

No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி. Tel. : 021-226 2470
No.174, கண்டி வீதி, சாவகச்சேரி. Tel. :021-227 0243

## மரண அறிவித்தல்

### R.S கேசவமூர்த்தி

(அளவையூர், இசைஞானபூபதி வயலின் வித்துவான், நிறுவுனர், ஞானோதயம் கலைக்கூடம், கனடா)



அளவெட்டியைப்பிறப்பிடமாகவும், நல்லூரையும் கொழும்பையும் வசிப்பிடமாகவும் கொண்ட இசைஞானபூபதி R.S கேசவமூர்த்தி 25.04.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காந்தாமணியின் (கிளி) அன்புக் கணவரும் ஜெயரஞ்சினி (ஆசிரியை, யா/ யூனியன் கல்லூரி), ஜெயரூபி, இதயமூர்த்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெனகன் (கேமாஸ் வைத்தியசாலை, கொழும்பு), தணிகன், மேனகன், நிலாங்கி (மாணவி, கொழும்பு, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2011) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தீயுடன் சங்கமமாகும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கே. ஜெனகன்,
கே. தணிகன்.(மகன்மார்)
தொ.பே:-0779411361.

(3551)
நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி,
138/5, கோயில் வீதி, நல்லூர்.

## இன்னும் அழுகின்றோம்
## இன்று நாள் 45



அமரர் ரேணுகா
பிள்ளைநாயகம்

மண்ணில்
01.03.1980

விண்ணில்
14.03.2011

நித்தியத்தில் நீ உறைந்தாய்
- நாம்
நித்தமும் அழுகின்றோம்
சத்தியத்தின் சோதனையோ
சபிக்கின்றோம்
கடவுளையே
எத்தனை நாள் ஆனாலும்
எம்முடனே நீ இருப்பாய்
ஓம் சாந்தி!

குடும்பத்தினர்.
ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில்.
தொ.பே:- 0776163349,
021 3207602.

(3560)





தந்தை செல்வா நினைவுப் பேருரை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது. தந்தை செல்வாவின் உருவப்படத்துக்கு இரா. சம்பந்தன் எம்பி மலர் மாலை அணிவிப்பதையும் அருகில் மாவை சேனாதிராசா நிற்பதையும் முதலாவது படத்திலும் நினைவுப் பேருரையை சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமேந்திரன் ஆற்றுவதை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் புத்திஜீவிகள் ஆகியோர் பார்வையாளர்களாக கலரியில் அமர்ந்திருப்பதை இறுதிப் படத்திலும் காணலாம்.

## அறிக்கையைக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

''நிபுணர் குழுவின் அறிக்கை இந்திய அரசுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் கவனமாக ஆழ்ந்து ஆராயப்பட வேண்டும். அதன் முதற்படியாக அறிக்கை தொடர்பில் இலங்கை அரசுடன் பேச இருக்கிறோம்'' என்று வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்புக் கூறுகிறது. நிபுணர் குழுவின் அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளி யிடப்பட்டு சிறிது நேரத்தின் பின்னர் இந்திய அரசின் இந்த அறிவிப்பு வெளியானது. (உ)

## இலங்கையைக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்கு உதவிகளை வழங்கக்கூடாது என்றார்.

போர்க் குற்றச்சாட்டுக்களில் இருந்து தற்போதும் இலங்கையைப் பாதுகாக்க இந்தியா உதவ உள்ளதாகச் செய்திகள் வெளிவருகின்றன என்று கூறிய இல. கணேசன். ''இனப் படுகொலைகளுக்கு உதவியது என்ற வீண் பழியை இந்தியா சுமக்கக்கூடாது'' என்று வலியுறுத்தினார். (உ)

## போர்க்குற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச விசாரணைக் குழு ஒன்றை நியமிப்பதற்கு இலங்கை அரசு இணங்கினால் அல்லது ஐ.நாவின் உறுப்பு நாடுகள் கேட்டுக் கொண்டால் மட்டுமே அவ்வாறான விசாரணை ஒன்றுக்கு தான் உத்தரவிட முடியும் என்று பான் கீ -மூன் தெரிவித்துள்ளார்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை நேற்று அதிகாலையில் (நியூயோர்க் நேரப்படி நேற்று முன்தினம் மாலை) உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் பான் கீ-மூனின் பேச்சாளர் மார்டின் நெஸக்கி நியூயோர்க்கில் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

இலங்கையின் இறுதிக்கட்டத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகப் பொறுப்புச் சொல்லும் விடயத்தில் தனக்கு ஆலோசனை வழங்கவென பொதுச் செயலாளர் நியமித்த நிபுணர் குழு, குற்றச்சாட்டுக்களை விசாரிக்க உடனடியாக சுதந்திரமான சர்வதேச விசாரணைக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளது.

இலங்கை அரசு இணங்கினால் அல்லது ஐ.நா. உறுப்பு நாடுகள் அழைப்பு விடுத்தால் மட்டுமே அத்தகைய விசாரணை ஒன்றுக்கு பொதுச் செயலாளர் உத்தரவிட முடியும். தன்னிச்சையாக விசாரணைக் குழுவை அமைக்கும் அதிகாரம் அவருக்கு இல்லை.

அதேசமயம், குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உடனடியான சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று நிபுணர் குழு சிபாரிசு செய்துள்ளதை பான் கீ - மூன் வரவேற் றுள்ளார்.

நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாகத் தமது கருத்துக்களை வெளியிடுமாறு பலமுறை கோரிய போதும் இலங்கை அரசிடம் இருந்து எந்தவிதப் பதிலும் கிடைக்கவில்லை.

ஆனால், அறிக்கை தொடர்பாக இலங்கையிலிருந்து ஆத்திரத்துடன் வெளிப்படும் அறிக்கைகள், செயற்பாடுகள் தொடர்பாக செயலாளர் நாயகம் விசனமடைந்துள்ளார்.

போரின் இறுதியில் நடைபெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து இலங்கை அரசு பக்கச்சார்பற்ற நீதியான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்.

அத்தோடு நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பிலும் இலங்கை அரசு பதிலளிக்க வேண்டும்.

சர்வதேச மட்டத்தில் பல்வேறு மனித உரிமைப் பிரகடனங்களில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. எனவே சர்வதேச சட்டங்களின்படி விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது கொள்கை ரீதியான விடயம் அல்ல. அது அரசின் முதன்மையான கடமைகளில் ஒன்றாகும் - என்றார் மார்டின் நெஸக்கி.

நிபுணர் குழுவின் அறிக்கை உத்தியோகபூர்வமாக நேற்றே வெளியான போதும் அதன் முக்கிய பகுதிகள் ஏற்கனவே ஊடகங்களில் வெளியாகிவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## இலங்கைக்கான புதிய தூதுவர்கள்

இலங்கைக்கான புதிய தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஏழுபேர் தமது நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்று சமர்ப்பித்துள்ளனர்.

இத்தாலி தூதுவர் பெப்ரீஸியோபியோ ஆபியாவும், கொரிய தூதுவர் சொல் ஜங் மூனும், வியட்நாம் தூதுவர் டொன் சிங் தஹ்வும் பிலிப்பைன்ஸ் தூதர் பஹ்னரிம் அபு கனோமிலாவும், பெல்ஜியத் தூதர் பீர் வீசனும் தமது தென்னாபிரிக்க தூதர் ஜெப்ரி குவின்டன் டொய்ஜியும் நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்று சமர்ப்பித்துள்ளனர்.

## தமிழீழத்தை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டும் மருத்துவர் ராமதாஸ், இதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். (உ)

## போர்க் குற்ற விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கத் தனக்கு அதிகாரம் இல்லை என்று பான் கீ - மூன் ஏற்கனவே தெரிவித்துள்ள நிலையில்தான் மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியத்துக்கான பணிப்பாளர் பிரட் அடம்ஸ் கூறியுள்ளவைவருமாறு:-

இந்த மாதம் 25ஆம் திகதி வெளியிடப்பட்ட ஐ.நா.நிபுணர்கள் குழு அறிக்கையில் இலங்கைப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தத்தில் இரு தரப்பினரும் செயற்பட்ட விதம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவர்கள் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது பொதுமக்களின் உயிர்கள், உரிமைகள் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றைக் கருத்தில் கொள்ளவில்லை என்று அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

யுத்தம் முடிந்து 2 வருடங்கள் ஆகியும் யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக சர்வதேச சட்டதிட்டங் களுக்கு அமைவாகப் பதிலளிக்க இலங்கை அரசு முயற்சிக்கவில்லை என் றும் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பான் கீ -மூனுக்கிடையில் செய்து கொள்ளப் பட்ட கூட்டறிக்கையைத் திருப்திப்படுத்த இலங்கை அரசு தவறிவிட்டது என்றும் நிபுணர்கள் குழு அறிக்கை கூறுகின்றது.

இலங்கையில் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு நிதியைப் பெற் றுக் கொடுப்பதற்காக எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் முட்டுக்கட்டை போடக் கூடாது. அந்நாடுகள் நிபுணர்கள் குழுவின் சிபாரிசுகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

நிபுணர்கள் குழுவின் அறிக்கையை அடிப்படையாக வைத்து இலங்கை மீதான யுத்தக்குற்றச்சாட்டக்களை விசாரணை செய்ய பான் கீ - மூன் சர்வதேச சுயாதீன விசாரணைக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும். - எனக் கூறியுள்ளார்.

## லட்சக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோனியா காந்தி உட்பட பல முக்கிய தலைவர்கள் நேற்று புட்டபர்த்திக்கு வருகை தந்து பகவானுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.புட்டபர்த்தியில் பகவானுக்கு இறுதி அஞ்சலி செலுத்து வதற்காக அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், பிரமுகர்கள், நடிகர்கள் ஆகியோர் வருகை தருவதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் பத்தாயிரம் பொலிஸாரும், ஆயுதம் தாங்கிய படையினரும் பாதுகாப்புக்கென குவிக்கப்பட்டுள்ளனர்.

சாயி பாபாவின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் உள்ள சாய்குல்வந்த் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. அரசியல் தலைவர்கள், தொழில் அதிபர்கள், முக்கிய பிரமுகர்கள், சாமியார்கள் ஆகியோர் சாயி பாபாவின் உடலுக்கு நேற்று அஞ்சலி செலுத்தினார்கள்.

### புட்டபர்த்திக்குப் பஸில்

இதேவேளை, மகா சமாதியடைந்த ஸ்ரீ சத்ய சாயிபாபாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சார்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று பெங்களூர் சென்றார். (ஒ-சி)

*(மேலும் செய்திகள், படங்கள் 24ஆம் பக்கத்தில்)*

## குற்றவாளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசின் கடமை'' என்று கூறியுள்ளார்.

''நிபுணர் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதை விட்டு, அறிக்கையின் முடிவுகளை எதிர்ப்பது என்ற முடிவை இலங்கை தெரிவு செய்துள்ளமை குறித்து நான் கவலை அடைந்துள்ளேன்'' - என்றார் அவர்.

நிபுணர் குழு அறிக்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று தான் விரும்புகிறார் என்றும் பேர்மன் கூறினார்.

இந்த விடயத்தில் ''போர்க் குற்றங்களை இழைத்தவர்களை அடையாளம் கண்டு தண்டிப்பதற்கான விசாரணை களை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்காத வரையில், இலங்கையில் நிலையான நல்லிணக்கம் இருக்க முடியாது என்று நான் அஞ்சுகிறேன்'' என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1971 ★ 03 ★



ஆண்டவன் அடியில் 2009 ★ 04 ★ 27

திருமதி ஜெயராணி முரளிதரன்
(கண்டாவளை)

நினைவலையில் என்றும் நீங்களம்மா
நித்திலத்தில் எம்மைப் பெற்றெடுத்த
நினைவழியாச் செல்வமே
நெஞ்சமதில் என்றும் நிலைத்திருக்கும் தாயே!
நினைவு வந்த நாள் முதலாய்
நிஜமாக நடமாடிய தெய்வமே!
தம்பிக்கு நினைவு வரா வயதில்
தத்தளிக்க விட்டு
தாயான எம் தெய்வம் பறந்ததெங்கே
பெற்றெடுத்த தாயை கோயிலுக்கு
போய் விட்டா என எம் உறவுகள்
சொல்வதைக் கேட்டு
கோயிலென்ற கோயிலெல்லாம்
தேடுகின்றோம் பெற்றவளே.

தகவல்:
அ. செல்லத்துரை,
(கண்டாவளை)

(சி/577954)

உங்கள் நினைவுகளோடு
பிள்ளைகள்,
சங்கமன், துலங்கமன்.

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளது.

# மூனின் நிபுணர் குழு அறிக்கைக்கு எழுத்து மூல பதில் தேவையற்றது

## மூத்த ராஜதந்திரிகள் அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, ஏப்.27

ஐ.நா. செயலாளர் பான் கீ - மூனின் நிபுணர்குழு அறிக்கைக்குப் பதிலளிக்கும் எழுத்து மூலமான அறிக்கையொன்றை ஐ.நா. சபைக்கு அனுப்புவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு மூத்த ராஜதந்திரிகள் பலரும் அரசுக்கு - அரசின் முக்கியஸ்தர்களுக்கு - ஆலோசனைகளை வழங்கியுள்ளனர் என்று நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன என்று கொழும்பின் ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கைக்கு எழுத்து மூலமான பதிலறிக்கையொன்றை வழங்க எத்தனிப்பதால், இந்த அறிக்கை தொடர்பாக அவசியமற்றதொரு அங்கீகாரம் வழங்கப்படுவதாகவும், எனவே இந்த நிபுணர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பந்தமாகப் பதிலளிக்காதிருக்க வேண்டியுள்ளது எனவும் அவர்கள் அரசின் முக்கியஸ்தர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இதனிடையே, இந்த விவகாரத்தில் ஐ.நா.செயலாளர் பான் கீ-மூன் தனது அதிகாரங்கள் மற்றும் எல்லைகளைத் தாண்டிச் செயற்பட்டுள்ளார் எனவும் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் வைத்து வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜீ. எல்.பீரிஸ் தெரிவித்திருந்தார்.

மேலும், அண்மையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் கூட மேற்படி குழுவின் அறிக்கை சம்பந்தமாக அரசு மேற்கொள்ள வேண்டியுள்ள நடவடிக்கைகள் அலசி ஆராயப்பட்டதாகவும் அரச வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**ராஜதந்திர தவறாம்**

இது சம்பந்தமாக கொழும்பின் சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வழங்கியிருந்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, ஐ.நா. அறிக்கையை அரசு பொறுப்பேற்றதும் கூட, ராஜதந்திர ரீதியிலான தவறொன்றே என்றும் அதன் மூலம் இக் குழுவுக்கு 'அவசியமற்ற அங்கீகாரம்' கிட்டுகிறது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

(ஒ-22)

# நிபுணர் குழு அறிக்கையை கண்டித்து மட்டு நகரில் நாளை உண்ணாவிரதம்

## மேயர் சிவகீதா தலைமையில் ஏற்பாடு

மட்டக்களப்பு, ஏப்.27

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையைக் கண்டித்து நாளை வியாழக்கிழமை மட்டக்களப்பு மாநகர சபை முன்பாக அடையாள உண்ணாவிரதம் இடம்பெறவுள்ளது.

மாநகர மேயர் சிவகீதா பிரபாகரன் தலைமையில் இந்த உண்ணாவிரதம் காலையில் இருந்து மாலை வரை இடம்பெறும். மாநகர சபை உறுப்பினர்களும் பொதுமக்களும் இந்த உண்ணாவிரதத்தில் கலந்து கொள்வர்.

இந்த அறிக்கையைக் கண்டித்துத் தீர்மானம் ஒன்று மட்டக்களப்பு மாநகரசபையில் இன்று நிறைவேற்றப்படவிருக்கிறது.

மாநகர மேயர் சிவகீதா பிரபாகரன் நேற்று செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தி அறிக்கையை வன்மையாகக் கண்டித்தார்.

''இலங்கையில் 30 ஆண்டு கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஐ.நா. அறிக்கை வெளியிடுவது நியாயமா?

''யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அபிவிருத்திக்கு உதவிகளை வழங்குவதை விடுத்து, புலிகளைக் கொன்று பயங்கரவாதத்தை ஒழித்த ஜனாதிபதிக்கு எதிராக ஐ.நா. அறிக்கை விடுவது கண்டிக்கப்பட வேண்டிய செயல்'' என்று அவர் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் மேயரான சிவகீதா பிரபாகரன், விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-ஐ-21)

# தமிழ்க் கைதியின் பட்டினிப் போர் தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஏப்.27

நியூ மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளில் ஒருவர் நேற்று முன்தினம் ஆரம்பித்த பட்டினிப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

வவுனியா, குட்செட் வீதியைச் சேர்ந்த மரியதாஸ் அன்ரனி அஞ்சலோ (வயது 27) என்ற கைதியே பட்டினிப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

உண்ணா விரதம் இருக்கும் இவரை எந்தவொரு அரசியல்வாதியும் நேற்றுவரை சந்திக்கவில்லை. இன்று 3ஆவது நாளாகவும் அவரது போராட்டம் தொடருமென அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-15)

# 'ஏக்கத்தின் அடுக்குகள்' காண்பியக் கலை காட்சியுரை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் ஆதரவில் ''ஏக்கத்தின் அடுக்குகள்'' எனும் தலைப்பிலான காண்பியக் கலை காட்சியுரை நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு கலைப்பீட புதிய கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கையின் சமகால முன்னணி காண்பியக் கலைஞருள் ஒருவரான பேராசிரியர் ஜகத் வீரசிங்க காட்சியுரை நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்வில் ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-10)

# தனியார் ஓய்வூதியத் திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம், மாநாடு

கொழும்பு, ஏப்.27

உத்தேச தனியார் ஊழியர் ஓய்வூதிய சட்டமூலத்தின் வழியாக ஊழியர்களின் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் பணிக்கொடை ஆகியவற்றை அரசு கொள்ளையிட முயல்வதைத் தடுத்து நிறுத்தும் மாநாடும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் நேற்று கொழும்பில் நடைபெற்றன.

இது தொடர்பான மாநாடு கொழும்பு ஜயவர்தன கேந்திர நிலையத்தில் நேற்றுக்காலை 10மணிக்கு நடைபெற்றது. அத்துடன், எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று நண்பகல் 12 மணிக்கு லிப்டன் சுற்றுவட்டத்தில் நடத்தப்பட்டது. இவற்றை தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உத்தேச தனியார் ஊழியர் ஓய்வூதிய சட்டமூலத்தை அமைச்சரும், சபை முதல்வருமான நிமால் சிறிபால டி சில்வா கடந்த 7ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

இதனையடுத்து இம்மாதம் 27ஆம் திகதி (இன்று) நாடாளுமன்றில் அந்தச் சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்தது. எதிர்க்கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களின் எதிர்ப்பு காரணமாக மேற்குறிப்பிட்ட சட்டமூலம் மீதான விவாதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(ஒ-சி)

# யாழ்.ஆஸ்பத்திரி 'எக்ஸ்றே' பிரிவில் இயந்திரங்கள் திடீரென செயலிழப்பு

## நோயாளர்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ்.போதனா வைத்தியசாலையின் 'எக்ஸ்றே' இயந்திரங்கள் திடீரென பழுதடைந்துவிட்டதால் நோயாளர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனால் வைத்தியசாலையின் எக்ஸ்றே பிரிவு தினமும் நிரம்பி வழிகிறது. அங்கு நோயாளர்கள் நெடுநேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.

பழமைவாய்ந்த இந்த இயந்திரங்கள் இந்திய அரசினால் வழங்கப்பட்டிருந்தன. சுகாதார அமைச்சினால் இதுவரை இந்தப் பிரிவுக்கென 'எக்ஸ்றே' இயந்திரங்கள் எவையும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த இயந்திரங்கள் திடீரென செயலிழந்தன. இதனால் அன்றைய தினம் போதனா வைத்தியசாலையிலிருந்து நோயாளர்கள் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு கூட்டிச் செல்லப்பட்டு அங்கு 'எக்ஸ்றே' கள் எடுக்கப்பட்டன.

தற்போது போதனா வைத்தியசாலையின் எக்ஸ்றே இயந்திரங்களில் ஒன்று மட்டுமே திருத்தப்பட்டு இயங்கி வருகின்றது. ஏனைய இயந்திரங்கள் இதுவரை திருத்தப்படவில்லை.

இதனால் நோயாளர்கள் மட்டுமன்றி வைத்தியர்களும் சிகிச்சை அளிப்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

(ஒ-4)

# நிகழ்வுகள்

### மாணவருக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப்.27

கொக்குவில் இந்துக்கல்லூரியில் க.பொ.த உயர்தரம் 2013 இற்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் தொடர்பான செயலமர்வு இன்று புதன் கிழமை காலை 8 மணி முதல் தொடர்ந்து மூன்று தினங்கள் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தச் செயலமர்வில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களினதும் மற்றும் கணித, விஞ்ஞான, வர்த்தக, கலைத்துறைகள் சார்ந்தவர்களினதும் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன. (ற-313)

### கலந்துரையாடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ். சின்மயா மன்றத்தின் செயற்பாடுகளும் அதன் பயன்பாடுகளும் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு இன்று புதன்கிழமை உயரப்புலம் பாரதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கொக்குவில் மேற்கு சின்மயா மகளிர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். சின்மயா நிறுவனத்தைச் சேர்ந்த பிரம்மசாரி ஜாக்கிரத் சைத்தன்ய கருத்துரையை வழங்கவுள்ளார்.

(ற-313)

### பல்கலையில் நாடக விழா

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுக் கழகத்தின் நாடக விழா எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் கலாநிதி த. கலாமணி நெறியாள்கை செய்த அல்வாய் மனோகரா நாடக சபையினரின் சத்தியவான் சாவித்திரி, யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகத்தின் பூதத்தம்பி ஆகிய இசை நாடகங்கள் இடம்பெறவுள்ளன.

(ற)

# பயங்கரப் போர்க்குற்றக் காட்சிகள் விரைவில் சனல் - 4 தொலைக்காட்சி அதிரடி அறிவிப்பு

இதுவரை வெளியுலகத்துக்குத் தெரியவராத பயங்கரமான போர்க்குற்றக்காட்சிகளை ஒளிபரப்ப சனல் -04 தொலைக்காட்சி சேவை தீர்மானித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் நிபுணர் அறிக்கை வெளிவந்த கையுடன் சனல்-04 தொலைக்காட்சி சேவை நிர்வாகம் அதிரடியாக இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவொன்று அமைக்கப்படுவதற்கும் இறுதிக்கட்ட போரின் போது எடுக்கப்பட்ட வீடியோக்களிலிருந்து சனல்-04 ஒளிபரப்பிய காட்சிகளும் உந்து சக்தியாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவ்வாறான நிலையில் இதுவரை வெளிவராத பயங்கரக் காட்சிகளைக் கொண்ட வீடியோக்களை ஒளிபரப்ப சனல்- 04 தயாராகி வருவதாக அறிய முடிகின்றது. அண்மையில் கூட இலங்கையிலிருந்து வெளியேறிய ஊடகவியலாளர் ஒருவரின் வழிகாட்டலில் யுத்தக் குற்றங்கள் அடங்கிய வீடியோக்களை சனல் -04 பெற்றுக் கொண்டிருந்தது.

அவ்வாறான நிலையில் சனல்-04 ஒளிபரப்பவுள்ள புதிய ஒளிப்படக் காட்சிகள் எவ்வகையான அதிர்வலைகளை ஏற்படுத்தும் என்பது குறித்து எதிர்வுகூற முடியாதுள்ளது. ஆயினும் வழமை போன்று அவற்றையும் சோடிக்கப்பட்ட காட்சிகள் என்று இலங்கை அரசாங்கம் மறுத்துரைக்கக் கூடும்.

(தமிழ்வின்)(ஒ-10)

# இலங்கையை அம்பலப்படுத்துவோம் நாடு கடந்த தமிழீழ அரசு அறிவிப்பு

நாளை மறுதினம் 29 ஆம் திகதி முதல் மே 2 ஆம் திகதி வரை பிரான்ஸின் நொர்மொண்டி பிராந்தியத்தின் ஆர் ஜொன்தான் நகர நிகழ்வொன்றில் சிறப்பு அதிதியாக பங்கெடுக்க இருக்கின்ற இலங்கை அரச பிரதிநிதிகளுக்கு எதிரான போராட்ட முன்னெடுப்புகள் சூடுபிடித்துள்ளன.

இவ்வாறு நாடுகடந்த தமிழீழ அரசின் உள்துறை அமைச்சகப் பிரான்ஸ் செயலகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசின் வருகையை முடக்கவும் - சிங்கள பேரினவாத முகத்தை அம்பலப்படுத்தவும் இருபதுக்கும் மேற்பட்ட பிரான்ஸ் அமைப்புக்கள் அமைப்பு இணைந்து பெரியளவிலான அமைதிவழி எதிர்ப்பு போராட்டங்களுக்கு ஏற்பாடு செய்து வருகின்றது.

இந்த முன்னேற்பாடுகள் குறித்து நாடுகடந்த தமிழீழ அரசின் உள்துறை அமைச்சசு பிரான்ஸ் செயலகம் ஊடக அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

(தமிழ்வின்)(ஒ-10)

## இணையச் செய்திகள்

## ரணிலை சந்திக்க மஹிந்த ஆவல்

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் ஆலோசனை நடத்த வருமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளுக்கு தற்போது சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பு திரும்பவுள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க மகிந்த ராஜபக்ஷ விருப்பம் கொண்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலகத்தில் இருந்தே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலான கூட்டறிக்கை ஒன்றை வெளியிட ஜனாதிபதி ஆர்வம் கொண்டிருப்பதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (பதிவு)

# வெளிநாடுகளில் உள்ள புலிகளின் சொத்துக்கள் தமிழ் மக்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்

**ஐ.நா. அறிக்கையில் பரிந்துரை**

புலம்பெயர்ந்த தமிழர்கள் தொடர்பான தனது பரிந்துரையை தனது அறிக்கையில் மிகத் தெளிவாக வழங்கியுள்ள ஐக்கிய நாடுகள் சபை அதில் சில பரிந்துரைகளையும் செய்துள்ளது.

இது தொடர்பான விடயம் யுத்தக்குற்ற அறிக்கையின் பக்கம் 132 இல் இடம்பெற்றுள்ள பரிந்துரை இல.417இல் இருந்து பரிந்துரை 420 வரையே இடம்பெற்றுள்ளது.

புலம்பெயர்ந்த தமிழர் சமூகமே விடுதலைப் புலிகளுக்கு மனவலிமையும் நிதி ஆயுத வலிமையையும் பல தசாபத்தங்களாக வழங்கி வந்தது என்றும் இதனால் புலம்பெயர்ந்த சமூகத்திடையே இந்த இறுதிப் போரைப் பற்றிய ஒரு மன வலி இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளதோடு, இறுதிப் போரின் பேரவலத்தின் பின்னைய நாள்களில் புலம்பெயர்ந்த தேசங்களில் புலிகள் தனிப்பட்ட வியாபாரங்கள், ஆலய வருமானங்கள் போன்றவற்றின் மூலம் தொடர்ந்து நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வருவதாகவும் இவற்றை மேற்குலக நாடுகள் அவதானத்தில் எடுத்து, மேற்கு நாடுகளிலுள்ள புலிகளின் சொத்துக்கள், வருமானங்கள் போன்றவற்றை போரினால் பாதிக்கப்பட்ட தாயகத் தமிழர்களுக்கு பயன்படும் வகையில் போய்ச்சேர ஆவன செய்ய வேண்டும் என்று அந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

புலம்பெயர்ந்த தமிழர் சமூகத்தின் அங்கத்தினர்கள் தாங்கள் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்த் தேசியத்துக்கும் வழங்கிய நிபந்தனையற்ற ஆதரவால் இலங்கையின் இரு இனங்களிடையேயும் விரிசலை பலப்படுத்த உதவியதாகவும் இது மறுபுறமாக சிங்களத் தேசியவாதத்தை வளர்க்க உதவிய தாகவும் ஒரு கருத்தையும் தெரிவித்துள்ளது.

அதேபோன்று புலம்பெயர்ந்த சமூகத்தின் பெரும்பான்மையான பகுதி சமாதானம் ஏற்படுவதற்குத் தடையாக இருக்கிறது என்றும், போரின் இறுதிப் பகுதியில் இடம்பெற்ற புலிகளின் வன்முறைகள் குறித்து இந்தச் சமூகம் அக்கறையின்மையாக இருந்தது என்றும் தெரிவித்துள்ளது. (தமிழ்வின்)

## கொத்துக்குண்டு பாவனை குறித்து விசாரணை அவசியம்

கொத்துக்குண்டுகளையும், வெண் பொஸ்பரஸ் குண்டுகளையும் பாவித்தமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று ஐ.நா. நிபுணர் குழு கேட்டுள்ளது.

இறுதிப்போரின்போது - பாரிய குண்டுவெடிப்பைத் தொடர்ந்து சிறிய குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றதாகப் பலர் தெரிவித்துள்ளனர்.

இது கொத்துக்குண்டுகளின் வெடிப்பாக இருக்கலாம் என்று கருதப்பட்டாலும் - அது தொடர்பில் நிச்சயிக்கப்பட முடியாதிருப்பதாகவும் பாராதூரமான இது விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டுமென்றும் நிபுணர்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பு ஆங்கில ஏடு ஒன்று வெளியிட்ட ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது

# கோத்தபாய கைது செய்யப்படுவாரா?

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவில் வைத்துக் கைது செய்யப்படும் நிலையை எதிர்கொண்டுள்ளதாக நம்பகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த சனிக்கிழமை மிகவும் இரகசியமான முறையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

தற்போது அவர் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் தங்கியிருப்பதாக தனிப்பட்ட தகவல் வட்டாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அமெரிக்காவில் தங்கியிருக்கும் காலத்தில் ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை குறித்து அவர் முக்கியமான அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. அதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபட்டிருப்பதை இலங்கைத் தூதரக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் அவரது புதல்வனின் திருமண விடயங்களைக் கவனிக்கும் நோக்கிலேயே அவர் அமெரிக்காவுக்கு சென்றுள்ளதாகவும், அதற்கு மேலதிகமாகவே உத்தியோகபூர்வ சந்திப்புக்களை மேற்கொள்ள முயற்சிகளை முன்னெடுத்துள்ளதாகவும் தூதரக அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கையின் மூலம் போர்க்குற்றங்களை இழைத்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவை அமெரிக்காவில் வைத்துக் கைது செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாகவும் நம்பகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க குடியுரிமை பெற்றவர் என்ற ரீதியில் அவரை விசாரிப்பதற்கான உரிமை அமெரிக்க நீதித்துறைக்கு உண்டு என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

## பஸ் ஊழியர்களின் ஒழுக்கத்தை அதிகரிக்க நடவடிக்கை

பஸ் ஊழியர்களின் ஒழுக்கத்தை அதிகரிக்கும் முகமாக விசேட அடையாள அட்டை வழங்கப்படவுள்ளதுடன் புதிய சட்டமும் அமுல்படுத்தப்படவுள்ளதாக தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பி.ரத்நாயக தெரிவித்தார்.

பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் ஒழுக்கமின்மையின் விளைவாகவே அதிக விபத்துக்கள் இடம்பெறுவதுடன் பொது மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும்அவர் குறிப்பிட்டார். (தமிழ்மிரர்)

# ஈ.பி.டியியால் அரச ஊழியரானோர் அனைவரும் மேதினக் கூட்டத்துக்கு

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் ஈ.பி.டி.பியின் ஊடாக அரசாங்க உத்தியோகங்களைப் பெற்றவர்கள் அனைவரும் எதிர்வரும் மே முதலாம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் கட்டாயமாகக் கலந்துகொள்ள வேண்டும் என்று ஈ.பி.டிபியினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் மே முதலாம் திகதி அரசினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுக்கூட்டம் ஒன்றுக்கே 100 பஸ்களில் ஆள்களை அழைத்துச் செல்வதற்கு ஈ.பி.டி.பியினர் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாகத் தமது சிபார்சின் பேரில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ். சுகாதார திணைக்களம், யாழ். பல்கலைக்கழகம், வடபிராந்திய போக்குவரத்து சபை, யாழ். மாவட்ட செயலகம் ஆகிய இடங்களில் நியமனம் பெற்றவர்களை நேற்று தமது அலுவலகத்துக்கு அழைத்த ஈ.பி.டி.பியினர் மேற்படி பொதுக் கூட்டத்துக்கு அனைவரும் வரவேண்டும் என அறியுறுத்தி உள்ளனர். (தமிழ்வின்)

# கொழும்பில் மே தினப் பேரணியன்று இயற்கை சீற்றம் கொள்ளுமா?

முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றுவிட்டு, தான் போரில் வெற்றி பெற்றதாகக் கூறிய இலங்கை, அதற்கான முதலாம் ஆண்டு வெற்றி விழாவைக் கொண்டாட முற்பட்ட வேளை காலநிலை கைகூடவில்லை. இடியுடன் பெய்த கடும் மழையால் அக்கொண்டாட்ட நிகழ்வுகள் பிற்போடப்பட்டது அறிந்ததே. கடந்த சுதந்திரதின நிகழ்விலும் இவ்வாறானதொரு கடும் காலநிலையால், இராணுவம் காட்ட இருந்த சில சாகசங்கள் தடங்கலுக்கு உள்ளாகி விழா சோபை இழந்தது.

இதே போன்ற நிலையே மஹிந்தாவின் பதவிப்பிரமாணத்தின் போதும் நிகழ்ந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கை வெளியாகியுள்ள நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக மே தினத்தில் நடக்கும் வழமையான ஊர்வலத்தை இம் முறை பன்மடங்காகத் திரட்டி, அதனை ஐ.நாவுக்கான எதிர்ப்பு ஊர்வலமாக மாற்றிக்காட்ட ஜனாதிபதி முற்பட்டுளார். ஆனால் இலங்கையில் மேலும் சில நாள்களுக்கு கடும் மழை பெய்யும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இதனால் நடக்கவிருக்கும் மே தின ஊர்வலத்திலும் மண் விழும் சாத்தியம் உள்ளதாக தற்போது சிங்கள அரசியல்வாதிகள் அஞ்சுகின்றனர். தமிழர்களுக்கு எதிராக சிங்களம் நிகழ்ச்சிகளைக் கொண்டாட முனைகிறதோ, அவ்வப்போது எல்லாம் காலநிலை தனது வேலையைக் காட்டிவிடுகிறது.

(அதிர்வு)(ஒ-10)

# தமிழ்க் கைதிகள் தடுத்து வைப்பு சட்டவிரோதம் அதனாலே பட்டியல் வெளியிட அரசு தயக்கம்

## விக்கிரமபாகு கருணாரட்ண குற்றஞ்சாட்டுகிறார்

கொழும்பு, ஏப்.27

தமிழ் அரசியல் கைதிகளை அரசு சட்டவிரோதமாகத் தடுத்து வைத்துள்ளமையாலேயே அவர்களின் பெயர் விவரங்களை வெளியிடத் தயக்கம் காட்டி வருகின்றது.

- இப்படி புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண குற்றம் சாட்டுகின்றார்.

இது தொடர்பாக அவர் உதயனுக்கு கூறியவை வருமாறு:-

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் புனர்வாழ்வு என்ற பெயரில் கட்டம் கட்டமாக விடுதலை செய்யப்படுகின்றனர். இதுவும் அரசின் தந்திரமாகும்.

ஏனெனில், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்களை வெளியிட்டால் சட்டவிரோதமான முறையில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது சர்வதேசத்துக்குத் தெரியவரும். அதன் காரணமாகவே அரசு வெளியிடத் தயங்குகின்றது.

அதுமட்டுமன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்பட்டால் சர்வதேசத்துக்கு அவர்கள் உண்மைகளைக் கூறிவிடுவர். இதனால் சர்வதேச அழுத்தமும் அதிகரிக்கும் என்ற பயமும் அரசுக்கு உள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்களை வெளியிடப்போகின்றோம் என்று அரசு பொய்ப் பிரசாரத்தையே மேற்கொண்டு வருகின்றது.- என்றார். (ஒ-சி)

# குடத்தனைப் பெண்ணுக்கு கழுத்தில் வெட்டு

நெல்லியடி,ஏப்.27

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியிலிருந்து குடும்பப் பெண்ணொருவர் கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் நேற்று மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.இராஜேஸ்வரி (வயது-53) என்பவரே காயமடைந்தவராவார்.

குடும்பத்தகராறு காரணமாகவே இவர் தாக்கப்பட்டு காயமுற்றார் எனவும் குறித்த பெண்ணின் கணவர் தலைமறைவாகியுள்ளார் எனவும் அவரைத் தாம் தேடிவருவதாகவும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-319-323)

# ஐ.நா. அறிக்கை குறித்து ஆராய்வதற்கு தமிழ்க் கட்சிகள் குழு அமைக்கவேண்டும்

## மனோகணேசன் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 27

ஐ.நா. செயலாளர் நாயகம் தமக்கு ஆலோசனை வழங்க நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து ஆராய்ந்து இலங்கை அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் தாமதமின்றி பொது நிலைப்பாட்டை அறிவிப்பதற்காக அனைத்து தமிழ்க் கட்சிக்குழு அமைக்கப்படவேண்டும். இதையே சர்வதேச சமூகமும், உலக மனித உரிமை நிறுவனங்களும் எதிர்பார்க்கின்றன.

- இவ்வாறு ஜ.ம.மு. தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்த கருத்து வருமாறு:-

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தின் இறுதிக்கட்டம் தொடர்பில் ஆராய்ந்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

போரின் இறுதிக்கட்டம் தொடர்பிலான ஆய்வு எனக் கூறப்பட்டாலும் கூட இந்த நிபுணர் குழுவினர் இலங்கையில் போர் நடைபெற்றதற்கான அரசியல் - இராணுவ பின்னணியையும் ஆராய்ந்துள்ளனர்.

போரில் ஈடுபட்ட இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் விமர்சனம் செய்துள்ள அதேவேளையில், போர் நடைபெற்ற காலகட்டத்தில் துன்பத்துக்கு உள்ளாகிய அப்பாவி மக்கள் தொடர்பில் ஐ.நா. சபை செயற்பட்டவிதம் தொடர்பிலும் கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை அரசுக்கும், ஐ.நா. சபைக்கும் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் உள்ளிட்ட தமிழர் தரப்பு தொடர்பிலும் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.

உலகத்தின் தீவிரப்பார்வை இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களை நோக்கி திரும்பியுள்ள இவ்வேளையில், இலங்கையின் அனைத்து தமிழ்க் கட்சிகளையும் சார்ந்த அனைத்து கட்சிக்குழு அமைக்கப்பட்டு, ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக்குழுவின் அறிக்கை தொடர்பில், தமிழர்களின் பொது நிலைப்பாடு தாமதமின்றி அறிவிக்கப்படவேண்டும்.

# வடமராட்சியின் 3 கோட்டங்களின் தமிழ்த் தினப் போட்டிகள் ஆரம்பம்

பருத்தித்துறை, ஏப்.27

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள பருத்தித்துறை கரவெட்டி, மருதங்கேணி கோட்டங்களுக்கான தமிழ் மொழித் தினப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகி தொடர்ந்து 30ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறும்.

மருதங்கேணி கோட்டத்துக்கான போட்டி நேற்று மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்றது. மருதங்கேணி உப கோட்டத்துக்கான போட்டியும் குடத்தனை அ.த.க. பாடசாலையில் இடம்பெற்றது.

கரவெட்டி கோட்டத்துக்கான போட்டி இன்று புதன்கிழமையும் நாளை வியாழக் கிழமையும் பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை கோட்டத்துக்கான போட்டி நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கும், 30 ஆம் திகதி சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (ஒ-190)

# கைதிகளைப் பார்வையிட வந்தோரை தாக்கினர் சிறைக் காவலர்கள்

## வவுனியாவில் நேற்று முன்தினம் சம்பவம்

அனுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து வவுனியா நீதிமன்றத்துக்கு வழக்குத் தவணைக்காக அழைத்து வரப்பட்ட கைதிகளைப் பார்வையிட வந்த உறவினர்களை சிறைச்சாலைக் காவலர்கள் தாக்கினார்கள் என்று கூறப்படும் சம்பவத்தில் இரண்டுபேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

அனுராதபுரம் சிறைச்சாலையில் இருக்கும் தமிழ், சிங்களக் கைதிகளை வவுனியா நீதிமன்றுக்குக் கொண்டு வரும்போது மட்டுமே உறவினர்கள் அவர்களைப் பார்க்க முடியும்.

இது போன்றே நேற்று முன்தினம் உறவினர்கள் கைதிகளைப் பார்க்க வந்த போதே சிறைச்சாலைக் காவலர்கள் மூன்று பேர் இவர்கள் மீது துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தியதுடன் கடுமையாகத் தாக்கியும் உள்ளனர்.

சிறைச்சாலை அதிகாரிகளால் தாக்கப்பட்டவர்களில் ஒருவர் இராணுவத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-10)

# அறிக்கை குறித்து ஆராய ஐ.தே.க. குழு நியமனம்

ஐ. நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனின் நிபுணர்குழுவின் அறிக்கை தொடர்பாக முறையாகவும், ஆழமாகவும் ஆராய்ந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு அறிக்கை வழங்க சிரேஷ்ட சிவில் மற்றும் நிர்வாக அதிகாரி பிரெட்மன் வீரக்கோன் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையைக் கவனத்தில் கொண்டபின்னர் பான் கீ- மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பான நிலைப்பாடு, மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து கட்சி தீர் மானிக்கும் என்று ஐக்கியதேசியக்கட்சி வெளியிட்டுள்ள ஊடகஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

# ஆன்மிக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப்.27

தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு இன்று புதன்கிழமை மு.ப. 11.30 மணிக்கு 'மஹோற்சவங்களும் அதன் சிறப்பும்' எனும் தலைப்பில் ஆன்மிகசொற்பொழிவை சின்மயா மிஷன் நிறுவனத்தைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஜாக்கிய சைதன்ய நிகழ்த்தவுள்ளார்.

ஆர்க் என்ரபிறைசஸ்

தானியங்களை உடைத்து, தீட்டி, அரைத்து, நொறுக்கி, பிழியும் இயந்திரங்கள் நம்பமுடியாத விலையில்.
2 வருட உத்தரவாதம்.
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பட்டதாரிகள் ஆள்சேர்ப்பு
போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்கு.
* ஆரம்பம் :- நாளை வியாழன் பி.ப 02 மணி
* வியாழன் 02-06 மணி
* வெள்ளி 09-04 மணி
இட நெருக்கடியை தவிர்க்கவும் கையேட்டை பெற்றுக்கொள்ளவும், முன்கூட்டியே பதிவு செய்யவும்.
அம்பாள் கல்வி நிலையம் தொ.பே:- 0770742649
வைரவ புளியங்குளம், வவுனியா.

விற்பனைக்கு
HONDA CB 125 JAPAN மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு.
1st Owner, VI-XXXX,2010 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.
தொடர்பு 0712214114
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Personal Class (கணினி)
* உங்கள் வீடுகளில் வந்து பின்வரும் கற்கை நெறிகள் கற்பிக்கப்படும்.
* MS Office, DTP, Internet and E-mail, Web Design, Graphic Design.
* பயிற்சியின் பின் சான்றிதழ் வழங்கப்படும்.
* குறிப்பு - கணினி இல்லாதவர்களுக்கு எனது Lap Top மூலமாகப் பயிற்சியளிக்கப்படும்.
ஆசிரியர் - KRC, T.P-0779672038 நல்லூர்.

அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
முதன்முறையாக
எந்த முதலீடும் இல்லாமல் மாதம் ரூபா 50,000/= க்கு மேல் சம்பாதிக்க ஆசையா.....?? !!!!

யாழ் குடாநாட்டு இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் இணையத்தளம் மூலம் மாதம் ரூபா 50,000/= மேல் வீட்டிலிருந்தபடியே சம்பாதிப்பதற்கு ஓர் இலகு வழிகாட்டல் வகுப்பு
இல்லத்தரசிகளே நீங்களும் உங்கள் குடும்பத்தை முன்னேற்ற நினைக்கிறீர்களா????ஆனால் என்ன வேலை செய்வது. என்று தெரியவில்லை???? முதலீடு இல்லை மற்றும் குழந்தைகளை விட்டு வெளியே சென்று வேலை செய்ய யோசிக்கிறீர்களா? கவலையை விடுங்கள் உங்கள் வீட்டிலிருந்தபடியே மாதம் ரூபா 50,000/=மேல் சம்பாதித்து கொள்ளுங்கள்
உங்களிடம் இருக்க வேண்டியது ஓர் கணணியும் இணைய வசதியும் மட்டுமே.
குறிப்பு : கணணி பற்றி அறிவில்லாதவர்களும் பயப்படாமல் எம்முடன் இணைந்து கொள்ளலாம்.
வகுப்பு நடை பெறும் நாள் : 30ந் திகதி சனிக்கிழமை காலை 11.00 மணி
இடம்: சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபம்
பயிற்சி கட்டணம்: 3250/= மட்டுமே
பதிவுக்கட்டணம் எதுவுமில்லை
மேலதிக விபரங்களுக்கு 0779235804,0215675916
கீழ் பட்டவர்களுக்கு

மலிவுவிற்பனை JAYAM ELECTRONICS
Tv கள் (Sony, Panasonic,TCL) (14", 21", 24") . DVD Player (L.S), Amplifier (Pioneer), Washing Machine, Refrigerator, Woofer கள் மற்றும் சகலவிதமான இலத்திரனியல் பொருள்களும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நம்பிக்கையான உத்தரவாதம் வழங்கப்படும்.

Jayam Electronics, 339, K.K.S.Road, Jaffna. (மனோகர சந்தி அருகில்) T.P: 0774041910 / Ram CD World, 220, Stanly Road, Jaffna.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.